பெண்மணிகளுக்கும்
சிறுவர் சிறுமியருக்கும்
ஏற்ற
இறக்குமதி செய்யப்பட்ட
நவீன
புடவை தினுசுகளுக்கும்
றெடிமேட்
ஆடைகளுக்கும்
புகழ் பெற்றவர்கள்
இளவரசி
S12, நவீன சந்தை,
சுன்னாகம்.



Registered as a Newspaper

# சஞ்சீவி

அறிவு-ஆக்கம்-அபிவிருத்தி

விலை ரூபா 2-50



குறுகிய காலத்தில்
மக்களின்
நன்மதிப்பையும்
ஆதரவையும் பெற்ற
ஒரே ஜவுளி நிறுவனம்
இளவரசி
S12, நவீன சந்தை,
சுன்னாகம்.



மலர்:- 2 யாழ்ப்பாணம் பிரபவ ஆண்டு ஆவணி மீ 20 உ சனிக்கிழமை ஹிஜ்ரி 1407 முஹறம் பிறை 10 (05-09-1987) SANJEAVY - REGENERATIVE TAMIL WEEKLY சிகரம்:-35


★தமிழர் தாயகத்தில் மண்பறிப்பு தீவிரம் ★தமிழரின் வீடுகள், வயல்கள் அபகரிப்பு
★ தமிழ் அகதிகள் போக்கிடமின்றிப் போராட்டம்

# முல்லைத்தீவுக் கச்சேரி முன் மறியல்

# ஏனைய பகுதிகளுக்கும் விஸ்தரிக்கும்

யாழ்ப்பாணம், செப்டெம்பர் 5

முல்லைத்தீவு மாவட்டத்தில் தமிழரின் மண்ணைப் பறிக்கும் நாச வேலை உச்சக்கட்டத்தில் முழு மும்முரமாக நடக்கிறது. தமிழரின் வீடுகள், வயல்கள் பெரும்பான்மையினரால் அபகரிக்கப்பட்டுள்ளன.

தமிழ் அகதிகள், போக்கிடம் இல்லாதவர்களாக, சிங்களக் குடியேற்றத்தை ஆட்சேபித்து முல்லைத்தீவுக் கச்சேரி முன்னால் நேற்று மறியல் போராட்டம் செய்தனர். அதன் விளைவாக முல்லைத்தீவுக் கச்சேரி முற்றாக ஸ்தம்பித்தது.

தமிழர்களின் மண்ணிலிருந்து சிங்களக் குடியேற்றக் காரர்கள் வெளியேற்றப்படாவிட்டால், கச்சேரிகள் முன்னால் மறியல் போராட்டம் ஏனைய தமிழ் மாவட்டங்களுக்கும் விஸ்தரிக்கப்படும்.

கொக்குளாய், கொக்குத் தொடுவாய், கறுநாட்டுக்கேணி, முந்திரிகைக்குளம், நாயாறு, டொலர், கென்ட் பண்ணைகள் ஆகிய இடங்களில் இருந்து இடம் பெயர்ந்து முல்லைத் தீவைத் தஞ்சமடைந்த தமிழ் அகதிகளே இந்த மறியல் இயக்கத்தில் கலந்து கொண்டனர்.

காலை முதல் மாலை வரை நடத்தப்பட்ட மறியல் இயக்கத்தின் போது முல்லைத்தீவு அரச அதிபரிடம் மகஜர் ஒன்றும் கையளிக்கப்பட்டது.

''கொக்குளாய், கொக்குத் தொடுவாய், கறுநாட்டுக்கேணி, நாயாறு, முந்திரிகைக் குளம், டொலர், கென்ட்பாம் பகுதிகளில் உள்ள எங்களின் வயல் நிலங்கள் வீடுகளை சிங்களக் குடியேற்றக் காரர்கள் ஆக்கிரமித்து உள்ளனர். நாம் போய் குடியமரமுடியாத நிலை ஏற்பட்டுள்ளது'' இப்படி அந்த மகஜரில் கூறப்பட்டிருந்தது.

மகஜரைப் பெற்றுக் கொண்ட அரச அதிபர், சம்பந்தப்பட்ட கிராமங்களுக்குத் தான் சென்று பார்த்தபோது தனக்கு தெரியாமல் நடந்த குடியேற்றங்களைப் பார்த்து அதிர்ச்சி அடைந்ததா


(10ம் பக்கம் பார்க்க)


## திருமலையில் மீண்டும் இந்தியப்படை ரோந்து

திருகோணமலை, செப் 5

இடை நிறுத்தப்பட்டிருந்த இந்திய அமைதிப் படையினரின் ரோந்து நடவடிக்கைகள் 28ஆம் திகதி முதல் மீண்டும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

முக்கிய சந்திகளில் பொலீஸாருடன்சேர்ந்து இந்திய அமைதிப் படையினர் காவல் புரிவதுடன் இரவு வேளைகளில் ரோந்து நடவடிக்கைகளிலும் ஈடுபட்டு வருகின்றனர்.

திருகோணமலையில் இந்திய விமானப் படையினரும் வந்து இறங்கியுள்ளனர். (உ-150)

## தமிழர்கள் மீது மூதூரில் தாக்குதல்

திருகோணமலை, செப் 5

மூதூர் உதவி அரசாங்க அதிபர் கொல்லப்பட்டதை அடுத்து அங்கு பல தமிழர்கள் தாக்கப்பட்டனர். தமிழர்களின் வீடுகளும் தீக்கிரையாக்கப் பட்டன.

தமிழீழ விடுதலைப் புலிகள்இயக்கத்தின்அலுவலகமும்தாக்கப்பட்டதாம்.

இடையிடையேகாணப் பட்ட புலிக்கொடிகளும் கிழித்தெறியப் பட்டன.

மூதூரில் நிலவும் பதற்றத்தைத் தணிக்க இந்திய அமைதிப் படையினரும் இலங்கைப் பொலீஸாரும் அங்கு விரைந்தனர்.

திருகோணமலை நகரில் முஸ்லிம்களுக்குச் சொந்தமான வர்த்தக நிலையங்கள் மூடப்பட்டன.

மூதூர் - திருகோணமலை இயந்திரப் படகுச் சேவை நிறுத்தப்பட்டது.

மூதூரில் ஊரடங்குச் சட்டம் அமுல் நடத்தப் படுகின்றது

இதனிடையில் உதவி அரச அதிபர் ஹபீபு முகம்மதுவின் சடலம் திருமலைக்கு முதலில் கொண்டு வரப்பட்டது.

பின்னர் அவரின் சொந்த ஊரான கெக்கிராவைக் குஅனுப்பிவைக்கப்பட்டது. (உ-எ-150)

## மக்கள் விடுதலைப் படை கலைக்கப்பட்டது!

சென்னை, செப் 5

ஈ. பி. ஆர். எல். எவ். இயக்கத்தின் மக்கள் விடுதலைப் படை கலைக்கப் பட்டுவிட்டது.

இத்தகவலை இயக்கப் பிரமுகர் எல். கேதீஸ்வரன் சென்னையில் செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

ஈ. பி. ஆர். எல். எவ். இயக்கப் போராளிகள் தமது ஆயுதங்கள் அனைத்தையும் கடந்த புதன்கிழமை தலைமன்னாரில் வைத்து ஒப்படைத்து விட்டனர்.

அதைத் தொடர்ந்தே இயக்கத்தின் இராணு


(10ஆம் பக்கம் பார்க்க)


## இடைக்கால நிர்வாகத்தில் ஈரோஸ் பங்குபற்ற மாட்டாது

### பாலகுமார் அறிக்கை

இந்திய-இலங்கை ஒப்பந்தத்தின் கீழ் ஸ்தாபிக்கப்படும் இடைக்கால நிர்வாக அமைப்பு உட்பட எந்த அமைப்புகளிலும், தேர்தல்களிலும் ஈரோஸ் இயக்கம் பங்கு பற்றாது.

ஈரோஸ் இயக்கத்தின் பொது ஆணைக்குழுவின் சார்பில் பாலகுமார் நேற்று விடுத்த அறிக்கையில் இப்படித் தெரிவிக்கப் பட்டிருக்கிறது.

இடைக்கால நிர்வாக அமைப்புத் தொடர்பாக ஈழப்போராட்ட அமைப்புகளிடையே போட்டா போட்டி நிலவுவதுகுறித்தும் அந்த அறிக்கையில் கவலை தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

மேற்படி அறிக்கை நாளைய உதயனில் விவரமாக வெளிவரும். (உ)

### சுபநேரம்

5-9-1987

சுபநேரம்:
3.04 முதல் 4 34வரை
ராகுகாலம்:-
9.04முதல்- 10 34வரை
இவை பகலுக்கும் இரவுக்கும் பொருந்தும்
ஆவணி ஓணம்
சனிப் பிரதோஷ விரதம்

### சிறை!

தனி விமானம் ஒன்றில சோவியத் ஆகாயப் பிராந்தியத்துக்குள் அத்துமீறிச் சென்று கிரெம்ளின் மாளிகைக்கு அருகில் இறங்கிய மேற்கு ஜேர்மன் இளைஞனுக்கு மாஸ்கோ உயர் நீதிமன் 4 ஆண்டுகள் சிறைத் தண்டனை விதித்தது

### ஜனாதிபதியுடன் சந்திப்பு

ஒப்பந்தம் கைச்சாத்திட்டபின்னர் முதல் தடவையாக கிழக்கு மாகாண முஸ்லிம் எம்பிக்களைப் பேச்சுக்களுக்கு ஜனாதிபதி ஜெயவர்த்தன அழைத்திருக்கின்றார்.

இச்சந்திப்பு எதிர்வரும் வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு ஜனாதிபதி செயலகத்தில் நடைபெறும். (உ-எ)

### வெங்கட்-டிக்ஸிற் சந்திப்பு

இலங்கைக்கான இந்தியத் தூதர் ஜே. என், டிக்ஸிற் நேற்று புதுடில்லியில் ஜனாதிபதி வெங்கட்ராமனைச் சந்தித்து அரை மணித்தியாலம் வரை பேச்சுக்கள் நடத்தினார்.

இந்திய-இலங்கை ஒப்பந்தம் அமுல் நடத்தப் படுவதில் காணப்படும் முன்னேற்றங்கள் பற்றி திரு. டிக்ஸிற் ஜனாதிபதியிடம் விவரித்துச் சொன்னார். (உ-எ)

## டில்லிப்பேச்சு வெற்றி?

புதுடில்லி, செப். 5

மாகாண சபைகளுக்கு வழங்கப்படும் அதிகாரங்கள் பற்றிய பேச்சுக்கள் வெற்றிகரமாக முடிந்தன என்று அறிவிக்கப் படுகின்றது.

இலங்கை, இந்திய அரசுகளின் அதிகாரிகளுக்கு இடையே இப்பேச்சுக்கள் நடந்த புதன்கிழமை முதல் நேற்றுவரை புதுடில்லியில் இடம்பெற்றன.

மூன்றும் கட்டப்பேச்சுக்கள் மீண்டும் கொழும்பில் நடைபெறும்.

முதலமைச்சர், கவர்னர் ஆகியோருக்கு வழக்கப்படவேண்டிய அதிகாரங்கள், சட்டம்-ஒழுங்கு பராமரிப்பு, காணிக் குடியமர்த்தல் ஆகியன பற்றி புதுடில்லிப் பேச்சுக்களில் விரிவாக ஆராயப்பட்டன.

பின்னர் இந்தியத் தூதர் திரு. டிக்ஸித் பிரதமர் காந்தியைச் சந்தித்து, விவரங்களைத் தெரிவித்தார். (அ-எ)

## இடைக்கால அரசு: டில்லியில் ஆலோசனை

புதுடில்லி, செப். 5

வடக்கு,கிழக்குமாநில சபையின் இடைக்கால நிர்வாகம் பற்றி இந்திய அரசு அதிகாரிகள் தமிழர் விடுதலைக் கூட்டணி, தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் ஆகியவற்றின் பிரதிநிதிகளுடன் நேற்றுப் புதுடில்லியில் பேச்சுக்கள் நடத்தினர்.

பேச்சுக்களில் சில முன்னேற்றங்கள் காணப்பட்டன என்று வெளியுறவு அமைச்சுப் பேச்சாளர் செய்தியாளர்களிடம் தெரிவித்தார். (அ-எ)



பாலகுமார்

### கண்ணி வெடி!

திருகோணமலை, செப் 5

கன்னியா வென்னீரூற்றுக்கு அருகில் இராணுவத்தினரால் புதைக்கப்பட்ட கண்ணிவெடி


[10ம் பக்கம் பார்க்க]


## கருத்துக் கலசம்

### இளைஞர் சக்தி

மனித பருவங்களில் இளமைப்பருவம் சேந்திரமானது. குழந்தைப் பருவத்திலும், மாணவப் பருவத்திலும் கண்ட வளர்ச்சியை எதிர்கால வாழ்க்கைக்கு ஆற்றுப் படுத்தும்பருவம் அதுவே.

தனிமனித வாழ்வில் இளமைப் பருவமே வசந்த காலம் தொழில், குடும்ப வாழ்க்கை என்பவற்றுக்கு அடியிடும் காலமாகவும் விளங்குகிறது. உடல் மலர்ச்சியும், உள வளர்ச்சியும் ஒன்றாக யௌவனமாவது அந்தப் பருவத்திலேயே ஆகும்.

ஒரு நாட்டின் செயற்பாட்டில், இயக்கத்தில், வளர்ச்சியில், அதன் வாழ்க்கையில் இளைஞர் சக்திக்குப் பெரிய பங்கு உண்டு.

ஆன்றோர்கள், பெரியோர்களின் பணியும் பங்கும் நாட்டு வளர்ச்சிக்குத்தேவையே. இருப்பினும், இளைஞர் சக்தி உரிய விதத்தில் பயன் படுத்தப்படாவிடில், அல்லது இளைஞர் சக்தி வேறு வழி திசை திருப்பப் படின் நாட்டு வாழ்க்கை ஆரோக்கியமானதாக இருக்காது. அரசியல் துறையில் மட்டுமின்றி சமூக பொருளாதாரத் துறைகளிலும் குழப்ப நிலைஉண்டாகும்.

இளைஞர் சக்தியை தக்கபடி பாவிக்கவும், கட்டுப்படுத்தி நல்வழிப்படுத்தவும் வேண்டிய அரசியல், சமூக, பொருளாதாரப் பின்னணிகள் அவசியம்.

இப்போது எல்லாம், பல நாடுகளிலும் இளைஞர்கள், அரசுகளுக்கு எதிராகக் கிளர்ச்சி செய்வதைக் காண்கின்றோம். இலங்கையும் அதற்கு விதிவிலக்கல்ல.

இளைஞர்களின் உணர்வுகள் மதிக்கப்படாமை, அவர்களின் ஆற்றலும் சக்தியும் உரியவாறு உபயோகிக்கப்படாமை, உரிய காலத்தில் அவர்களுக்கு தொழில் வாய்ப்புக் கிடைக்காமை. அவற்றின் விளைவாக ஏற்படும் விரக்தி நிலை என்பனவே இளைஞர் சக்தி வேறு திசைகளுக்குத் திருப்பப்படுவதற்குக் காரணம்.

சமூகத்திலும், அரசியலிலும், பொருளாதாரத் துறையிலும்அவர்களுக்கு உரிய பங்கு வழங்கப்பட்டால், அவர்களது சக்தி சரியான வழியில் நெறிமுறைப்படுத்தப்பட்டால் இளைஞர்களுக்கும் நல்லது; நாட்டுக்கும் நல்லது.

உரிய காலத்தில் இளைஞர்களுக்கு ஒரு தொழில் வாய்ப்பு வழங்கப்பட்டு விட்டால் அவர்களது புலனும், நாட்டமும் வேறு வேண்டாத வழி திரும்பாது.

உலக சனத் தொகை உயர்ந்துவரும் இக்காலத்தில், இளைஞர்கள் முப்பது வயதாகியும் ஒரு தொழில் தேடிக்கொள்ள முடியாத அவலநிலை வளர்மூக நாடுகளை வாட்டி வதைக்கிறது. இந்த நிலையை நீக்கினால் மட்டுமே இளைஞர் கிளர்ச்சிகளைத் தடுக்க முடியும்.

## வடக்கு, கிழக்கு அபிவிருத்திக்கு

# 1,500 கோடி ரூபா நிதி இந்தியா வழங்குகிறது

கொழும்பு, செப் 5

வடக்கு-கிழக்கு மாகாணங்களில் அபிவிருத்தித் திட்ட வேலைகளைச் செய்ய ஆயிரத்து ஐநூறு கோடி ரூபா உதவி வழங்க இந்தியா முன்வந்திருப்பதாகத் தெரிவிக்கப் படுகின்றது.

இலங்கை அரசுக்கு இதனை இந்திய அரசு வட்டாரங்கள் ஏற்கனவே தெரிவித்து விட்டன என்று கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன.

எதிர்வரும் திங்கள் புதுடில்லியில் இந்திய - இலங்கை கூட்டுப் பொருளாதார ஆணைக்குழு மீண்டும் கூடவிருக்கின்றதல்லவா!

அப்போது இலங்கை அரசுக்குழு, இந்திய உதவி தேவைப்படும் அபிவிருத்தித் திட்டங்கள் பற்றிய விவரங்களை சமர்ப்பிக்கும் என்று தெரியவருகின்றது.

★ மட்டக்களப்பு- அக்கரைப்பற்று ரயில்பாதை விஸ்தரிப்பு.

★ வடக்கு, கிழக்கு மாகாணங்களில் புதிய நெடுஞ்சாலைகள் அமைத்தல்.

★ புதிய விவசாய அபிவிருத்தித் திட்டங்கள், நீர்ப்பாசனத் திட்டங்களை மேற்கொள்ளுதல்

ஆகியன இலங்கை அரசு சமர்ப்பிக்க உள்ள போசனைகளில் விவரிக்கப்பட்டுள்ளன.

நிதி அமைச்சர் ரொனி டி மெல் தலைமையிலான ஒன்பது பேர் கொண்ட குழு நேற்றுப் புதுடில்லி பயணமானது. [உ-எ]

துப்பாக்கி, கிரனேட்டுகள் வெடித்தன :

## ஈ.என்.டி.எல்.எவ்-மக்கள் குருநகரில் மோதல்!

### இயக்கம் இந்தியப்படையுடன் சென்றது!

குருநகர், செப். 5

குருநகர் பழையபூங்கா வீதியில் தங்கியிருந்த ஈ.என்.டி.எல்.எவ்.உறுப்பினர்களுக்குப் பொது மக்களுக்கும் இடையில் ஏற்பட்ட கைகலப்பின் போது கிரனேட்டுகள் வெடிக்க வைக்கப்பட்டன. துப்பாக்கிப் பிரயோகமும் மேறகொள்ளப்பட்டது. நான்கு பொது மக்கள் காயமடைந்தனர்.

பொதுமக்களின் ஆட்சேபத்தையடுத்து மேற்படி வீட்டிலிருந்துநேற்று மாலை 5-30 மணிக்கு ஈ. என். டி. எல். எவ் உறுப்பினர்கள் வெளியேறுவார்கள் என முதலில் தெரிவிக்கப்பட்டதாம்

குறிப்பிட்ட நேரம் தாண்டியும் அவர்கள் வெளியேறுவதற்கான அறிகுறிகள் தென்படவில்லை என்றும்—

அவ்வேளை இரு ஈ.என்.டி எல் எவ். உறுப்பினர்கள் பொதுமக்களை நாடி வந்ததாகவும்—

அவர்களில் ஒருவரைப் பிடித்து வைத்திருந்த மக்கள், மற்றவர் வெளியேறியதும் அவரையும் பிடித்துத் தாக்கியதாகவும் தெரிவிக்கப்பட்டது

இதன்பின் இந்தக் குழுவினர் இருந்த வீட்டுக்குள் நுழைந்த பொதுமக்கள் ஜன்னல் கண்ணாடிகளை உடைத்து,அவர்களை வெளியேறுமாறு கோரினராம்.

இதன் பின்னர் மூன்று கிரனேட்டுகள் ஈ. என் டி.எல் எவ் உறுப்பினர்களால் அறைக்குள்ளேயே வெடிக்கவைக்கப் பட்டன என்றும்—

மேற்படி குழுவைச் சேர்ந்த இன்னொருவர் பொதுமக்கள் இருந்த பக்கத்தை நோக்கித் துப்பாக்கிப் பிரயோகம் செய்ததாகவும் தெரிய வருகிறது

பாதுகாப்பிற்கு நின்ற இந்திய இராணுவம்


(10ஆம் பக்கம் பார்க்க]


### 144 பேர் வந்தனர்

பூஸா முகாமில் இருந்து விடுதலை செய்யப்பட்ட 144 பேர் நேற்று காங்கேசன்துறை துறைமுகத்தில் வைத்து யாழ் செயலக அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்பட்டனர்

விடுவிக்கப்பட்டவர்களில் 84 பேர் மன்னாரைச் சேர்ந்தவர்கள் ஏனையோர் வவுனியா, நெடுந்தீவு, கிளிநொச்சி, பருத்தித்துறை, முல்லைத்தீவு, மாங்குளம், பரந்தன் ஆகிய இடங்களைச் சேர்ந்தவர்கள் (உ-7)


புதுமையும் எழிலும் பொலியும் பல்சுவை வார இதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

★★★★★★★★★★
★ சின்னஞ்சிறு ★
★ விளம்பரம் ★
★★★★★★★★★★

### விற்பனைக்கு

வலம்புரிச் சங்குகள் தேவர்கள் அமிர்தம் அடைந்தபோது பாற்கடலில் வெளிவந்த மகாலஷ்மி அஷ்டவசுக்கள் இவற்றுடன் வெளிவந்த சங்கு பூஜைக்கு மிகவேண்டிய சாதனமாகும். வலம்புரிச்சங்கை வீட்டில் வைத்து ஆராதிப்பதால் சர்வ செளபாக்கியங்களும் பெருகி சுபீட்சம் தாண்டவமாகும், பல அளவுகளில் உண்டு. எந்நேரமும் பார்வையிடலாம். உங்கள் தேவைக்கு T.உருத்திரகோடீஸ்வரன், கொல்லங்கலட்டி, தெல்லிப்பளை, (905)

புங்குடுதீவு 6ஆம் வட்டாரம் கொல்லன் தண்டுவன் நிலப்பரப்பு 2பிரிவு கல்வீடு, கிணறு, வான்பயிர் தென்னை, பனை, வேம்பு ஆகியவை விற்பனைக்கு விடப்படும். செர்க்கன் கரந்தலி பரப்பு 66 பிரித்துக் கொடுக்கப்படும். தொடர்பு; க. அம்பலவாணர், இல122/11, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம். (1594)

தர்மவாரப் படிவம் விற்பனைக்குண்டு. பாடசாலை மாணவர் தொடர்பு கொள்ளவும், நியூஸ் பிறிண்ட்தாளின் விலை சதம்15. வெள்ளைத்தாளின் விலை சதம் 20. செட்டியார் அச்சகம், 428, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். (1657)

### தேவை

பிரதான வீதிகளுக்கு சமீபமாக மிருசுவிலுக்கும் யாழ்ப்பாணத்திற்கும் இடையில் நல்ல தண்ணீருடன் கூடிய காணியும் வீடும் உடன் தேவை. விற்க விரும்புவோர் க. செ. சுவர்ணராஜ், நெல்லியடி, கரவெட்டி. உடன் கடித மூலம் தொடர்புகொள்ளவும். (1659)

சிங்கப்பூரில் தமிழ்க் குடும்பத்தில் இரண்டு வயதுப் பிள்ளையைப் பராமரிக்கக்கூடியதான நல்லொழுக்கமுள்ள பணிப்பெண் தேவை. படித்த-குழந்தைப் பராமரிப்பு, மொன்ரிசோறிக் கல்வியறிவு உள்ளவர் விரும்பத்தக்கது. நேரில் வரவும். ச. புவனசுந்தரம், பிரசித்த நொத்தாரிசு, வளாகலேன், திருநெல்வேலி. (1656)

### மணப்பந்தல்

யாழ் இந்து வேளாள செவ்வாய்க் குற்றமுள்ள 32 வயதான இலங்கையில் 12 ஆயிரம் ஊதியம் பெறும் மணமகனுக்கு பெண்தேவை. தொடர்பு ABCDE விவாகப் பொருத்துனர், 91/16, இந்து மகளிர் லேன், கந்தர்மடம். (1654)

யாழ் இந்து வேளாள B. Sc எஞ்சினியர் வயது 28 செவ் 7இல், கனடாவில் தொழில் புரியும் மணமகனுக்கு டாக்டர், எக்கவுண்டர் பெண் கனடாவில் தேவை. அனுப்புவதற்கு வசதியுள்ளோரும் தொடர்புகொள்ளவும். ABCDE விவாகப் பொருத்துனர், 91/16, இந்துமகளிர் லேன், கந்தர்மடம். (1600)

### அறிவித்தல்

(4. 9. 87) முதல் A.B.C.D.E விவாகப் பொருத்துனர் காரியாலயம், கந்தர்மடம், இல.1 குமாரசாமி வீதியில் 9 மணியிலிருந்து 2மணி வரைக்கும் இயங்கும். தொடர்புடையோர் தொடர்புகொள்ளலாம். (1660)

### சேவை

இலங்கை மின்சார சபை லங்கா சீமெந்து லிமிட்டெட், வெளிநாடுகள் ஆகியவற்றில் மின் அத்தியட்சரகாகவும் பொறியியலாளராகவும் 25 வருடங்களுக்குமேல் சேவைசெய்து அனுபவமுள்ளவரின், மேற்பார்வையில் சகல வயறிங் வேலைகளும், வயின்டிங் வேலைகளும் செய்யப்படும். ஆலோசனைகள் இலவசம். Omega-Manipay Road Jaffna. (904)

### வகுப்புகள்

Computer Programming (BASIC) முழுமையான பயிற்சி, றேடியோ, ரி.வி, றிப்பயறிங், வயறிங், வைண்டிங், Spokan English ஆரம்பம் 5.9.87 Able Technical Studies, கே.கே.எஸ் வீதி, சுன்னாகம், சேர்ச் லேன், சாவகச்சேரி, உடையார் லேன். இளவாலை.

---

பிலிப்பீன்ஸில் மற்றும் ஒரு கிளர்ச்சி முறியடிப்பு:

# மார்க்கோஸ் ஆதரவாளர்கள் ஒரு புறம்!

# கம்யூனிஸ்ட்டுகள் மறுபுறம்!!

## இடையில் சிக்கித் தவிக்கிறார் கொரஸோன் அக்கியூனோ

திருமதி கொரஸோன் அக்கியூனோவின் அரசாங்கத்தைக் கவிழ்ப்பதற்காக பிலிப்பீன்ஸில் மற்றும் ஒரு இராணுவக் கிளர்ச்சி நடத்தப்பட்டிருக்கிறது.

முன்னரைப் போன்று இந்தக் கிளர்ச்சியும் அக்கியூனோவுக்கு ஆதரவான அரசாங்கப் படைகளால் நசுக்கப்பட்டுவிட்டது.

ஆனால் ஏற்கனவே இடம்பெற்ற கிளர்ச்சிகளைப்போல் அல்லாமல் கடந்த வாரம் நடைபெற்றபுரட்சிஅக்கியூனோ அரசுக்குப் பெரும் சவாலாக அமைந்திருப்பதாக அவதானிகள் கருதுகின்றனர்.

இந்தக் கிளர்ச்சியின் போது 40 பேர் வரை கொல்லப்பட்டனர். 200க்கும் அதிக மானோர் காயமடைந்தனர். கிளர்ச்சித்தலைவரான இராணுவ கேர்ணல் ஒருவர் அரசாங்க விசுவாசப் படைகளிடம் சிக்காமல் தலைமறைவாகிவிட்டார்.

இரண்டாம் உலக மகாயுத்தத்தின் பின்னர் பிலிப்பீன்ஸில் இடம் பெற்ற பெரும் யுத்தக் களமாக இந்தக்கிளர்ச்சி வர்ணிசுகப்பட்டது.

**தேர்தலில்**

கடந்த ஆண்டு பெப்ரவரி மாதம்நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலை அடுத்து திருமதி கொரசோன்அக்கியூனோ பிலிப்பீன்ஸில் ஆட்சிப் பொறுப்பை ஏற்றார்.

தேர்தலில் அவர்வெற்றி பெற்றதாகக் கருதப் பட்டபோதிலும் பதவி துறக்க மறுத்த அப்போதைய ஜனாதிபதி பேர்ட்டினன்ட் மார்க்கோஸை மக்கள் ஆதரவுடனேயே அவர் விரட்ட முடிந்தது.

தேர்தலில் தாமே வென்றதாக பேர்டினன்ட் மார்க்கோஸும் திருமதி அக்கியூனோவும் உரிமை பாராட்டிய போது மார்க்கோஸின் அரசாங்கத்தில் பாதுகாப்பு அமைச்சராக இருந்த ஜுவான் பொன்ஸ் என்றைலும் ஆயுதப் படைகளின் பிரதமதளபதி பிடெல்ராமொஸும்அக்கியூனோவை ஆதரித்து மார்கோஸுக்கு எதிராகக் கிளர்ச்சியில் இறங்கினர்.

இராணுவப் புரட்சி மக்கள்புரட்சியாக உருவெடுக்கவே மார்க்கோஸ் பிலிப்பீன்ஸை விட்டு வெளியேறினர். மார்க்கோஸ் தற்போது ஹவாயில் அஞ்ஞாத வாசம் செய்துவருகிறார்.

மார்க்கோஸ் மக்களின் ஆதரவை இழந்தபோது அவரைக்கைவிட்டஅமெரிக்கா தற்போது ஹவாயில் வைத்து பராமரித்து வருகிறது.

ஏற்கனவே கம்பூச்சியாவில்லொன்நொல்லுக்கும் தென் வியட்நாமில் நூயன்வான் கியூவுக்கும் ஈரானில் மன்னர் சாவுக்கும் இதுவே நடந்தது.

ஆனால் மேற்கூறப்பட்ட தலைவர்கள் பதவியிலிருந்து தூக்கி வீசப்பட்டவுடன் விலாசம் இல்லாமல் போய்விட்டார்கள்.

இவர்களுடன் ஒப்பிடுகையில் மார்க்கோஸ் சிறிது விதிவிலக்காகவே காணப்படுகிறார்.

பிலிப்பீன்ஸ் ஆயுதப் படையினர் மத்தியில் இவருக்கு இன்னும் கணிசமான அளவு செல்வாக்கு இருந்து வருகிறது.

மக்கள் ஆதரவும் முற்றாக இல்லை என்று கூற முடியாது.

பிலிப்பீன்ஸுக்கு எந்நேரமும்வந்துஅக்கியூனோ எதிர்ப்புக் கிளர்ச்சிஒன்றுக்குத் தலைமை வகிக்கும் நிலையில் மார்க்கோஸ் இன்னும் இருந்து வருகிறார்.

செல்வாக்கு இழந்த மார்க்கோஸை பதவியில்வைத்துக் கொண்டு பிலிப்பீன்ஸ் கம்யூனிஸ்ட்டுக்களின் பிடிக்குள் சிக்குவதை விரும்பாத அமெரிக்கா வேறு வழி இன்றி அக்கியூனோ அரசுக்கு தனது முழு ஆதரவையும் வழங்கி வருகிறது.

**உலக உலா** — என்.பி.சீலன்

ஹவாயில் இருந்து தனது உத்தரவு இன்றி வெளியேறக் கூடாது என்பது மார்க்கோஸுக்கு அமெரிக்கா விதித்துள்ள நிபந்தனைகளில் ஒன்று–

பங்களாதேஷில் முஜிபுர் ரஹ்மானின் குடும்பம் கனிஷ்ட இராணுவ அதிகாரிகளின் மின்னல் வேகப் புரட்சியால் எப்படிப் பூண்டோடு அழிக்கப்பட்டதோ அதே போன்ற முயற்சியே பிலிப்பீன்ஸில்தற்போது மேற்கொள்ளப்பட்டதும் ஆகும்.

கிளர்ச்சிக் காரர்கள் ஜனாதிபதிமாளிகையைத் தாக்கி உள்ளனர், ஜனாதிபதி அக்கியூனோவின் ஒரே மகனைக் கொலை செய்ய முயன்றனர்.

**5ஆவது முயற்சி**

1986 பெப்ரவரி மாதம் திருமதிஅக்கியூனோ பதவி ஏற்ற பின்பு பிலிப்பீன்ஸில்இடம்பெற்ற ஐந்தாவது கிளர்ச்சி இது ஆகும்.

கடந்த 18 மாத காலத்தில் பிலிப்பீன்ஸில் இடம் பெற்ற ஏனைய நான்கு கிளர்ச்சிகள் வருமாறு:-

★ 1986 ஜூலை:- மார்க்கோஸ் ஆதரவாளர்களான சுமார் 400 இராணுவத்தினர் மணிலா ஹோட்டலைக் கைப்பற்றி முன்னாள் வெளிவிவகார அமைச்சர் ஆருரோ ரொலென்ரினோ தலைமையில்புரட்சி அரசை ஒன்றை அறிவித்தார்கள். நான்கு ஜெனரல்கள் இந்தப் புரட்சியில் சம்பந்தப்பட்டிருந்தனர். பின்னர் இவர்களுக்கு அக்கியூனோவால் மன்னிப்பு வழங்கப்பட்டது.

★ 1986 நவம்பர்:- பாதுகாப்பு அமைச்சர் ஜுவான்பொன்ஸ் என்றைல், ஜனாதிபதி அக்கியூனோவால் பதவி நீக்கம் செய்யப்பட்டார். முன்னாள் இராணுவத் தளபதி ராபேல் கிலெற்றோ அவரின் இடத்துக்கு பாதுகாப்பு அமைச்சராக நியமிக்கப்பட்டார். என்றைலுடன் நெருங்கிய தொடர்புடைய இராணுவ வீரர்கள் சிலர் புரட்சிஒன்றுக்குத் திட்டமிட்டிருந்தது கண்டு பிடிக்கப்பட்டதை அடுத்தே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டது.

★ 1987 பெப்ரவரி:- சுமார் 300 இராணுவத்தினர் மணிலாடெலிவிஷன் நிலையம் ஒன்றைக் கைப்பற்றினர்கள். அக்கியூனோவுக்கு ஆதரவான படையினரிடம் சரண் அடையும்வரை அதனை இரு தினங்கள் தமது கட்டுப்பாட்டில் வைத்திருந்தனர். ஹவாயிலிருந்து பிலிப்பீன்ஸ் வரும் மார்க்கோஸின் இரகசியத் திட்டம் ஒன்று தோல்வியில் முடிவடைந்தது.

★ 1987 ஏப்ரல்:- ''ஈஸ்டர் கிளர்ச்சி'' என்று வர்ணிக்கப்பட்ட இந்தச் சம்பவத்தின் போது இராணுவத்தில் உள்ள கனிஸ்ட உறுப்பினர்கள் சிலர் இராணுவத் தலைமையகம் ஒன்றைக் கைப்பற்றினர்கள் ஒரு கிளர்ச்சி இராணுவ வீரர் கொல்லப்பட்டதுடன் ஒரு சில மணி நேரத்துக்கு இந்தக் கிளர்ச்சியும் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப் பட்டது.

**இடது சாரிகள்**

கடந்த வாரம் கடைசியாக இடம் பெற்ற 5ஆவது கிளர்ச்சியை அடுத்து பிலிப்பீன்ஸின் ஒன்றரைலட்சம்பேரைக் கொண்ட ஆயுதப்படை குழம்பிய-நிலையில் இருப்பதாகச் செய்திகள் கூறுகின்றன.

பிலிப்பீன்ஸில் சட்ட பூர்வமாக இயங்கும் இடது சாரிகள் பெற்றோல் விலை உயர்வுக்கு எதிராக ஒரு வாரத்துக்கு முன் ஆரம்பித்த எதிர்ப்பியக்கம் கைவிடப்பட்டுள்ள போதிலும் தலை மறைவாக இயங்கி வரும் கம்யூனிஸ்ட்டுகள் திருமதி அக்கியூனோவுக்கு தொடர்ந்து பெரும் சவாலாகவே இருந்து வருகின்றனர்.

கடந்த 18 வருட காலமாக இயங்கி வரும் என்.டி.எப். என அழைக்கப்படும் தேசிய ஜனநாயக முன்னணி திருமதி அக்கியூனோவின் தாராளக் கொள்கையை தனக்குச் சாதகமாகப் பயன்படுத்தி தனது நடவடிக்கைகளைத் தீவிரப் படுத்தி வருகிறது.

ஏற்கனவே இந்த இயக்கத்தினால் வைக்கப்பட்ட

(9ஆம் பக்கம் பார்க்க)

---

# வாலி வதம் நியாயமா?

வாலியை வதம் செய்தது நியாயமா? அன்று தொடக்கம் இது பிரச்சினையாகவே இருந்து வருகிறது. இதில் சரி பிழை சொல்வதற்கு முன் இராமாயணத்தை விளங்கிக் கொள்ள வேண்டும்.

நாம் சரியாக பார்த்தால் இராமாயணம் இருதளங்களில் நிற்பது தெரியும். ஒன்று தெய்வீகம்: மற்றது மானிடம். இதனால்தான் தமிழகத்தில் '' வாலிவதை '' 'வாலி மோட்சம்' என்று இருவிதமாகப் பெரியவர்கள் பேசுவார்கள்.

தெய்வீகத்தை வைத்துப் பார்த்தால் வாலிவதையில் பிழையே இல்லை. இராமன், நாயகன். இராவணன் வில்லன். வாலி உபபாத்திரம். கம்பராமாயணத்தைமுழுமையாகப் படிக்காமல் வாலிவதையை மாத்திரம் ஒருவன் படிப்பானாயின் வாலி கதாநாயகன்; இராமன் வில்லன் என்ற முடிவுக்கே வருவான். இராமனுடைய கதாநாயகத் தன்மை வாலிவதைப் படலத்தில் மறைந்து போகிறது.

வாலியை மறைந்து நின்று கொன்றதால் அந்தப்படலத்தில் இராமனை மறைத்து விட்டான் கம்பன்.

வாலிவதைப்படலம் ஒரு குழப்பம் நிறைந்த படலம். சீதையைப் பிரிந்ததால் இராமன் குழம்பினான். முன்னுக்குப் பின் முரணாகப் பேசுகிறான். 'தேவியைப்பிரிந்த பின்னைத் திகைத்தனை போலும் செய்கை' என்று வாலியே ...

> **இவ்வாரம் யாழ் பல்கலைக்கழக கைலாசபதி கலை அரங்கில் அகளங்கனின் 'வாலி' நூல் வெளியீட்டுவிழா கலாநிதி. இ. பாலசுந்தரம் தலைமையில் நடைபெற்றது.**
>
> **அகில இலங்கை கம்பன் கழக அமைப்பாளர் திரு. இ. ஜெயராஜ் ஆற்றிய வெளியீட்டுரையின் தொகுப்பு இது.**

வாலி எல்லாருமே தேவலோகத்திலிருந்து பூலோகத்துக்கு வந்தவர்கள். வந்த நோக்கம் இராவணனை அழிப்பது. இராவணனை அழிப்பதற்காகப் பூமிக்கு வந்த வாலி, மாறாக அவனோடு நட்புப் பூணுகிறான். எனவேநோக்கம் தவறிய வாலியைக் கொல்வதில் பிழை இல்லை.

மானிட நோக்கில் பார்க்கும்போது தான் வாலிவதையின் பிரச்சினைஎழுகிறது. இராமாயணத்தில் ராமன் கதா...

இப்படிப் பலவிதமான பார்வையிலே அறிஞர்கள் வாலிவதையை நோக்குகிறார்கள். ஆய்வு நூல்கள் நிறைய வருகின்றன.

வாலிவதை பற்றி மட்டுமல்ல பழைய இலக்கியங்கள் எல்லாவற்றைப்பற்றியுமே ஆய்வுகள் வெளிவருகின்றன.

மாணவர்கள் ஆய்வைப்படிக்கிறார்கள் மூலத்தைப் படிக்கிறார்கள் இல்லை. இதனால் ஆய்வாளர்களுடைய முடிவையே முடிந்த முடிவாகக் கொள்ளுகிறார்கள்? மாணவர்கள் அவ்வாறு முடிவு செய்யக்கூடாது. மூலநூலைத்தங்கள் பார்வையில் நோக்க வேண்டும். ஆய்வு செய்ய வேண்டும். அவ்வாறு படித்தால் மேலும் பல நல்ல ஆய்வுகளுக்கு வழிபிறக்கும்.

கற்பிக்கும் ஆசிரியர்களும் நூலின் கருத்தையும் தங்கள் கருத்தையும் சேர்த்துக்கூறக் கூடாது. தங்கள் கருத்தை வேறாகவும் நூற் கருத்தை வேறாகவும் பிரித்துக்கூற வேண்டும்.

மாணவர்கள் தங்கள் கருத்துக்கு எது சரியென்று தாங்களே முடிவுசெய்ய வேண்டும். ★

**தொகுப்பு: இரகுபரன்**

---


# பிரயாண ஒழுங்குகள்

★ பின்வரும் வேலைவாய்ப்பு வெற்றிடங்கள் எம்மிடமுண்டு

## ★ சவூதி அரேபியா

1. TINKER... 21 வயதிற்கு மேற்பட்டோர்
2. **Security Guards**
   5 வருட படைவீரர் அனுபவம் தேவை. (POLICE, ARMY) அடிப்படைச் சம்பளம் 600 S. R. வயது - (30 - 35)
3. **American Company (JEDDHA)**
   (A) 25 வயதிற்கு மேற்பட்ட ஆண்களுக்கு மட்டும் சாப்பாடு, இருப்பிட வசதியுடன் சம்பளம் 500 S. R.
   (B) 21 வயதிற்கு மேற்பட்டவர்கள் CLEANERS சாப்பாடு, இருப்பிட வசதியுடன் சம்பளம் 350 S. R.
4. **OPEN VISA**
   25 வயதிற்கு மேற்பட்டோர்
   (a) **Air condition Technician** (சாரதி லைசென்ஸ் உடன்)
   (b) **COOK** (சாரதி லைசென்ஸ் உடன்)

## ★ லிபியா ★

Cleaners -- Oil Company
(25 வயதுக்கு மேற்பட்டோர்)

## ★லெபனான் --- CLEANERS

(A) ஆண்கள் 18 வயதிற்கு மேற்பட்டோர் அடிப்படைச்சம்பளம் 3,500/, ரூபா (சாப்பாடு இருப்பிடத்துடன்)

(B) பெண்கள் 18 வயதிற்கு மேற்பட்டோர் அடிப்படைச் சம்பளம் 2,500/- ரூபா (சாப்பாடு இருப்பிடத்துடன்)

## ★ IRAQ ★

(HOSPITAL CLEANERS JAPANESE COMPANY)

● 18 வயதிற்கு மேற்பட்ட ஆண்கள் சம்பளம் இருப்பிட வசதியுடன் 65 டினார்

முக்கிய குறிப்புகள்

★ அளவெட்டி, தெல்லிப்பளை, காங்கேசன்துறை மக்களின் நலன் கருதி மீண்டும் புதன் தொடக்கம் (02-09-1987) காங்கேசன் துறையில் உள்ள காரியாலயம் திறக்கப்பட்டுள்ளதால்கீழ் குறிப்பிடப்பட்டுள்ள காங்கேசன்துறை முகவரியிலும் தொடர்பு கொள்ளலாம்.

★ எமது ஸ்தாபன நிர்வாகி வந்துள்ளமையால் பாஸ்போட் ஒப்படைத்தவர்கள் உடன் வந்து அவரைச் சந்திக்குமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

தொடர்புகொள்ளவேண்டிய முகவரி:

★ T. இந்திரநாதன் ★
★ M3 ரவல்ஸ் ★
சற்குணவாசா (சோதிலேன்)
காங்கேசன்துறை.
(பஸ்வழி இலக்கம்:- 769)

★ T. இந்திரநாதன் ★
M THREE TRAVELS
96, Kachcheri Nallur Road,
Nallur, Jaffna.
(முத்திரைச் சந்திக்கு அருகாமையில்)


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# அருளாட்சி முடி துறக்கின்றார்

# 69 ஆவது மடாதிபதி

ஆகஸ்ட் 22. சனிக்கிழமை. அன்று இரவு காஞ்சி மடம் வழமை போன்று தெய்வீக அமைதியுடன் தான் இருந்தது.

மடாதிபதி மகாபாரதம் பற்றிய விளக்கவுரையைச் சொல்லிக் கொண்டிருந்தார்.

இரவு 11-30 மணி வரை இப்பணி இடம் பெற்றது.

பின்னர் மட நிர்வாகம் பற்றிய கலந்துரையாடல்களில் மடாதிபதி ஈடுபட்டார்.

தனது அறைவாசலில் வழக்கமாக நித்திரை செய்பவர்களை அழைத்து பிரதான மண்டபவாசலில் போய் நித்திரை செய்யும்படி மடாதிபதி பணித்தார்.

அதன் பின்னர் மடாதிபதியும் நித்திரைக்குப் போய்விட்டார்.

அதிகாலை 4 மணி. பக்தர்கள் மடத்துக்கு வந்தனர். மடத்தின் கதவுகள் திறந்திருந்ததைக் கண்டனர்.

உள்ளே சென்று பார்த்தனர். ஆனால் மடாதிபதியை மட்டும் காணவில்லை.

ஏனைய பொருள்கள் வைத்தது வைத்தபடியே இருந்தன.

மடாதிபதி தினசரி பூசை செய்து வரும் 'தண்டம்' அறையில் காணப்பட்டது. தவறாமல் தினசரி மூன்று தரம் 'தண்டத்'துக்குப் பூசை செய்து வந்தால் மட்டுமே சங்கராச்சாரியராக இருக்க முடியும்.

அதற்குப் பூசை செய்யாவிட்டால் அவர் சாதாரண சந்நியாசியாகி விடுவார்.

அறையினுள் மடாதிபதியின் 'கமண்டலம்' கைவிடப்பட்ட நிலையில் காணப்பட்டது.

மடாதிபதி 'அருளாட்சி முடி'யைத் துறந்துவிட்டு வெளியேறி விட்டார் என்பது எல்லோருக்கும் தெரிய வந்தது.

காஞ்சி காமகோடி பீடத்தின் 68 ஆவது மடாதிபதியாக இருந்து 19-3-1954 இல் ஓய்வு பெற்றவர் காஞ்சி முனிவர்.

தொண்ணூறு வயதைத் தாண்டிய அவர் ஸ்ரீ சந்திரசேகர சரஸ்வதி ஸ்வாமிகள் என்று அழைக்கப்படுகின்றார்.

காஞ்சி முனிவரிடம் விஷயம் தெரிவிக்கப்பட்டது.

69 ஆவது மடாதிபதி ஸ்ரீ ஜயேந்திர சரஸ்வதி ஸ்வாமிகள் 'அருளாட்சி'யைத் துறந்து விட்டு வெளியேறிய செய்தியைக் கேள்வியுற்ற காஞ்சி முனிவர் மௌனமாக இருந்தார். முகத்தில் அமைதி, சாந்தமே குடிகொண்டிருந்தது

மடத்தை விட்டு வெளியேறிய மடாதிபதி ஒரு பொருளையும் கொண்டு செல்லவில்லை.

ஆகஸ்ட் பத்தாம் திகதி ஜயேந்திர ஸ்வாமிகளின் 54 ஆவது பிறந்த தினம் கொண்டாடப்பட்டது.

அப்போது அவருக்கு ஆயிரத்தெட்டு தங்கப் பவுண்கள் அன்பளிக்கப்பட்டன. ஒரு காரும் அன்பளிக்கப்பட்டது.

அத்தனையும் மடத்தில் அப்படியே இருந்தன.

அதிகாலை இரண்டு மணியளவில் புதிய கார் ஒன்றில் மடத்தைவிட்டு, மடாதிபதி ஸ்தானத்தை விட்டு ஸ்ரீ ஜயேந்திர ஸ்வாமிகள் வெளியேறினார் என்பது பின்னர் தெரியவந்தது.



ஸ்ரீ ஜெயேந்திரஸ்வாமி

சதுர்மாச விரதகாலத்தின்போது மடத்தை விட்டு மடாதிபதி வெளியேறக் கூடாது என்பது சாஸ்திர விதி. அப்படியிருந்தும் ஜயேந்திர ஸ்வாமிகள் வெளியேறியது, வெளியேறுவது என்று ஸ்வாமிகள் திடீரென்று முடிவெடுத்தார் என்பதைக் காட்டுகின்றது.

ஸ்வாமிகளின் வெளியேற்றம் இந்திய ஆஸ்திக அன்பர்கள் மத்தியில் பலத்த கலக்கத்தை ஏற்படுத்தி விட்டது.

ஜனாதிபதி வெங்கடராமனே புதுடில்லியில் இருந்து இரண்டு தரம் சென்னைக்குத் தொலைபேசி அழைப்பு எடுத்து விசாரித்தார்.

## மடாதிபதி ஏன் வெளியேறினார்?

ஸ்ரீ ஜயேந்திர சரஸ்வதி ஸ்வாமிகள் ஏன் வெளியேறினார்?

இதற்குப் பல காரணங்கள் கூறப்படுகின்றன.

ராமஜன்மபூமி உட்பட இந்துமத சம்பந்தமான முக்கிய விஷயங்களில் இவர் கருத்துக்களை பகிரங்கமாக வெளியிட்டு வந்தார்.

அரசியல் விஷயங்களில் காஞ்சி மடம் முன்னர் சம்பந்தப்பட்டது இல்லை. இந்தப் பாரம்பரியத்துக்கு மாறாக ஸ்ரீ ஜயேந்திர ஸ்வாமிகள் அரசியல் விஷயங்களில் கருத்துக்களை வெளியிட்டு வருவது காஞ்சி முனிவருக்குப் பிடிக்கவில்லை.

இப்படி ஒரு தகவல் கூறுகின்றது.

ஜூலை 4 இல் திருப்பதியில் ஸ்ரீ ஜயேந்திர ஸ்வாமிகள் ஓர் அறிக்கையை வெளியிட்டார். அந்த அறிக்கைக்கும் அவரின் வெளியேற்றத்துக்கும் ஒரு காரணம் என்று இன்னொரு தகவல் கூறுகின்றது.

காஞ்சி காமகோடி பீடம் ஆயிரம் வருட சரித்திரத்தைக் கொண்டது.

இக்காலத்தில் மடாதிபதி பட்டத்தைத் துறந்த இரண்டாவது ஸ்வாமிகள் ஜயேந்திர ஸ்வாமிகளே.

மடாதிபதி ஸ்தானத்தைத் துறந்த முதலாவது மடாதிபதி ஸ்ரீ புரேந்திர சரஸ்வதி ஸ்வாமிகள்.

இவர் காஞ்சி மடத்தில் 58 ஆவது மடாதிபதியாக அருளாட்சி புரிந்தவர்.

கர்நாடக மாநிலத்தில் உள்ள தலைக்காவேரியில் அகஸ்தியர் கோயில் ஒன்று உண்டு. அதற்கு

### - பிரசாந்தி -

அருகில் கைலாஷ் ஆசிரமம் உண்டு.

அங்குதான் ஸ்ரீ ஜயேந்திர ஸ்வாமிகள் தங்கித் தியானத்தில் ஈடுபட்டு வருகின்றார்.

தஞ்சாவூர் மாவட்டத்தில் மன்னார்குடி தாலுக்காவில் உள்ள இருள் நீக்கி கிராமத்தில் பிறந்தவர் ஸ்ரீ ஜயேந்திர ஸ்வாமிகள்.

தந்தை பெயர் ஸ்ரீ மகாதேவ ஐயர். தாயார் பெயர் சரஸ்வதி அம்மாள்.

'மடாதிபதி பதவியைத் துறந்தேன்; சந்நியாசத்தைத் துறக்கவில்லை'— என்று கூறும் ஸ்ரீ ஜயேந்திர சரஸ்வதி ஸ்வாமிகள் பின்வருமாறு கூறுகின்றார்:

என் சொந்த விருப்பத்தின் பேரில்தான் நான் மடத்தை விட்டு வெளியேறினேன்.

பன்னிரண்டு ஆண்டுகளுக்கு முன்னர் தலைக்காவேரிக்கு நான் பாதயாத்திரை வந்தேன். அதன் பின்னர் நான் இந்தியா முழுவதும் சுற்றுப் பயணம் மேற்கொண்டேன்.

ஆனால் தலைக்காவேரி தான் எனக்குப் பிடித்துக் கொண்டது.

காஞ்சி மடத்தை விட்டு வெளியேறும்படி திருமலை வெங்கடேஸ்வரப் பெருமான் தான் என்னைப் பணித்தார்.

நான் மடத்தை விட்டு வெளியேறுவேன் என்பது காஞ்சி முனிவருக்கு தெரியும். ஆனால் வெளியேறும் திகதி தெரியாது. நான் சங்கல்பம் ஒன்று எடுத்திருக்கின்றேன். அது நிறைவேற பரமாசாரியாரின் ஆசியை வேண்டுகின்றேன்.

மட நிர்வாகம் குறித்து பரமாசாரியருக்கும் எனக்கும் கருத்து வேற்றுமை இல்லை.

நல்ல முகூர்த்தம் ஒன்றைப் பார்த்துத்தான் நான் காஞ்சி மடத்தை விட்டு வெளியேறினேன்.

எனது சங்கல்பம் நிறைவேறுவது திருமலை வெங்கடேஸ்வரரின் அருளில்தான் தங்கி உள்ளது.

தான் ஆச்சிரம வாசத்தைக் கைவிட்டாலும் சந்நியாசத்தைக் கைவிட மாட்டேன்.

சுவாமி விவேகானந்தரின் எழுச்சி இயக்கம் போன்ற ஒன்றை விஜய தசமி (அக்டோபர் 2) அன்று அறிவிப்பேன்.

இப்படிக் கன்னட மொழியில் ஸ்ரீ ஜயேந்திர ஸ்வாமிகள் தெரிவித்தார்.

சீடர்களைத் திருப்திப்படுத்த மீண்டும் காஞ்சிக்கு விஜயம் செய்யவுள்ளேன் என்று சொன்ன ஜயேந்திர ஸ்வாமிகள் எப்போது விஜயம் செய்வார் என்பதைத் தெரிவிக்கவில்லை.

ஸ்வாமிகள் தங்கி உள்ள கைலாஷ் ஆசிரமம் வேதகோடி நம்பியார் என்பவரினால் நிர்மாணிக்கப்பட்டது.

ஸ்வாமியுடன் ஸ்வாமி விவேகானந்தா, ஸ்வாமி ஆனந்த தீர்த்த ஆகியோரும் தங்கியுள்ளனர். ✱

இவர் தான்



எழுபதாவது

சங்கராச்சாரியர்

ஆகஸ்ட் 23 ஞாயிற்றுக்கிழமை.

காஞ்சி மடத்தில் தெய்வீக மணம் கமழ்கின்றது.

காஞ்சி முனிவர், தொண்ணூறு வயதைத் தாண்டிய ஸ்ரீ சந்திரசேகர சரஸ்வதி ஸ்வாமிகள் 70ஆவது சங்கராச்சாரிய ஸ்வாமிகளை அருளாட்சியில் அமர்த்துகின்றார்.

பக்தர்கள் ஆனந்தக்கண்ணீர் சொரிகின்றனர்.

காஞ்சி முனிவரின் திருப்பாதங்களில் வீழ்ந்து ஆசி பெறுகின்றார் புதிய மடாதிபதி.

அவர்தான் 18 வயதான ஸ்ரீ சங்கர விஜேந்திர சரஸ்வதி ஸ்வாமிகள்.

அருளாட்சிப் பொறுப்பை ஏற்ற புதிய ஸ்வாமிகளின் கைகளில் நிதிப்பொறுப்பை காஞ்சி முனிவர் ஒப்படைத்தார். பணப்பெட்டித் திறப்புக்கள், கணக்குப் புத்தகங்கள் புதிய ஸ்வாமிகளிடம் ஒப்படைக்கப்பட்டன.

ஸ்ரீ ஜயேந்திர ஸ்வாமிகள் 26 மாதங்களாக நாட்டில் அருள் பயணத்தை மேற்கொண்டிருந்தபோது ஸ்ரீ சங்கர விஜேந்திர ஸ்வாமிகள் தான் மடத்தின் தினசரி பூஜைகளை நடத்தி வந்தார்.

14 ஆவது வயதில் இளைய ஸ்வாமிகளாக குருப்பட்டம் தரித்த ஸ்ரீ விஜேந்திர சரஸ்வதி ஸ்வாமிகளின் பூர்வீகப் பெயர் சங்கரன்.

செங்கல்பட்டு மாவட்டத்தில் உள்ள தண்டலம் கிராமத்தில் 13.5.1969 இல் பிறந்தார். சங்கரன் தந்தை ஸ்ரீ கிருஷ்ணமூர்த்தி சாஸ்திரிகள் ஒரு வேதவிற்பன்னர். அவருக்கு எட்டுப் பிள்ளைகள். சங்கரன் நான்காமவர்.

போளூர், மன்னார்குடி வேத பாடசாலைகள் வேதப் பயிற்சிகளைப் பெற்றார்.

பல விற்பன்னர்கள் இப்போதும் ஸ்ரீ சங்கர விஜேந்திர ஸ்வாமிகளுக்கு தத்துவம், சமயம் மற்றும் வேதங்கள் குறித்து பயிற்சி அளித்து வருகின்றனர்.

70ஆவது சங்கராச்சாரியர் பட்டத்தை ஏற்ற பின்னர் ஸ்ரீ சங்கர விஜேந்திர சரஸ்வதி ஸ்வாமிகளை ஜனாதிபதியின் துணைவியார் திருமதி ஜானகி வெங்கட்ராமன் உட்பட பல ஆஸ்திக பிரமுகர்கள் தரிசித்து ஆசிபெற்றனர்.

''நடந்த சம்பவங்கள், வதந்திகள் பற்றி பக்தர்கள் கவலைப்படவேண்டியதில்லை. காஞ்சி காமகோடி பீடம் தொடர்ந்து வழமைபோல் இயங்கும்''—புதிய சங்கராச்சாரியார் பக்தர்களுக்கு இப்படிச் சொன்னார். ✱

## காஞ்சி முனிவர் பேட்டி

காஞ்சி மடத்தைவிட்டு வெளியேறுவேன் என்று மூன்று ஆண்டுகளுக்கு முன்னரே ஸ்ரீ ஜயேந்திர ஸ்வாமிகள் என்னிடம் தெரிவித்துவிட்டார்.

என்னைக் கலந்தாலோசிக்காமலேயே அவர் ஸ்ரீ சங்கர விஜேந்திர சரஸ்வதியை வாரிசாக நியமித்தார்.

கேள்வி: நள்ளிரவில் ஏன் ஸ்ரீ ஜயேந்திர சரஸ்வதி மடத்தைவிட்டு புறப்பட்டார்?

பரமாசாரியர்: சீடர்களினால் தான் தடுத்து நிறுத்தப்பட்டு விடுவேன் என்ற அச்சம் காரணமாகவே அவர் அப்படிச்செய்தார்.

கேள்வி: மடத்தைவிட்டு வெளியேறியதால் காஞ்சி காமகோடி பீடம்மீது வைக்கப்பட்டிருந்த மதிப்பு குறைந்துவிட்டதாக பொதுசன அபிப்பிராயம் உள்ளதே!

பரமாசாரியார்: அதுதான் பொதுமக்களின் அபிப்பிராயம் என்றால் என்னால் உதவ முடியாது.

கேள்வி: உங்களுக்கும் ஸ்ரீ ஜயேந்திரஸ்வாமிக்கும் இடையே கருத்து வேறுபாடு உண்டு என்று கூறப்படுவது பற்றி...

பரமாசாரியர்: அது சரி அல்ல. மடத்தை அவர் நன்றாகவே பராமரித்து வந்தார். ஒரு பைசாவைக்கூட அவர் மடத்தில் இருந்து எடுத்துச் செல்லவில்லை நான் கொடுத்த இரண்டு உருத்திராட்சை மாலைகளைத்தான் அவர் எடுத்துச் சென்றுள்ளார்.

ராமஜன்மபூமி விஷயத்தில் கருத்துக்கள் தெரிவிக்க அவருக்கு உரிமை உண்டு. நானும் அப்பிரச்சினை குறித்து உத்தரப்பிரதேச மாநில அரசுத் தலைமைச்செயலாளருடன் பேச்சுக்கள் நடத்தி இருக்கின்றேன்.

இப்படி 93 வயதான காஞ்சிமுனிவர் ஸ்ரீ சந்திரசேகர சரஸ்வதி ஸ்வாமிகள் செய்தியாளர் மாநாட்டில் தெரிவித்தார்.

புதிய சங்கராச்சாரியரான ஸ்ரீ சங்கர விஜேந்திர சரஸ்வதி ஸ்வாமிகளும் மாநாட்டில் கலந்துகொண்டு முதன்முறையாக பக்தர்களுக்கு விபூதி பிரசாதம் வழங்கினர். ✱

## போராளிகளே!

அந்த அர்த்த ராத்திரிகளில் வந்து
என் வாசற் கதவுகளை
தட்டி எழுப்பிய
அந்தப் போராளிகளை
இன்று, நான் அவசர,
அவசரமாக சந்திக்க விரும்புகிறேன்!

அதில் ஒருவர் என்மாணவர்!
மற்றவர்
என் முன்னைநாள் கட்சித் தோழர்!
மற்றவர்கள் யார் யாரோ!
ஆயினும்,
ஆயுதபாணிகளாக
வியர்த்து விறுவிறுத்து
அடைக்கலம் என்று......
அந்த அர்த்தராத்திரிகளில்
வந்துநின்று,
அதுவும், என் கொல்லைப்புறக் கதவுகளை
தட்டி எழுப்பி
''தண்ணீர் தாருங்கள் என்று, கேட்ட
அந்தப் போராளிகளை,
இன்று அவசரம் அவசரமாக

சந்திக்க விரும்புகின்றேன்!
அந்த அர்த்த ராத்திரியிலேயே
இடியப்பம், பிட்டு அவித்து
இறைச்சிக்கறி சமைத்த
என் அன்புமனைவி மக்கள் எல்லாரும்
உங்களை,
அவசர அவசரமாக
சந்திக்க விரும்புகின்றார்கள்!

அந்த அர்த்த ராத்திரியில்,
எனது வீட்டு முற்றத்தில்
அந்த வாகை மரத்திலிருந்த
ஆந்தை ஒன்று
அவலக்குரல் எழுப்பியது!

அப்போது, நான்
உங்களுக்கு கூறினேன்?
''அதுதான் பேரினவாதத்தின்
மரண ஓலம்'' என்று!
நினைவிருக்கிறதா?

அன்று,
நீங்கள் விடியலுக்கு
காத்திராமல் விடைபெற்றீர்கள்!
ஆனால், எங்களுக்கு
இன்னும் விடியவே இல்லை!

ஆனாலும்
இங்கு சிலருக்கு ''அவல்''
கிடைத்திருக்கிறது!
எங்களுக்கு
''அரிசிதான் வேண்டும்!
அதுவும் எவர் குற்றிய
அரிசியிலும் சோறுக்கு
நாம் விரும்பவுமில்லை!

எனவேதான்,
அந்த அர்த்த ராத்திரிகளில்
வந்து சென்ற
எனது இதயத்துளிர்களை
இன்று அவசர அவசரமாக
சந்திக்க விரும்புகிறேன்!

— கவிஞர் மருதூர்க்கனி

# பிரித்தானிய ஆட்சியில் தமிழர் தலைமைத்துவம்

**யாழ் பல்கலைக் கழகத்தில் கைலாசபதி அரங்கில் பேராசிரியர் எஸ். பத்மநாதன் ஆங்கிலத்தில் ஆற்றிய சேர். பொன். இராமநாதன் நினைவுச் சொற்பொழிவின் தொகுப்புத் தமிழில் இங்கு தரப்படுகிறது.**

**தமிழில் தருபவர்: வில்வம் பசுபதி**

சேர். பொன்னம்பலம் இராமநாதன் மிகச் சிறந்த பேச்சாளராகவும், விவாதத்திறன் படைத்தவராகவும், சட்ட நிபுணராகவும், ஆழ்ந்த சிந்தனையும், பரந்தபடிப்பறிவும் பெற்றவராகத் திகழ்ந்தார். அன்றைய சட்டசபையில் அவர் செயலாற்றிய முறை நாட்டின் சகல இன மக்களினதும் பாராட்டுகளைப்பெற்றது குறிப்பிடத்தக்கது.

மக்கள் மீது சுமையையும், பாதிப்பையும் ஏற்படுத்தக்கூடிய சட்டங்கள் சட்டசபையில் கொண்டுவரப்பட்டபோதெல்லாம் பலமாகக் கண்டித்தும், எதிர்த்தும், சமுதாய, பொருளாதார, கலாசார மட்டத்தில் எழுச்சியை ஏற்படுத்தக்கூடிய திட்டங்களை எடுத்துக் கூறியது மட்டுமன்றி, அரசியல் முன்னேற்றத்தையும் ஏற்படுத்தக் கடுமையாக உழைத்தார்.

சட்டசபையில் ஐம்பது வருடங்களாக சேவை புரிந்ததைப் பாராட்டி 1929 இல் வைரவிழா கொண்டாடப்பட்டது.

தமிழ் மக்களின் பிரதிநிதியாக அரசாங்கத்தால் 1877இல் சட்டசபைக்கு நியமிக்கப்பட்டார். தொடர்ந்து 14 வருடங்கள் சேவையாற்றியபின்பு சொலிசிட்டர் ஜெனரலாகவும், பதில் சட்டமா அதிபராகவும் கடமையாற்றினார். அதன் பின்பு தத்துவ ஞானம், சமயம், கலை, கலாசாரம், கல்வி முன்னேற்றம் ஆகியவற்றில் முழு ஈடுபாடு கொண்டு அவற்றை ஊக்குவிக்கும் முகமாக பதவியைத் துறந்து இத்துறைகளில் தன் கவனத்தைச்செலுத்தினார்.

சட்டசபை 1910இல் மீண்டும் அமைக்கப்பட்டு நான்கு அங்கத்தவர்கள் தேர்தல் மூலம் தெரிவு செய்யப்படுவதற்கு விதிகளில் இடமளிக்கப்பட்ட போது அனேகரின் வேண்டுகோளுக்கிணங்க 1911இல் நடைபெற்ற தேர்தலில்போட்டியிட்டு அவரை எதிர்த்துப் போட்டியிட்ட திரு. பெர்னாண்டோவை மிகப் பெரும்பான்மை வாக்குகளால் தோற்கடித்தார்.

சட்டசபையில் மிகத் திறமையாக வாதாடி அங்கு எடுக்கப்படும் சகல விடயங்களிலும் [illegible] சாய முன்னேற்றத்திற்காகவும், பொருளாதார அபிவிருத்திக்காகவும் அவர் சட்டசபையில் பல்வேறு திட்டங்களைச் சமர்ப்பித்தார். அவ்விடயங்கள் சம்பந்தமாக ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை எடுத்து, அவற்றினைத் திறம்படச் செயற்படுவதற்கும் முன்னின்று உழைத்தார்.

நீண்டகாலமாக இவர் எடுத்துக் கொண்ட முயற்சியின் பயனாக யாழ்ப்பாணம் வரை புகையிரதப்பாதை நீடிக்கப்பட்டது. இவரது முயற்சியினாலேயே தபால் கந்தோர்களில் சேமிப்பு வங்கிகள் ஆரம்பிக்கப்பட்டன.

பாமரமக்கள் மத்தியிலும், நடுத்தரவர்க்க மக்கள் மத்தியிலும் சேமிக்கும் வழக்கத்தை இத் தபால்கந்தோர் சேமிப்பு வங்கிகள் ஊக்குவித்தன.

தமிழ் மக்களின் பிரதிநிதியாக சட்டசபையில் [illegible] மன்றி, தேசியத்தலைவராக மதிக்கப்பட்டார்; சகல இனமக்களின் அன்பையும், ஆதரவையும் பெற்ற தேசியத்தலைவராகத் திகழ்ந்தார்.

### மக்கள் பாராட்டு

அவர் 1886 இல் ஐரோப்பா பயணமாகு முன் சகல இனத்தைச் சார்ந்த மக்களும் பல பிரிவுபசாரக் கூட்டங்கள் நடத்திக் கௌரவித்தார்கள். பாலி வித்தியோதயாக் கல்லூரி அதிபரும், மதகுருவுமான தர்ம குணவர்த்தன மற்றும் பல சிங்களப்பிரமுகர்கள்இவரது சேவையைப் பாராட்டிப் பேசினர். அவர்களின் உரைகள் சிங்கள மக்களின் உணர்ச்சிகளையும், அவர்கள் சேர். பொன்இராமநாதன்மீது கொண்டுள்ள அன்பையும், மதிப்பையும் பிரதிபலிப்பவையாக அமைந்தன.

''சிங்கள மக்களுக்கு நீங்கள் ஆற்றிய சேவைக்கு நன்றிக்கடன் உடையவர்களாவோம்'' என அவர்கள் குறிப்பிட்டது அவர் மீது கொண்டுள்ள அன்பையும், விசுவாசத்தையும் காட்டுவதாக அமைகிறது.

இருபது வருடங்களுக்கும் பின் 1911இல் மீண்டும் சட்டசபைக்கு தெரிவு செய்யப்பட்டபோது அவரின் அரசியல் வாழ்க்கையின் இரண்டாவது கட்டம் ஆரம்பமாகியது.

சட்டச் சீர்திருத்தம், கல்வி, சமுதாயநலன் அரசியல் சட்டத்திருத்தம் ஆகியவற்றினைத் திறம்படச் செயல்படுத்தும் வகையில் அவர் பல நடவடிக்கைகள் எடுத்தார். சட்டசபையில் இவ்விடயங்கள் சம்பந்தமான விவாதங்களில் முக்கிய பங்கெடுத்து உரையாற்றினார். நாட்டின் அரசியல் முன்னேற்றத்திற்கும், சட்டச் சீர்திருத்தங்களுக்கும், நாடு சுயாட்சியை எய்தக் கூடிய நிலை உருவாகுவதற்கும் அவர் ஆற்றிய பங்களிப்பு அளப்பரியது.

இவருடைய சகோதரர் அருணாசலம் அவர்களினால் ஸ்தாபிக்கப்பட்ட இலங்கை தேசிய காங்கிரசில் முக்கிய விடயங்கள் ஆலோசிக்கப்படும்போது அதில் பங்குபற்றிக் கருத்துரைகள் வழங்கினர்.

இலங்கை சுயாட்சி பெறும் நிலையை உருவாக்கும் முகமாக அரசியல் சட்டத்தில் மிக முக்கிய மாற்றங்களைக் கோரும் பிரேரணையை தேசிய காங்கிரஸின் 1919-12-13 திகதி நடைபெற்ற கூட்டத்தில் முன் மொழிந்தார்.

### 1915 கலவரம்

இலங்கையில் 1915இல் நிகழ்ந்த இனக்கலவரங்களுக்கு முன்பும், அதன் பின்பும், சேர். இராமநாதனின் செயல்பாடுகளும், அக்காலகட்டத்தில் அவர் ஆற்றிய மகத்தான சேவையும் மக்களைக் கவர்ந்தன. அக்காலகட்டம் அவருடைய அரசியல் வாழ்வின் உச்சக்கட்டமாகும். புத்த மதத்தினர்மீது அரசாங்கத்தால் எடுக்கப்பட்ட கொடூர நடவடிக்கைகளை வன்மையாகக் கண்டித்தார். இராணுவச் சட்டம் அமுலுக்குக் கொண்டுவரப்பட்டு நூற்றுக்கணக்கான சிங்களமக்கள் சுட்டுக் கொல்லப்பட்டும், ஆயிரக்கணக்கானோர் கைது செய்யப்பட்டும் கொடுக

(9-ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காத்திருக்கும் கடமைகள்



ஜனார்த்தன்.

அந்தக் கல்லூரியின் உயர்தர வகுப்பு மாணவன் பிறருக்கு உதவி செய்வதில் வல்லவன். சமாதானத்தை ஏற்படுத்தும் அமைதியான போக்குடையவன். அவனது அப்பா ஒரு காந்திய வாதி. அம்மாவும் சகோதரர்களும் கூட அமைதியான போக்குடையவர்கள். அகிம்சைவாதிகள். பிறர் துன்பம் பொறுக்க மாட்டாதவர்கள். தங்கள் பகைவருக்கே ஒரு கஷ்டம் வந்தாலும் கண்ணீர் மல்குபவர்கள் அதனால் போலும் கல்லூரியிலே ''ஒரு சோலி சுறட்டுக்கும் போகாத பிள்ளை'' எனப் பெயர் எடுத்திருந்தான் ஜனார்த்.

வனிதா,

அதே கல்லூரியில் பத்தாம் வகுப்புப் பரீட்சையின் பின் பெறுபேற்றை எதிர்பார்த்து அந்த வகுப்பிலேயே இருப்பவள். அவள் ஒரு துடுக்கான ஆனால் விவேகமான பெண். எங்கெல்லாம் பிரச்சினைகள் நடைபெறுகிறதோ அங்கெல்லாம் அவள் குரல் கேட்கும் 'நியாயம் பிறக்க வேண்டும் நீதியை நிலை நாட்டுகிறேன்' எனத் தனக்குத் தொடர்பில்லாத விடயங்களிலும் கூடத் தலையிட்டுச் சத்தம் போடுபவவள். தோல்விகளையும் வெற்றியாகக் கண்டு மகிழும் வீராங்கனை. அப்பா ஒரு சட்டத்தரணியாம் அம்மா ஒரு பேச்சாளராம். ''பட்டும் பாராள் பணியும் பாராள்'' என்ற விமர்சனம் அவளோடு ஒட்டியது.

இந்த இருவரும் பல சந்தர்ப்பங்களில் பழக வாய்ப்பிருந்தது. வனிதாவின் நடத்தைகளை ஆச்சரியத்தால் விரிந்த கண்களோடு அவதானிப்பான் ஜனார்த்.

தன் வகுப்புப் பையன்கள் 'இவளுக்கொரு பாடம் படிப்பிக்க வேணும்' எனக் குமுறும் போதும்; ''நீங்கள் மட்டும் ஒழுங்குகளை மீறலாமோ எனக் கேட்கிறாளே அதுவும் ஒரு ஜூனியர்'' எனச் சகமாணவிகள் பொருமும் போதும்; அவன் அந்த அதிசயப் பிறவி பற்றி உயர்வாகத் தன் மனத்துள் நினைத்துக் கொள்வான். அப்பாடசாலையிலேயே ஆசிரியரும் மதிக்கும் மகாராணியாகத் திகழ்கிறாள் என்பது அவன் முடிவு.

ஒரு நாள்

மாணவர் தலைவர்கள் உட்பட அட்வான்ஸ் லெவல் மாணவர்கள் அதிபரின் தண்டனைக்கு ஆளானார்கள். வனிதாவுக்கும் அச்சம்பவத்துக்கும் தொடர்பு இருந்ததென அவர்கள் கருதினார்கள். 'நீதியாம் ஒழுங்காம்'' இன்று அவளுக்கொரு பாடம் படிப்பிக்க வேண்டும் எனக் கொதித்தெழும்பினர்.

வழக்கமாக இப்படி ஏதும் நடப்பதுண்டு. வகுப்பு ஒன்றிப்பை நோக்கி ஜனார்த்தும் இவர்களுடன் சேர்ந்து போவதுண்டு. ஆனால் எதுவுமே பேசமாட்டான். ''சும்மா சத்தம் போட்டது காணும்'' எனத் தன் சகாக்களைச் சமாதானம் செய்வதுண்டு. அந்நேரங்களில் வனிதா அவனை அவதானிப்பாள். ஒரு கணிப்பும் வைத்துக் கொள்வாள்.

ஆனால் இன்று இவர்கள் வேகம் கட்டுக்கடங்காதது. சுட்டாயம் அவளை அவமானப்படுத்தப்போகிறான்கள் சும்மா விடமாட்டான்கள். எனவே அவன் தீவிரமாகச் செயற்படவேண்டும்.

அதோ அவள் வனிதா தன்படைசூழ ஒரு மகாராணி போல வருகிறாள்.

''நீங்கள் செய்யாத கடமையைக் கல்லூரியின் மானத்தைக் காப்பதற்காக நான் செய்தேனே தவிர, அதிபரிடம் போய்ச் சொல்லவில்லை. இதைப்பற்றி எனக்கொன்றுமே தெரியாது. ஏன் நம்புறீங்களில்லை'' இது அவள் வாதம்.

ஜனார்த் பேசத் தொடங்கினால் சக மாணவர்கள் மதிப்புக் கொடுப்பார்கள் எனவே குமுறும் நண்பர்களைப் பேசவிடாது அவனே விசாரணை செய்து நிலைமைகளைத் தெளிவாக்கி புரியவைத்துக் கொண்டிருக்கும் போது, வனிதா குறுக்கிட்டாள்.

''நான் சொல்வதில் தான் நியாயம் இருக்குதென்று இந்த மண்டுகங்களுக்குச் சொல்லுங்கோ''

கெம்பி எழும்பிற்று சத்தம். அவன் கூட அதிர்ந்து விட்டான்.

''மன்னிப்புக் கேட்க வேண்டும் மன்னிப்பு'' எனக் கிறீச்சிட்டாள் ஒருத்தி.

ஜனார்த், உன்னாலை தான் இவ்வளவும் பொறுத்தனுங்கள் இப்ப இவளை முழந்தாளிலை நிறுத்தவேண்டும்.''

கோபம்வராத ஜனார்த்தின் முகம்கூட 'ஜிவ்' என்று சிவந்து போயிற்று கடுமையாகவே சேட்டான்.

''கொஞ்சம் கௌரவமாகப் பேசினால் என்ன'' ''அவை ஏன் தங்கடை பிழையை உணராமல் ஜூனியர் என்பதற்காகத்தானே வலியச் சண்டைக்கு வருகினம்''

அவள் குரல் கீழிறங்கித் தளதளத்தது. பார்வையில் ஒரு பயம் தெரிந்தது. அவனுடைய முகத்தைப் பார்க்கமுடியாமல் தலையைத் தாழ்த்தினாள்.

திடீரெனத் தலையை நிமிர்த்தி அவர்களைப் பார்த்தாள்... கண்களில் ஓர் உறுதி. குரல் கம்பீரமாக வந்தது. ''மண்டுகம் என்று சொன்னதற்தாக எனது சீனியேர்ஸ் ஆன உங்களிடம் மன்னிப்புக் கேட்கிறேன்''

திரும்பி ஜனார்த்தைச் சரிதானா என்பது போலப் பார்த்து விட்டு 'விறுக்' சென்று திரும்பிக் கம்பீரமாகவே சென்று விட்டாள் அவள். சிங்கத்தைத் தலைகுனிய வைத்து விட்டோம் என்ற திருப்தியுடன் கூட்டம் விலகியது.

* ★ ★

வனிதா கால் நிறையப் பாவாடையும் அரைத் தாவணியும் போட்டு மிக நேர்த்தியாக உடுப்பாள். நீண்ட பின்னலின் நுனியில் கறுப்புக்குஞ்சம் தாளம் போடும். ஒற்றை மூக்குத்தி தலையசைப்புக் கேற்ப டால் அடிக்கு டிஸ்கோ தொங்கட்டான் நடைக்கேற்ப அசைந்தாடும். மைதீட்டிய கண்கள்; உயர்ந்து இறங்கும் அடர்த்தியான புருவங்கள்; மல்லிகைச் சரம் மணங்கமழ அழகுத் தெய்வம் போல அவனது உள்ளத்தை விட்டு அசைய மறுத்து விட்டாள்.

சில சமயங்களில் அவனது இயல்பு அவளது லாவகமான உடலுக்கும், அழகான நடைக்கும், அலங்காரத்துக்கும் பொருத்தமானவையல்ல என ஜனார்த்துக்குத் தோன்றும்.

அச்சம்பவத்தின் பின் அவள் பார்வையில் ஒரு மிரட்சி, பின் ஒரு தயக்கம் அவனது கணிப்பில் தான் தாழ்ந்து விட்டேனோ எனவொரு ஏக்கம்.

எதிர்த் துருவங்களின் ஈர்ப்பு காதலாகப் பரிமளித்து விட்டது. அவனைப் பொறுத்தவரை அக்காதல் ஜனார்த்தை ஆட்டிப் படைத்தது. பரீட்சையில் ஒவ்வொரு வினாவும் வனிதாவாக நர்த்தனமிட ஒரு படியாகச் சித்தி எய்திவிட்டான்.

நாட்டில் போர் மேகம் சூழ்கிறது. இளைஞர் மத்தியில் இதன் தாக்கம் அதிகரிக்கின்றது மாணவர் அமைப்பினுள் வனிதா சேர்ந்து விடுகிறாள். ஜனார்த்தின் குடும்பம் உணர்ச்சிவசப்படாது இயக்கங்கள், அரசாங்கம், வெளிநாடுகள் என்பனபற்றி அறிவு பூர்வமாக ஆராய்கிறது. ஜனார்த் ஒரு அரசியல்வாதி போலல்லாது ஓர் அரசியல் ஞானியாக விடயங்களை அணுகுகிறான். அலசி ஆய்கிறான். விளக்கங் கொடுக்க முயல்கிறான். சில தொண்டர் பணிகளைச் செய்கிறாள் வனிதா. பத்திரிகை விற்க வந்த போது, தன் அதீத காதலைப்புரிய வைக்க முயல்கிறான் ஜனார்த்.

''வனிதா நான் உம்முடைய சுதந்திரத்திலை தலையிடவில்லை. ஆனால் ஒரு விடயத்திலை ஈடுபட முன்னர் நன்றாக யோசித்திருக்க வேண்டும். என்னைப்பற்றி நினைத்தீரோ சிந்தித்தீரோ''

முறுவலைக் காட்டினாள் அவள்.

''முன்பும் சரி இப்போவும் சரி ஒரு கணமும் என்நெஞ்சைவிட்டு அகலவேயில்லை. எப்பணியைச் செய்யும் போதும் உங்கள் முகமே என்னுள்ளத்தின் பின்னணியில் நிற்கிறது. ஒரு கணமும் மறக்கமுடியாமல் அந்த உற்சாகத்தில் வேலைக் களைப்பே தெரிவதில்லை. வேலை செய்து முடிவதும் தெரியவில்லை''

அவளுடைய கூற்றிலிருந்த விசுவாசமும் நேர்மையும் பிரமிக்கத் தக்கதாக இருந்தாலும் எதிர்காலம் பற்றி அவனுக்கோர் நெருடல்

* ★ ★

1987 ஏப்ரல் மாதம் 22ஆந்திகதி அதிகாலை உடமைகளை விட்டு உற்றார் உறவினரை வீட்டு ஏன் ஊரையே விட்டு உயிரை மாத்திரம் கையில் பிடித்துக்கொண்டு ஓட்டமெடுக்கின்றனர் அவ்வூர் மக்கள். 'ஷெல்' களும் கடற்பீரங்கிகளும் துரத்தத் துரத்த ஹெலியைக் கண்டு பதுங்கியும் உயிராசையில் ஓடியும் கொண்டிருந்த வனிதா குடும்பத்தினரை மாவைக்கந்தன் ஆலயத் தடியில் காண்கிறான் ஜனார்த்.

தாயைத் தனது சைக்கிளில் ஏற்றி வந்ததால் எதுவித உதவியையும் அவனால் செய்ய முடியவில்லை. எங்கே போவதென இன்னமும் தீர்மானிக்கவில்லை எனவும் துர்க்கையம்மன் கோவிலடிக்குப் போய்த்தான் சிந்திக்க வேண்டுமென வும் கூறுகிறார்கள் அவர்கள்.

தாங்கள் நீர்வேலி கண்ணாடித் தொழிற்சாலையருகே இருக்கும் தம் உறவினரான மயூரவரதன் வீடு போவதாகக் கூறி, நாசுக்காகத் தன் இருப்பிடத்தை வெளியிடுகிறான் அவன். வனிதா புரிந்துகொண்டு தலையசைக்கிறாள்.

நிலைமைகள் மோசமடைகின்றன. தமது புதல்வர்களை வெளிநாடு அனுப்ப ஆலாய்ப் பறக்கின்றனர் பெற்றோர். வடமராட்சி விடயங்கள் திகிலையும் அருவருப்பையும் கொடுக்கின்றன. ஜனார்த் குடும்பத்துக்கு வெடிகள் முழக்கங்கள் அதிர்ச்சியைத் தந்து இதயத்தைக்கலக்குகின்றன. வன் செயல்களைத்தாங்க முடியாது அவர்கள் இந்தியாவுக்குக் குடிபெயர, நோர்வேக்கு விஸா கிடைக்கிறது ஜனார்த்துக்கு. தற்போதெல்லாம் வனிதாவைப் பார்க்க முடிவதில்லை. நோர்வேக்குப் போக விண்ணப்பிக்குமாறு செய்தி அனுப்பினான். பதில் இல்லை. ஆனாலும் அவன் வெளிநாடு போவதில் அதிக அக்கறை காட்டினான். கொழும்புக்குப்போகும் நாளும் குறித்தாயிற்று.

ஜூலை 10 ஆம் திகதி. விடாப்பிடியாக விசாரித்து அவள் இருக்கும் இடத்தை அறிகிறான். ஆசைகளெல்லாம் நிராசையாக-கண்கள் நீரைச் சொரிகின்றன. உத்தரவு வாங்கிக்கொண்டு அவளைச் சந்திக்கப் புறப்படுகிறான், தன்னந்தனியே தான்.

பொதுமக்கள் வெளியேறிய பகுதி ஒன்றில் அவள் 'சென்றி'க்கு நிற்கிறாளாம். உயிரினங்களின் நடமாட்டமேயில்லாத அக்கிராமத்தினூடாக அவன் செல்கிறான். பிரபல கல்லூரி ஒன்று மாடிக்கட்டடம் இடிந்து நொருங்கி அலங்கோலமாக - மறுகட்டடங்கள் 'ஷெல்' அடியினால் யானை தின்ற விளாம்பழமாகக் காட்சி அளிக்கிறது.

நெஞ்சு படபடக்க ஒரு சிறு தெருவால் திரும்புகிறான். அழகான மாடி வீடுகளும் பூந்தோட்டங்களும் மாஞ்சோலைகளும் நிறைந்த அவ்வூர்ப்பகுதி ஒரே வெட்டவெளியாகக் காட்சி தருகிறது. புல்டோசர் புகுந்து விளையாடி விட்டது. பனை தறிப்புச் சத்தங்கள் கேட்டுக் கொண்டிருக்கின்றன. ஷெல்லடியால் சிதைந்து விட்ட நிலையிலும் இழுத்து இழுத்து இயங்கிக் கொண்டிருக்கின்றது ஒரு வைத்தியசாலை. மேலும் நடக்க நடக்க ஒரு சுடுகாடு. பயங்கரமாக இருக்கிறது. அதன் அயலே ஒரு இடுகாடு. அதனை அண்டி ஒரு மரக்கூடல். இடுகாட்டின் சிலுவைகள் அருகே மனித நடமாட்டம் தெரிகிறது. அங்கே நடக்கிறான்.

ஒரு சிலர் கல்லறை அருகே படுத்தவாறு துவக்குகளை நீட்டிக் கொண்டிருக்கின்றனர். மரங்களின் அருகே இருவர் முழந்தாளில் குந்தியிருந்து கிழக்கே உற்றுப் பார்த்துக் கொண்டிருக்கின்றனர். அவர்கள் எல்லோரது புலன்களும் கவனமும் ஒரே இடத்தில் லயித்து இருக்கின்றன.

தான் வந்து நிற்பதை ஒரு செருமல் மூலம் அறிவிக்கிறான். இருவரும் திரும்பிப் பார்க்கின்றனர். அடையாளங்காண முடியவில்லை. ஒருத்தி எழுந்து வருகிறாள். இவர்கள் எல்லாம் படை வீராங்கனைகளா என அதிசயப்பட்டு, வருபவளை உற்றுப் பார்க்கிறான்.

அட வனிதா வா! நெஞ்சு ஒரு கணம் துடிக்க மறுக்கிறது. அப்புறம் வேகமாகத் துடிக்கிறது.

கண்டவுடன் துள்ளி ஓடிவரும் வனிதா இன்று நிதானமாக நேர்ப்பார்வையோடு ஆடாமல் அசையாமல் அணி நடையில் வருகிறாள்.

ஒரு போர் வீரனின் முழு உடையுடனும் மார்பில் அணிந்த மகசினுடனும் தோளிலே துவக்கைச் சார்த்தி அவள் வருகிறாள்.

பொட்டெங்கே' பூவெங்கே? டிஸ்கோ தோடெங்கே? மூக்குத்தி எங்கே ஒரு போர்வீரன் போல அவள் வருகிறாள்.

படபடக்கும் கண்கள் நேராக நிலைகுத்த-உணர்ச்சிகள் ததும்பும் முகத்தில் ஒட்டும் தீவிரம் தட்ட - மடித்துக் கட்டிய பின்னலோடு அவள் வந்து நின்றாள்.

ஜனார்த்துக்கு மூச்சு முட்டியது. சொல்ல எதுவும் தோன்றவில்லை. நவரசங்களின் கலவை அவன் முகத்தில்.

யாரோ ஒரு நண்பனைக் கண்டதுபோல அவள் முறுவலித்தாள்.

சஞ்சீவி சிறுகதை

'என்னைப் பார்த்ததும் பயந்து விட்டீங்களோ?'

நிலவிய இறுக்கத்தைத் தளர்த்தினாள் வனிதா.

'உம்முடைய இயல்புக்கேற்ற உடை. மிகப் பொருத்தமாகவும் கவர்ச்சியாகவும் இருக்கு,

அவள் ஜலதரங்கமாகச் சிரித்தாள். எத்தனை நுட்பமாக என்னை உணர்ந்திருக்கிறார் எனப் பெருமிதப்பட்டாள்.

'எப்போ பயணம்'

தன் குணவியல்புகளை அறிந்து சரியான கேள்வி கேட்டாளே. நோர்வேக்கு அவளின் வருகையைப் பற்றிக் கேட்பது மடத்தனமாகப்பட்டது அவனுக்கு. எனவே,

'நாளைக் காலையில் கொழும்பு போகிறேன்'

உலகத்தின் இருளெல்லாம் வனிதாவின் முகத்தில் திரையிட்டது. சோகத்தில் மௌனமானாள்.

'இவ்வளவு சிக்கிரமாகவா'

'வனிதா ஹெலி வெளிக்கிடுது'

கத்தினாள் ஒருத்தி. மின்னல் வேகத்தில் தீவிரமானாள் அவள்.

'ஜனன் அதோ ஒரு மதகு இருக்கிறது. உள்ளே துப்பரவாக்கப் பட்டுள்ளது. அதற்குள் பதுங்குங்கள்'

மதகு அருகில் வந்து நின்று திரும்பிப் பார்க்கிறான் ஜனார்த்.

'கவர் அப் கவர் அப்' என்று கட்டளையிட்டவாறே ஓடுகிறாள் வனிதா.

ஆங்காங்கே நின்ற வீராங்கனைகள் தத்தம் இடங்களுக்குச் சென்று நிலை கொள்கின்றனர். துவக்குகளைக் குறி வைத்தவாறு கல்லறையோடு கல்லறையாக... ஓடிய வனிதா ஒரு பலாமரத்தில் தொத்திச் சரசரவென ஏறுகிறாள். கொப்பொன்றில் சாய்ந்து குறி பார்க்கிறாள். மற்றவளும் அயலில் நின்ற மாமரத்தில் தொற்றிக் கிடுகிடென உச்சாணிக் கிளைக்குள் தாவுகிறாள். இருவரும் கூர்மையாக உற்று நோக்கிக் கொண்டே ஆடாமல் அசையாமல் நிலைகொள்கின்றனர். அந்த லாவகத்தைப் பார்த்து பய பக்தியுடன் வியந்து போனான் ஜனார்த். ஹெலி அண்மித்ததும் பாலத்தினுள் புகுந்து கொண்டான். மேலிருந்து படபடவென றவைகள் பாய்ந்தன. கீழிருந்தும் மேலே வேட்டுக்கள் தீர்க்கப்பட்டன. மோட்டோர் குண்டொன்று மேலெழுந்தது. அத்துடன் ஹெலி போய் விட்டது.

'இந்தக் கொடூரங்களை என்னால் தாங்கவே முடியாது' என அவன் உரக்கவே சொல்லிக் கொண்டான். வெளியே வர மனமின்றி வந்தால் எத்தகைய காட்சிகளைக் காணநேருமோ என்ற பயத்தில் அங்கேயே இருந்தான்.

'ஜனன், ஜனன், வாங்கோ அவங்கள் போட்டான்கள், வெளியே வந்தான் ஜனார்த் தனது கட்டுப்பாட்டையும் மீறிச் சீறினான்.

'சாவோடு விளையாடுகிறீரா வனிதா?'

பதில் சொல்லிப் பிரயோசனமில்லை என்பது போல மௌனம் சாதித்தாள் அவள்.

'வனிதா என்னை என்ன செய்யச் சொல்கிறீர்?'

அவன் குரல் குழைந்து கெஞ்சி ஒலித்தது. அவள் முகத்திலிருந்த தீவிரம் மறைந்து ஓர் ஏக்கம் குடி கொண்டது. அவன் பார்த்து விடக் கூடாது என்பதற்காக மறுபுறம் திரும்பினாள் அவள். அங்கே அந்தப் பெரும் வெளி. குடை சாய்ந்த மரங்கள்; மேலும் இடித்து நொருக்கப்படும் ஓசை; அவள் கண்களில் ஒரு வெறுப்பு, ஆவேசம் குரோதம்.

'வனிதா நான் கேட்டதற்குப் பதில்? உமக்குத் துணையாக நின்று விடட்டுமா?'

திரும்பினாள். முகத்தில் எதுவித உணர்ச்சியுமில்லை. மிக மெலிந்த ஆனால் உறுதியான குரலில் அவள் சொன்னாள்.

'இல்லை ஜனன். நீங்கள் போய்வாருங்கோ, நன்றாகப் படியுங்கோ, நன்றாக உழையுங்கோ, நல்ல தமிழ் மக்களைப் பெற்றெடுங்கோ. அவர்களுக்கு நாட்டுப்பற்றை ஊட்டுங்கோ. ஆனால் நீங்கள் ஒரு காலத்தில் இங்கே திரும்பி வர வேண்டும். சுதந்திரக் காற்றைச் சுவாசிக்க வேண்டும். ஈட்டி வந்த பெருஞ் செல்வம்-அதோ அந்தக் கல்லூரி, இந்தப் பொட்டல் வெளி எல்லாம் அடுக்கு மாளிகைகளாக, பூஞ்சோலைகளாக, களியாட்ட அரங்குகளாக மாற வேண்டும். ஒரு பெரிய நவீன நகரமாகக் கட்டி எழுப்ப வேண்டும். உங்கள் காலங்கடந்தாலும் உங்கள் பிள்ளைகள் பேரன்மார் இன்னும் வெளியேறிய எம்மூர்மக்கள் அத்தனை பேரும் சேர்ந்து தான்... சத்தியம் செய்யுங்கள்.

கையை நீட்டுகிறான் அவள். முதல் முறையாகவும், ஏன் கடைசி முறையாகவும் இருக்கலாம். நீட்டிய கைகளின் மேல் தன் கைகளை வைத்து அழுத்துகிறான். அவளது இலட்சியத்தை அவன் புரிந்து கொண்டு நெகிழ்ந்து போனான்.

கடைசியில் துரும்பைப் பிடித்த மாதிரி, கண்கள் கசிய, சன்னமான குரலில் அவன் கேட்டான்.

'இலட்சியம் நிறைவேறினால் என்னிடம் வருவீரா?'

குழந்தைபோல் கேட்டதும் ஐயோ பாவம் என்றிருந்தது அவளுக்கு. திடீரென இலேசானாள் அவள்.

'இக்கல்லறைகளில் இருக்கின்ற ஆத்மாக்கள் மத்தியில் 'கைப்பிடிப்பு' நடந்துவிட்டதே. நான் ஏன் வரப்போறன். உடனே போன் பண்ணி உங்களை வரவழைப்பேன்'

கலகலவென மீண்டும் ஜலதரங்கமாகிறாள் வனிதா. அந்தச்சிரிப்பில் இலேசாகி விடை பெறுகிறான் ஜனார்த். தூக்கியிருக்கும் துவக்கின் பாரம் பல நூறு மடங்காக அழுத்துவது போன்ற உணர்வுடன் மற்ற வீராங்கனைகளை நோக்கி மெல்ல மெல்ல நடக்கிறாள் வனிதா.

நாட்டைக் காக்கும் பணியில் வனிதா அந்தப் பலாமரத்தில் நின்ற காட்சி உள்ளத்திலே சிற்பமாக உறைய-இலட்சியம் ஏதும் இன்றி உயிரைக் காக்க மேற்கொள்ளவிருந்த பிரயாணம் - இன்று வனிதாவின் எதிர்பார்ப்புகளைப் பெரும் இலட்சியமாக்கித் திகழ, நிமிர்ந்து நடக்கிறான் ஜனார்த். ★

- குறமகள் -

# வாயுள்ள பிள்ளை பிழைக்கும்

ஒரு நாள் தெனாலிராமனின் மகன் அரண்மனைப் பூந்தோட்டத்தில் சில ரோஜா மலர்களைத் திருடிவிட்டான்.

காவலர்கள் சிறுவனைக் கையுங் களவுமாகப் பிடித்துவிட்டனர்.

ரோஜாப் பூக்களும் கையுமாக தெனாலிராமனின் மகனை காவலர்கள் அரசனிடம் இழுத்துச் சென்று கொண்டிருந்தனர்.

வழியில் தெனாலிராமன் எதிர்ப்பட்டான்.

தனது மகனைக் காவலர்கள் இழுத்துச் செல்வதைக்கண்ட தெனாலிராமன் ''என்ன சமாச்சாரம்'' என்று காவலர்களை விசாரித்தான்.

''உமது மகன் அரண்மனைப் பூந்தோட்டத்தில் ரோஜா மலர்களைத் திருடிவிட்டான். இவனைக் கையுங்களவுமாகப் பிடித்துவிட்டோம். அதனால், இவனை மன்னரிடம் அழைத்துச்செல்லுகிறோம்'' என காவலர்கள் கூறினார்கள்.

''என் மகன் அப்படியெல்லாம் செய்யமாட்டானே'' என்றான் தெனாலிராமன்.

''இதோ அவன் கைகளைப் பாருங்கள். எத்தனை ரோஜா மலர்களை வைத்திருக்கிறான்'' எனக் காவலர்கள் சுட்டிக் காண்பித்தனர்.

''என் மகன் தவறு செய்திருந்தால் தண்டிக்கப்படவேண்டியதுதான். அதில் நான் குறுக்கிடமாட்டேன். என் மகன் வாயுள்ள பிள்ளை. எப்படியும் பிழைத்துக் கொள்வான்'' எனக் கூறிய தெனாலிராமன் தான் மேலே அணிந்திருந்த உத்தரியத்தை எடுத்து மகனின் தலையில் முட்டாக்கு போலப் போட்டு ''வெயிலாக இருக்கிறது. பையன் வெயிலுக்குப் பாதுகாப்பாக இந்த உத்தரியத்தை முட்டாக்காகப் போட்டுச் செல்லட்டும்'' என்று கூறிவிட்டுச்சென்றான்.

தந்தையின் கருத்தை உணர்ந்துகொண்டான் தெனாலிராமனின் மகன்.

தந்தையின் உத்தரியத்தைத்தலையை நன்கு மூடியவாறு போட்டுக் கொண்டான். பிறகு காவலர்கள் அறியாவண்ணம் ஒவ்வொரு ரோஜா மலராக வாய் விட்டு மென்று தின்றுவிட்டான்.

காவலர்கள் தெனாலிராமன் மகனை மன்னர் முன்கொண்டு சென்று நிறுத்தினர்.

''மன்னர் பெருமானே! இந்தப்பையன் தெனாலிராமனின் மகன். அரண்மனைப் பூந்தோட்டத்தில் புகுந்து ரோஜா மலர்களைத் திருடிவிட்டான். அதனால் இவனைக் கையுங்களவுமாகப் பிடித்துவிட்டோம் என்று காவலர் கூறினார்கள்.

''சிறுவன் கைகளில் அத்தனை ரோஜா மலர்களும் இருக்கின்றன. தாங்கள் வேண்டுமானாலும் பார்த்துக்கொள்ளுங்கள்'' என்று கூறியவாறு சிறுவன் முட்டாக்குப் போட்டிருந்த உத்தரியத்தைக் காவலர்கள் அகற்றினர்.

சிறுவன் கையில் ஒரு ரோஜா மலர்கூட இல்லை. அத்தனையையும் அவன் வழியிலேயே தின்றுவிட்டான்.

''பையன் கையில் ஒரு ரோஜா மலரையும் பார்க்கமுடியவில்லையே'' எனக்கூறிய மன்னர், ''பையா, என்ன நடந்தது சொல்?'' என அவனைக்கேட்டார்.

பையன் மன்னரைத் தாழ்ந்து வணங்கி ''மன்னர் பெருமானே, நான் ஒரு பாவமும் செய்யவில்லை. என் தந்தைமீது இந்தக் காவலர்களுக்குப் பொறாமை.. என் தந்தைக்குக் கெட்ட பெயர் உண்டாக்கவேண்டும் என்ற நோக்கத்தில் என் மீது திருட்டுக்குற்றம் சுமத்தி, என்னை இங்கே இழுத்து வந்திருக்கின்றனர்'' என்று சிறுவன் சாமர்த்தியமாகப் பேசினான்.

மன்னர் தெனாலிராமனின் மகனை விடுதலை செய்துவிட்டு, காவலர்களைக் கண்டித்து அனுப்பினார். ★

தயாரிப்பு:-

'ஸ்ரீ'




## அழகான பூ

அக்கா வளர்த்த பூச்செடியில்
அழகாய் ஒருபூப் பூத்திருக்கு
அகிலாத் தங்கை ஆசையுடன்
அதனைப் பார்க்கும் அழகைப்பார்

சின்னச் சின்ன மொட்டுகளாம்
சிவப்பாய் நடுவில் ஒரு பூவாம்
இன்னும் நிறையப் பூப்பூக்கும்
இனிமேல் தினமும் பார்த்திடலாம்

பட்டு மெத்தை போலிருக்கும்
வாசம் மூக்கில் மிகவீசும்
கிட்டப் போனால் அக்காவின்
கோபம் கண்டு பயமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மேகங்கள் தோன்றும் உதயம்

### அத்தியாயம் 2

வீட்டை விட்டுப் புறப்பட்டு வந்தபின், அன்று அவளைத் தேடிக்கொண்டு, அலுவலகத்திற்கு வந்திருந்த தாயாரைக் கண்டதும், மனதில் ஏதோவொன்று கொழுவிக்கொண்டு இழுத்தது. சிறுவயதில் அவளுடைய இஷ்டத்துக்கு இசைந்து கொடுத்து வளர்த்த, தாயாரின் அப்பாவித்தனமான அந்தஅன்பை; நினைத்துப் பார்த்தாள் வித்தியா.

'புள்ள நீ உன்ர இஷ்டத்துக்கு வெளிக்கிட்டு வந்திருக்கிறாய். அதுவும் திருமணமில்லாமல் வாழ்ந்து கொண்டிருக்கிறாய். நாளைக்கு உன்னை அவன் கைவிட்டு விட்டால்......'— அவள் ஒன்றுமே கூறவில்லை.

ஐந்து வருடங்களாக அவனுடன் பழகி, அவனுடைய பலத்தையும், பலவீனத்தையும் முற்றுமுழுதாகப் புரிந்து கொண்டு, பரஸ்பர நம்பிக்கையில் கட்டியெழுப்பப்பட்ட அந்த வாழ்க்கையில், இனி சலனத்திற்கோ இடமில்லை!

'புள்ள சீதனமொன்றுமில்லாமல், வெறுங்கையோட போயிருக்கிறாய். அவன் கேட்காவிட்டாலும், நாளைக்கு அவனுடைய குடும்பத்தினர் கேட்கலாம். அல்லது உனக்கொரு குழந்தை குட்டி வந்துவிட்டால்... உனக்குத் தேவையில்லாதது அதுகளுக்குத் தேவைப்படும். ஏதோ... வித்தியா நாளைய உன்னுடைய வாழ்ச்கையை யோசிச்சுப்பார்......' —

அறுபது வருட வாழ்க்கை அனுபவம் பேசிக் கொண்டிருந்தது.

அந்த எச்சரிக்கைக்குக் கூட வித்தியா பதிலளிக்கவில்லை. அலுவலக உணவு விடுதியில், தாயாரை அன்போடு உபசரித்து அனுப்பிவிட்டாளேயொழிய, இதனைப்பற்றி ஒருவார்த்தையும் பேசவில்லை. அவளல்ல! அவளுடைய ஸ்தானத்திலுள்ள எல்லாத் தாய்மார்களுமே அதனைத்தான் கூறுவார்கள்.

முதலில் கணவனுடனும் பிள்ளைகளுடனும் வாழ்ந்தவள்; இப்போது அவளுடைய உறவினர்களை நம்பி வாழ்கின்றாள். மூன்று ஆண்மக்களும் பிரச்சினை காரணமாக, வெளிநாடு போய்விட்டார்கள். பெண்பிள்ளைகளில் மூத்தவள்; திருமணம் முடித்து வெளிநாடு போய்விட்டாள். கடைக்குட்டி வித்தியாவைத் தவிர பிள்ளைகள் அனைவரும் வெளிநாடு சென்றுவிடவே, கணவனை நம்பி வாழ்ந்தவள் கணவனும் இறந்தபின் தன்னுடைய உறவினர்க்குக் கட்டுப்பட்டு வாழத் தொடங்கி விட்டாள்.

அடக்கம் என்கின்ற அடிமை விலங்கையும் பெண்களுக்கு ஆபரணமாகச்சூடி, அழகுபார்க்கும் சமுதாய பழம் பெருமைக்குள் ஐக்கியப்பட்டு கணவனுக்குப் பின்னும் வலிய தனக்குத்தானே ஒரு விலங்கைப் பூட்டிக்கொண்டு அந்த அடக்கத்துக்குள் தனது சுய சிந்தனை, விருப்பு, வெறுப்பு அத்தனையையும் அடகு வைத்துக் கொண்டாள். பெண்கள் தங்களுடைய தன்னம்பிக்கையை இழப்பதற்கும், இந்த சமூக வரம்புகள்தான் காரணமோ...?

'புள்ள! அப்பாவும் இறந்து போயிட்டார். அண்ணைமாரும் வெளிநாட்டிலே! அவர்களுடைய துணையில்லாமல நாங்களிருவரும் தனிய வாழ முடியுமே...'

'அம்மா! ஒருவருக்கொருவர் துணையாக வாழ வேண்டும்! அதற்காக அடங்கி வாழ முடியுமே...' திருப்பித் தாயிடம் கேட்க வேண்டும் போலிருக்கும் வித்தியாவுக்கு! வித்தியாவின் திருமண விஷயத்தையும் அவள் எதிர்க்கவில்லை. ஆனல் தன்னுடைய உறவினர்களுக்கெதிராக இந்தத் திருமணத்தை முன்னின்று நடத்த அவளுக்குத் துணிவில்லை.

'அம்மா! நான் என்றைக்குமே தவறான வழிக்குப் போக மாட்டன். என்னில எனக்கு அசையாத நம்பிக்கை இருக்கு. ஆனபடியால் என்னுடைய வாழ்க்கையை நானே தேடிக் கொள்ளப்போறன்...'— வித்தியா புறப்பட்டபோது ஒருவருமே அவளைத் தடுக்கவில்லை. அவளுடைய பிடிவாதம், கொள்கை அவர்களுக்கு மட்டுமல்ல; அந்த ஊருக்கே தெரியும். ஊரறிய வேண்டியேற்பட்டது; தந்தையாரின் மரணச்சடங்கில் தான்!

அப்போது வித்தியா உயர்தர வகுப்பில் படித்துக் கொண்டிருந்தாள். மூன்று ஆண்மக்களும் வெளிநாட்டில் என்பதால் யாரைக்கொண்டு சமயச்சடங்குகளை நிறைவேற்றுவது என்ற பிரச்சினை எழுந்தது. வித்தியாவே முன்வந்து அவற்றை நிறைவேற்றத் துணிந்தபோது, அந்த ஊரே வாயடைத்துவிட்டது. சுடலை வரையும் சென்று கொள்ளிக் கடனை நிறைவு

- அநுராசன் மகன் -

செய்து விட்டு வந்தாள்.

'இதிலை என்னம்மா புதுமையிருக்கு! இனி அப்படியான ஒரு காலந்தான் வரப்போகுது. நாங்களே அதனைத் தொடக்கிவிட்டால் மற்றையோருக்குப் பிரச்சினையில்லாமலிக்கும்...''

அதற்குப்பின் அவர்களுக்கும் அந்தப் பிடிவாதம் பழகிப்போய் விட்டது. 'அம்மா என்னைப்பற்றி ஒன்றுக்குமே கவலைப்பட வேண்டாம். தோல்வியோ... வெற்றியோ அதை ஏற்றுக் கொள்ளுகின்ற மனோபலம் எனக்கிருக்கு. நீங்கள் உங்கடைஉடம்பைப் பார்த்துக் கொள்ளுங்கோ.... ஏதாவது தேவையாயிருந்தால் சொல்லியனுப்புங்கோ...'

தாயை ஆறுதல் கூறி அனுப்பி வைத்தாள் வித்தியா.

அன்று நடந்த சம்பவத்தைக் கூறி, முடிப்பதற்கிடையில், விஜயன் தூங்கிவிட்டான். அவனை உலுக்கியபோது குறுஞ்சிரிப்பொன்று அந்த முகத்தில் அரும்பி மறைந்தது.

'போலி நித்திரை கொள்கிறீர்களோ...... செல்லமாகச் சிணுங்கினுள் வித்தியா. 'இல்லை வித்தியா! உம்முடைய வாழ்க்கையை என்னட்ட ஒப்படைச்சிருக்கிறீர், எங்களுடைய வாழ்க்கையைப் பற்றிச் சிந்திச்சுக் கொண்டிருக்கிறன்...'

'அதற்கென்ன இவ்வளவு அவசரம்? யோசிக்கிறதுக்கு இன்னும் நாளிருக்கு...'

'நானும் அப்படித்தானிருந்தனன். ஆனல் உம்முடைய வேகத்தையும், அவசரத்தையும் பார்த்தால்...'— அவன் கூறிமுடிப்பதற்கிடையில் வாயைப் பொத்தினள் வித்தியா. நாணத்தில், வட்டவடிவமான அந்த மதிமுகம்; செவ்வானமாக மிளிர்ந்து கொண்டிருந்தது.

பார்வதி மட்டும் இன்னும் தூங்கவேயில்லை. வெளிவிறுந்தையில் உட்கார்ந்தபடி கேற்றையே பார்த்துக் கொண்டிருந்தாள். இரண்டாவது மகன் ஜெகன் மட்டக்களப்பில் விஞ்ஞான பட்டதாரி ஆசிரியனுகக் கடமையாற்றுகிறன். இளையவன் தீபன் உயர்தர வகுப்பில் பயின்று கொண்டிருக்கிறன். யாழ்நகருக்கு டியூசனுக்காகச் சென்றவன் இன்னும் திரும்பவேயில்லை.

வழமையாக ஆறு மணிக்கு முன்பே வந்து விடுவான். இப்போது சில நாட்களாக, இரவு நேரங்கழித்தே வருகிறன். இப்போதைய சீரற்ற சூழ்நிலைகளும் அவனுக்குச் சாட்டாக அமைந்து விட்டன. கேட்டால் ஏதாவது காலநிலைக்குரிய காரணத்தைக் கூறிவிடுவான். அவன் நகருக்குச் சென்று வருவதை அவள் விரும்பவில்லை. என்ன செய்வது...? அவனையும் படிப்பிக்க வேண்டும். படிப்பு வேண்டுமா; பாதுகாப்பு வேண்டுமா? பாதுகாப்பு என்ற போர்வைக்குள் அவனை எத்தனை நாட்களுக்குத்தான் மறைத்து வைத்திருப்பது? அவனை எங்கேயும் வெளிநாட்டிற்கு அனுப்பிவிடலாமென்றல் அதற்கும் அவளுடைய மனம் சம்மதிக்கவில்லை. கண்காணுத தேசத்துக்குப் பிள்ளையை அனுப்பி, அங்கே அது என்ன கஷ்டத்தை எதிர்நோக்குமோ? எல்லாமே அவளைக் குடைந்து கொண்டிருந்தது. அப்படியே அயர்ந்து தூங்கி விட்டாள்.

படலையின் மெல்லிய 'கிரீச்'என்றசத்தத்துக்கு எழுந்து பார்த்தாள். தீபன் வந்துவிட்டான்! ஆனல் அவனது கோலம்; சாக்கடையில் விழுந்து, உடை முழுவதும் அழுக்காகி, துர்நாற்றம் வீசிக்கொண்டிருந்தது. விழுந்ததில் முழங்காலில் பலத்த அடி பட்டிருக்க வேண்டும். மிக மெதுவாக நொண்டிக் கொண்டு வந்தான். அவனைக் கண்டதும் பார்வதி பதறிப் போய்விட்டாள்.

,என்னடா நடந்தது...?'

—'டவுனில ஆமிக்காரர் சுட்டவங்கள். நல்லகாலம் சாக்கடைக்குள்ள விழுந்ததால ஒளிச்சிருந்தனன். என்னேட வந்த குமாருக்கு சூடு விழுந்துபோச்சு ஆஸ்பத்திரிக்குக் கொண்டு போயிருக்கினம். அவையளுக்கும் சொல்லியனுப்பிப் போட்டுத் தான் வாறன்...'

குமார் அந்த ஊரைச் சேர்ந்தவன். அவனுடன் ஒன்ருகவே டியூசனுக்குச் சென்று வருபவன்.

'ஐயோ என்ர முருகா...' கந்தசுவாமி ஆலயமிருந்த திசையை நோக்கிக் கைகளைக் கூப்பினுள். இனம் புரியாத பயம் பார்வதியைப் பிடித்துக் கொண்டது. அன்றையோடு அவனை யாழ்நகருக்கு டியூசனுக்கு அனுப்புவதை நிறுத்திக் கொண்டாள். அவனும் அன்றிரவு தூங்கவேயில்லை. கடுமையாகச் சிந்தித்துக்கொண்டிருந்தான். அதனைத் திசைதிருப்பி ஆறுதலளித்தாள் பார்வதி. 'தம்பி! சின்ன அண்ணர் இன்றைக்குச் சடிதம் போட்டிருக்கிறர். வருஷப்பிறப்புக்கு வருகின்றாராம்...'

—அவள் கூறியது அவனுக்குக் கேட்டதோ. என்னவோ அவன் அந்த பயங்கரமான அனுபவத்தைப் பற்றிய சிந்தனையிலேயே ஆழ்ந்திருந்தான்.

### அத்தியாயம் 3

புதுவருடப் பிறப்பிற்கு இரு கிழமைகளே இருந்தன. ஜெகனும், மட்டக்களப்பிலிருந்து வந்திருந்தான். வித்தியாவும், விஜயனும் இல்லறத்தில் இணைந்தபின், முதலாவதாக எதிர்நோக்குகின்ற, புதுவருடமென்பதால், குதூகலம் களை கட்டியிருந்தது. அன்று; டவுனுக்குச் சென்று, அனைவருக்கும் உடுபுடைவை வாங்கினுள் பார்வதி.

''அம்மா!எனக்கொன்றும் வேண்டவேண்டாம் என...'' - ஜெகன் மறுத்தான். பார்வதிக்கு ஆச்சரியமாகவிருந்தது. புதுவருடம், தீபாவளி என்றல், அவனைத் தொந்தரவு செய்ய ஆரம்பித்து விடுவான். முன்னம்; எந்தவொரு சிந்தனையும் கவலையுமில்லாமல், சுற்றித் திரிந்தவன். இப்போது தான் சமூகத்தை நினைத்துக் கவலைப்பட்டான்.

''நாங்கள் மட்டுமா கொண்டாடுறம்? எல்லாச் சனமும் தானே கொண்டாடுதுகள். பெரிசா இப்ப என்னத்தையடா கொண்டாடுறம். ஒரு நல்ல நாள்... பெருநாளில் கோடியுடுத்திறம்...'' — அவன் மறுத்தபோதிலும், அவனுக்கும் காற்சட்டை, சேர்ட் வாங்கியிருந்தாள் பார்வதி. கடையிலிருந்து வந்த போது, வித்தியா மட்டும் வேலையால் வந்திருந்தாள். அவனை இறக்கி விட்டு ஒரு நண்பனைச் சந்திப்பதற்காகச்சென்று விட்டான் விஜயன்.

திரும்பி வரும்போது தான், எதிர்பாராத விதமாக அந்த விபத்து நடந்தது. பிரதான வீதியில், அவர்களுடைய வீட்டுக்குச்செல்லுகின்ற, ஒழுங்கைக்கூடாக மோட்டார் சைக்கிளைத் திருப்ப, எதிரே வந்த இராணுவ வாகனத்திலிருந்து, துப்பாக்கி வேட்டுக்கள் தீர்ந்தன. அவர்களைக்கண்டு, தப்பியோட முயன்றிருப்பான்; என நினைத்தார்களோ......... அருகில் வந்து சோதித்த போது, அவனுடைய அலுவலக அடையாள அட்டை சிக்கியது. பிரேதத்தை ஆஸ்பத்திரியில் அனுமதித்து விட்டுச் சென்றுவிட்டார்கள். சில மணி நேரத்துக்குள்; அவர்களுக்கும் செய்தி எட்டிவிட்டது. ஜெகன் சுறுசுறுப்படைந்தான். பார்வதிக்கும், வித்தியாவுக்கும் செய்தியைக் கூறுமல், காரைப்பிடித்துக்கொண்டு, ஆஸ்பத்திரிக்குச் செல்ல முயன்றன்.

அதற்கிடையில்; விவரம் தெரியாத ஒருவர், அவர்களுக்கு முன்னிலையில் கூறிவிடவே, தலையைப் பிடித்தபடி, நிலத்தில் குந்திய வித்தியா, அப்படியே மயங்கி விட்டாள். முற்றத்து மணலில், புரண்டெழுந்த பார்வதியின் ஒப்பாரி, அந்த இரவையும் கிழித்துக்கொண்டு, அந்த ஊரைத் துயிலெழுப்பியது.

அங்கு வந்திருந்த ஒரு பெண்மணி, ஜெகனின் காதுகளுக்குள்; எதை யோகூறவே, வித்தியாவையும் காரில் ஏற்றிக் கொண்டு, ஆஸ்பத்திரியை நோக்கி விரைந்

## சஞ்சீவி குறுநாவல்

தான் ஜெகன். வார்ட்டில் அனுமதிக்கப்பட்ட வித்தியாவுக்கு, உடனடியாக வைத்திய சிகிச்சை அளிக்கப்பட்டது. அதிர்ச்சியினல் கருச்சிதைவு, ஏற்பட்டிருந்தது. தொடர்ச்சியாகவிருந்த இரத்தப்போக்கு, உடல் நிலையை மோசமாகப் பாதித்துப் பலவீனமடையச் செய்திருந்தது.

ஓரிரு தினங்களில், அவளை அழைத்துச்செல்லலாம் என்றிருந்த ஜெகனுக்கு, ஏமாற்றமாகவிருந்தது. டாக்டர்கள் சம்மதிக்கவில்லை. இறுதியில்; அவளில்லாமலே, அவளால் வழியனுப்பி வைக்காமலே அவனுடைய இறுதி யாத்திரை தயாரானது.

''தம்பி! என்ன இருந்தாலும் கட்டிய மனைவியும் இருக்கேக்கே...'' கூட்டத்தில் ஒருவர் கேட்டார்.

''ஏன் இப்ப கட்டிய மனைவி...?''

''ஏன்... என்று கேட்கிறீர். அவளுடைய கடமையும் இருக்குத் தானே...'' ஜெகனுக்குக் கோபம் வந்தது. ''அந்தக் கடமைகள் எங்களுக்குத் தெரியும். சும்மா..தாலியைகழற்றுறதும், மாலையை மாத்துறதும்... சாஸ்திரம், சடங்கென்று கூறிக்கொண்டு, நொந்து போயிருக்கிறவளை, பைத்தியக்காரியாக்கிற வேலை...''— சீறிச்சினந்து கொண்டிருந்த அவனைக் கண்டதும், ஒதுங்கி விட்டார், அந்தப் பெரியவர்.

ஏதோ... நாங்கள் எங்கடை கடமையைச் சொல்லிவிட்டோம்...?''

அன்றையோடு, அவளுடைய பூவையும், பொட்டையும் பறிமுதல் செய்து, சகுனத்திற்கே உதவாதவளாக, மங்களம் என்ற வார்த்தைக்கே அருகதையற்றவளாக வாழவேண்டும்! அந்த நேரத்தில், ஒவ்வொருவருடைய மனோநிலையையும் சிந்தித்துப் பார்க்கவேண்டும். சாஸ்திரம், சடங்கென்று கூறிக்கொண்டு, இருமணத்தில் நடந்த ஒவ்வொன்றையும் ஞாபகப்படுத்தி, என்னத்திற்காக, ஒருபெண்ணைத் துன்புறுத்த வேண்டும்? அந்தக் கொடுமையைக் காணுகின்ற, வாழப் போகின்ற இளசுகளின் மனோநிலை, எவ்வளவு தூரம் பாதிப்படையும். உடன் சட்டையே றுகின்ற வழமையிலிருந்து, உயிரோடு அவளை வாழா வெட்டியாகவே, வாழச் செய்வதன்மூலம் சமூகம் ஓரளவு விட்டுக்கொடுத்துள்ளது.

சம்பிரதாயத்தை ஏற்காமல் இணைந்த உறவு; சடங்கெதுவுமில்லாமலேயே அவளிடமிருந்து பிரிந்து கொண்டது.

மாலை மங்கி, எங்கும் இருள் கவிழ ஆரம்பித்தது. ஒளியாக விளங்கிய அவனும் போனபின், இனியென்ன இருக்கின்றது? அந்த வீடு இன்னும் இருளாகவேயிருந்தது. பார்வதி, அப்போது தான் ஆஸ்பத்திரியிலிருந்து வந்திருந்தாள். வீட்டுவேலைகள், ஆஸ்பத்திரியென்று ஓயாமல் ஓடித்திரிந்ததில் உடல் சோர்வடைந்திருந்தது. அவளுடைய உற்சாகம், குதூகலம் எல்லாமே எங்கேயோ ஓடி மறைந்திருந்தது. அந்த சோர்வுக்கும், சலிப்புக்கும், காரணம் மனச்சோர்வா? விளக்கேற்றுவதற்கு மறந்து,இலேசாக கண்ணயர்ந்து விட்டாள்.சைக்கிளில் தனது நண்பரொருவனுடன் வந்திறங்கிய தீபனின் படபடப்பு, அவளுடைய தூக்கத்தைக் கலைத்தது. அவன்தான், விளக்கைப் போட்டான். அறைக்குள் சென்று அலுமாரியில் கிடந்த புதுவருட உடுப்பை அணிந்து கொண்டான். அவனை அதிசயமாகப் பார்த்தாள் பார்வதி. இந்த நேரம் எங்கே போவதற்காக, அலங்கரிக்கின்றன்?

''தீபன்! எங்கேயடா போகப் போருய்?...''

''ஒரு சிநேகிதப்பெடியன், புதுவருஷத்துக்கு தன்னுடைய வீட்டுக்கு வரச்சொன்னவன்...?''

'அதற்காக... இந்த நேரத்திலையாபோறது..,' கண்டிப்புடன், நிமிர்ந்து அவனை அவதானித்தாள். தீபனைப் பார்க்கின்றவர்கள்; விஜயனின் தம்பியென்று உடனேயே கூறிவிடுவார்கள். அவனுடைய சாயலும், புத்தாடையுடன் அவனிருந்த பொலிவும் விஜயனை ஞாபகப்படுத்தியிருக்க வேண்டும். கண்களைத் துடைத்துக் கொண்டாள்.

''அம்மா! இன்டைக்கு சாப்பிடுவமே...''

''ஏனடா இன்டைக்கு வேளைக்கு... அவளுக்குத் திருப்பிக் கேட்க வேண்டும் போலிருந்தது. ஒருவேளை, அவனுக்கு விருப்பமான கறி சமைத்திருப்பதால்... கேட்கிருனே...? இன்றுகாலை அவன் மீன் வாங்கும் போது, அவன் ஆசையோடு கேட்டான்.

''அம்மா!இன்டைக்குக் கணவாய் வாங்குவம்...'' அவள் மறுக்கவில்லை''

''அம்மா ! நீயும் வா... இரண்டு பேரும்ஒன்ருய்ச் சாப்பிடுவம்...? அவன் என்னத்திற்காக; இன்று அவளையும் சாப்பாட்டுக்கு அழைக்கின்றன்...? அவளோடு இறுதியாக உடனிருந்து சாப்பிட வேண்டும் என்று விருப்புகின்ருனு...? பாவம்; அவள் எப்படி அதை அறிவாள்? பார்வதியின் முகத்தை, நிதானமாக ஆழமாக ஒரு தரம் பார்த்தான்.

''அம்மா! என்னை மன்னித்துக் கொள்ளம்மா. உன்னுடைய பிள்ளை,உன்னுடைய குடும்பம் என்ற உறவுமுறையிலிருந்து விடுபட்டு, இனம், சமுதாயம் என்கின்ற பரந்துபட்ட உலகைக் காக்கப் போகின்றேன்...''

''அம்மா! நான் போயிட்டுவாறன்......''

அவன் சென்று விட்டான். பட்டாசு வெடிச் சத்தங்கள் புதுவருடத்தை வரவேற்க முழங்கித்தள்ளின. வெடித்த

(7 ஆம் பக்கம் பார்க்க)

## புயல்வீசும் பூமி

அன்னை அழுவதற்கு இங்கில்லை
அயலவரும் வந்து துணைசெய்யார்;
மண்ணை அழித்துவரும் தீயினிலே
மடியும் பசுங்கொடிகள் எத்தனை?
என்னை வருத்துகின்ற விடுதலைத் தீ
எப்போதும் அணையாது; இனிமை மிகு
கன்னல் பாகுடனே கற்கண்டைக்
கலந்ததுபோல் இனிப்பதல்ல தமிழீழம்!

இரத்தத்தைச் சிந்தி இறைத்தாலும்...
இளைய தலைமுறையே அழிந்தாலும்...
சிரத்தையுடன் ஒன்ருகத் திரளாமல்
செங்குருதி சிந்தியும் பயனென்ன?
வருத்தும் விடுதலையின் கனவுகளை
வாலிபரின் தலைமீது சுமத்திவிட்டு
கருத்துக்களை மேடையிலே குவிப்பதனுல்
கடமைகள் தீர்ந்திடுமோ மண்மீது.

சோலையிலே வந்து சுதியோடு வீசுகின்ற
சுகமான தென்றலினைக் கண்டபூமி;
நீலக் கடலலையைக் கிளப்பிவிடும்
நீண்ட புயலின்கை சிக்கியபின்
வேலையென்ன நமக்கு வீட்டினிலே?
விழித்தெழுவோம்.. மண்ணின் விடுதலையால்
நாளை மலர்கின்ற சுதந்திரத்தை
நிம்மதியாய் நாமடையப் புறப்படுவோம்!

சில்லறைக்கு வாங்கும் சரக்கல்ல 'தமிழீழம்'!
சிந்தை கவரும் வானக் கதிருமல்ல;
கொல்லையிலே பூக்கும் மல்லிகையுமல்ல;
கொடியினிலே தவழும் நறுங்கனியுமல்ல;
எல்லையிலே நின்றெம்மேல் எந்நாளும்
'செல்'லடித்து... நம்சுடலை முழுவதுமே
கல்லறையின் பூக்களென நிறைந்தபின்னே
காணுகின்ற விடுதலையே.. ஈழமாகும்!

பேழையிலே வைத்துப் பிணம்போகும்
பின்தொடர்ந்து மக்கள்...மனம்போகும்
ஏழை இளைஞனுக்கேன் இத்தனை பேர்?
எத்தனை யெத்தனை ஆயிரம் மக்கள்?
சூளையிலே வைத்த செங்கல்லைப் போலே
சுகமின்றி வாடுகின்ற தமிழினம்
நாளை மலர்கின்ற நம்மவரின் ஆட்சியிலே
நிம்மதியைக் காண்பர்... நிச்சயமாய்!

பொம்பர் அடிக்கும் வேளையிலே
பங்கருக்குள் பதுங்கிவிட வேண்டும்
'கொம்பர்' களாய்த் தானிருந்தபோதும்
குண்டுகளுக் கஞ்சாதோர் உண்டோ?
வம்பர் சிலரால் அனுப்பிய வரைபடத்தை
வைத்தெம்மேல் குண்டுமழைபொழிகையிலே
அம்பெனவே விரைந்துவரும் நம்மிளைஞர்
அடிக்கின்ற பிப்ரிக்கலிபருக்கு' நிகரேது?

சாக்காட்டில் நின்று சமரிடும் வேளையிலே
சரிந்துவிழும் பிணமலைகள் எத்தனை?
'சூ'க் காட்டி யெம்மை அழித்திடவே
துடிக்கின்ற துட்டரினைத் தொலைப்பதற்கு
நாட்காட்டிவேண்டாம்......மனம்வேண்டும்
நிமிர்ந்து போராடும் போதினிலே
கூட்டாகத் தோழர்களை இழக்கும்போது...
தோன்றுகின்ற கவலைகளை மறக்கவேண்டும்

### குறுங்காவியம்

இந்தப் புயலினுல் எத்தனை இழப்புக்கள்?
எத்தனை பலமுள்ள மரங்களினை
சொந்த மண்ணுக்காய்ச் சரித்துவிட்டோம்?
சுதந்திர விடிவிற் சுகம்தாண முன்பே
அந்தரத்தில் வந்தெம்மை ஆட்டுகின்ற
அடிமைப் புயலிலே அலைந்து சாகும்
இந்த மண்மீது எம்மரசை நாட்டிடவே
இன்னும் ஏன் தயக்கம்?...எழுந்திடுவீர்!

நாக்கில் பழம்பெருமை பேசுவதால்
நாமடையும் நன்மைகள்தான் என்ன?
ஊக்கமுடன் ஒன்ருகி... உறுதியுடன்
திரண்டுவிட்டால்
உயர்த்திடலாம் தமிழினத்தின் பெருமையினை
தூக்குக் கயிறுதனைத் தொட்டிலென
எண்ணிவிடின்
துணிவுடனே முன்னணியில் திகழ்ந்திடலாம்;
'ஏக்கே'யைத் திரமுடன் ஏந்திவிட்டால்
எமமவரின் கண்ணீரைத் துடைத்திடலாம்!

தாமரையின் பூவைத் தளிர்க்கரங்கள் கொய்ய
தாவிவரும் வண்டு தவிப்புடனே செல்லும்.
தேமதுரமுண்டு மதிமயக்கத் தோன்ற
தென்னையிலே மந்தி உறக்கமது கொள்ளும்!
பூமகளின் மேனி பொலிவுடனே தோன்ற
பொற்கதிரோன் கொஞ்சிப் புன்னகையை
வீசும்
திமையினைக் கண்டு திரண்டுவரு மலைமகள்
தினமலறிப் பொங்கியெழும் ஈழத்தமிழர்
மண்ணில்...

(வேறு)
கல்லறைகள் யாவும் சில்லறைகள்போலக்
கண்கள் முன் தெரிகையிலே...
நல்லறங்கள் நாசமுற...நரிக்கூட்டம் ஊளையிட
இல்லறத்தில் பிறந்திடுமோ இன்பம்?

மேழி பிடித்து மேன்மையினைக் கண்டோர்
ஆழியிலே சூழும் மீன்களினை உண்டோர்
பாழும் 'ஷெல்'லடிக்கும் 'பொம்மருக்'கும்
பலியாகி
நாளும் அழிந்துவர நம்மினமும்
தூங்குவதோ?

சொத்துக்கள் போயின... சொந்தங்கள்
போயின...
அத்தனையும் போனபின்னும் அரிதாக
இருந்தவொரு
முத்தான கற்பினையும் மூடஇனம்
அழித்தபின்னே
இத்தரையில் இன்னுமென்ன உறக்கமடா?

(வளரும்)

- மு. வே. யோ. வாஞ்சிநாதன் -

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# மனிதர் மனோபாவத்தை அறிய

# ரஷ்யா கண்டு பிடித்த கமரா

மனிதர்களின் உணர்ச்சிகள், அலை வடிவங்களாக வெளிப்பட்டு அவர்களை வியாபித்திருப்பதாக விஞ்ஞானிகள் கண்டு பிடித்திருக்கிறார்கள்.

இதை Enegry Band சக்தி வளையம் என்று குறிப்பிடுகிறார்கள்.

சக்தி வளையங்கள் மனிதனின் உள் தன்மையை எடுத்து விளக்குகிறது. இந்த அலைகள் பல வர்ணங்களில் வெளிப்படுகின்றன. வர்ணங்கள் அவர் அவர் குணம்சத்தைப் பொறுத்தது. குணங்கள் மாற மாற வர்ணங்களும் மாறி அமையும்,

மனிதர்களின் உள் உறுப்புக்களை (X-ray) புதிர்க்கதிர் மூலம் படம் பிடிக்கப்படுகிறது. அதே போல் சக்தி வளையமும் அதி சக்தி வாய்ந்த (Cemera) மூலம் மிகவும் தெளிவாகப் பதியவைக்கப்படுகிறது. இந்தக் கருவி கிரிலியன் என்னும் சோவியத் நாட்டு விஞ்ஞானியால் உருவாக்கப்பட்டது. அவரின் பெயராலேயே 'கிரிலியன் கமரா' என்று அழைக்கப்படுகின்றது. நாற்பதுக்கு மேற்பட்ட நாடுகளில் இந்த நவீனக் கருவி புழக்கத்திலிருக்கிறது.

கிரிலியன் கமரா மூலம் பதிய வைக்கும் வர்ண சக்தி வளையங்கள் மூலம், மனிதர்களின் மனோபாவங்கள் அல்லது அவர்களின் குணங்களை இனங்கண்டு கொள்ளலாம்.

கிரிலியன் புகைப்பட நிபுணர்களில் தலை சிறந்து விளங்குபவர் பேராசிரியர் பிராங்கோ பரணஸ்கி. இவர் ஒரு பிரபல அமெரிக்க விஞ்ஞானி. இந்தக் கலையில் (மனிதர்களின் உள் தன்மையை அறிவதில்) நல்ல அறிவும் ஆற்றலும் பெற்றிருக்கிறார், சக்தி வளையங்களை கமரா இன்றிப் பார்ப்பது மிகவும் கடினம். அபூர்வமாக ஒரு சிலர் இதைப் பார்ப்பதற்கு இயற்கைச் சக்தி பெற்றிருக்கிறார்கள். இவர்களில் பேராசிரியரும் ஒருவர்.

பல ஆயிரக்கணக்கான பிரமுகர்களை பேராசிரியர் பேட்டி கண்டு ஆராய்ச்சி நடத்தியிருக்கிறார். இவர்களில் ஞான மார்க்கத்தைப் பின்பற்றுபவர்கள், நுண்ணறிவாளர்கள், நற்குண நல்லொழுக்கமுள்ளோர், அரச குடும்பத்தினர், தொழில் அதிபர்கள், தனவான்கள் அடங்குவர்.

பேராசிரியருக்கும் பகவான் ஸ்ரீ சத்திய சாயி பாபாவிற்கும் ஏற்பட்ட சந்திப்பு மிகவும் விசித்திரமானது. பேராசிரியர் புனர் ஜன்மம், கர்ம வினை முதலிய நூல்களை எழுதியுள்ளார். தன் படைப்புகளுக்கு முன்னுரை வழங்கும்படி எழுத்துமூலம் பாபாவை அணுகியிருந்தார். பாபாவின் அவதாரத்தின் நோக்கம் என்னவென்று அறியாத பேராசிரியர் தன் நூல்களின்

## கிரிலியன் கமராத் துணையுடன் பாபாவை ஆராய்ந்த பேராசிரியர்

உரிமைப் பங்கையும் கொடுப்பதற்கு முன் வந்தார். பாபாவிடமிருந்து பதிலே கிடைக்கவில்லை. நாட்கள் பல சென்றன.

ஓர் இரவு பேராசிரியர் தன் நண்பரின் இல்லத்தில் தங்குவதற்காகச் சென்றார். அப்பொழுது அங்கு சாயி பஜனை உச்சக்கட்டத்தில் நடந்து கொண்டிருந்தது. பஜனையில் அவர் மனம் நாடவில்லை. அன்றைய பிரயாணக் களைப்பும் அவரைப் பீடித்திருந்தது. ஓய்வு எடுக்கும் பொருட்டு அவருக்கு ஒதுக்கப்பட்ட அறையை அடைந்தார். அங்குள்ள விளக்குகளை எல்லாம் அணைத்துக் கட்டிலில் நீட்டி நிமிர்ந்து சௌகரியமாகப் படுத்துக் கொண்டார். சில நிமிடங்கள் சென்றன. அவர் எதிர்பாராத விதமாக அறையிலுள்ள மெழுகுவர்த்தி திடீரெனச் சுடர்விட்டு எரியத் தொடங்கிற்று. அதன் பிரகாசமான ஒளியில் எதிரிலுள்ள பாபாவின் படம் தெளிவாகத் தென்பட்டது. பேராசிரியர் கூறுகின்றார். 'பாபாவின் படத்திலுள்ள முகம் அங்கும் இங்கும் அசையத் தொடங்கிற்று. என்னை அவர் அருகே வரும்படி சைகை செய்தார். அவரின் பார்வை என்னை ஊடுருவிச் சென்றது. சில வினாடிகளில் மெழுகுவர்த்தியும் அணைந்து போயிற்று. எல்லாம் எனக்கு அதிசயமாகத் தோன்றிற்று, அறையில் நான் தன்னந்தனியே இருந்தேன். வேறு எவரும் என் அறைக்குள் பிரவேசிக்கவில்லை. மெழுகுவர்த்தியும் தன்னிச்சையாகவே எரியத் தொடங்கிற்று. நடந்தவைகளைப் பற்றி என்னால் ஒரு வித விளக்கமும் கூற முடியவில்லை.

பாபாவை மையமாக வைத்துக் கூறுவதெல்லாம் என்மனம் ஏற்கவில்லை. பாபாவின் கரத்தின் ஸ்பரிச உணர்ச்சி நோயாளிகளின் மேல் பட்டதும் கொடிய வியாதிகள் விலகி விடுவதாக செய்திகள் எனக்கு எட்டிற்று.

தெய்வ பலத்தையே உறுதியாக நம்பி, அந்தத் தெய்வத்திடமே பூரண சரணடைந்தவர்கள் வியாதியினின்றும் பூரண சுகமடைந்ததை நான் நேரே பார்த்திருக்கிறேன். இவை பிரான்ஸ் தேசத்திலுள்ள புனித ஹார்ட்ஸ் தேவாலயத்தில் நடந்து கொண்டிருக்கிறது. பாபாவோ சாதாரண மனிதர். ஆகையால் இவைகளை என்னால் நம்ப முடியவில்லை. ஆனால் பாபாவைப் பற்றிய எண்ணங்கள் என் மனத்தில் அழுத்தமாகப் பதிந்திருந்தன.

1978 முதல் அகிலஉலக சமாதானச்சபை— First world peace Conference பெங்களூரில் கூடிற்று. அதில் பங்குபற்ற எனக்கு அழைப்பு வந்தி



சாயிபாபா

ருந்தது. அங்கு நான் சென்றேன். அப்பொழுது பாபா வைட் பீல்டிலுள்ள பிருந்தாவனத்தில் தங்கி இருப்பதாக அறிந்தேன். பிருந்தாவனம்,பெங்களூரிலிருந்து பதினைந்து கல் தூரத்திலுள்ளது. அங்கு சென்று காலைத் தரிசனத்திற்குக் காத்திருந்தேன்.

காலை ஐந்து மணி. எங்கும் ஒரே துய்மை. உடம்பிற்கும் உள்ளத்துக்கும் உற்சாகமளிக்கும் குளிர்ந்தவேளை. நூற்றுக்கணக்கான இந்தியரும், வெளிநாட்டவரும் பாபாவின் வரவை ஆவலுடன் எதிர்பார்த்திருந்தனர்.

நகர சங்கீர்த்தனக் கோஷ்டி ஒன்று தங்களை மறந்து தேனினுமினிய கானத்தில் சத்திய ஈசனின் திவ்விய நாமங்களை இசைத்துக் கொண்டிருந்தார்கள்.

பாபா மாடியில் தோன்றுவதற்கு அதிக நேரம் எடுக்கவில்லை. சிறிய உருவம். சிவந்த ஆடையுடன் மென்மையாக நகர்ந்து வருகிறது. எல்லோரும் சாயி மாதாவையே உற்று நோக்குகிறார்கள்'

பேராசிரியரின் கிர்லியன் விஞ்ஞானம் ஐயனை அளக்க ஆரம்பிக்கிறது. அவர் சொல்லுகிறார். 'என்றும் காணாத காட்சியை நான் அன்று கண்டேன். நான் பார்த்தவரோ விவரிக்க முடியாத ஆற்றலுள்ளவராகத் தென்பட்டார். சாதாரண மனிதரிடம் ஒன்று, இரண்டு அடிகள் தான் சக்தி வளையம் வியாபித்திருக்கும். ஆனால் பாபாவில் தென்படும் பிரபையோ அவரிடமிருந்து அடர்ந்து எழுந்து, எங்கும் பரவி அங்குள்ளோர் அனைவரையும் ஊடுருவுகிறது. ஒரு சமயம் அங்கு உயரத்தில் தோன்றிய மின்குழாய் விளக்கின் ஒளி பாபாவின்மேல் பாய்வதாக எண்ணினேன். ஆனால் பாபா அசைந்து செல்ல அந்த ஒளியும் அவருடன் சென்றது.

ஆகையால் இந்த அற்புத பிரபை அவரிடமிருந்தே வெளிப்படுகிறது என்று ஐயமின்றி ஏற்றுக் கொள்ளுகின்றேன்.

நான் மனிதர்களில் வியாபித்திருக்கும் சக்தி வளையத்தைப் பற்றி நன்கு ஆராய்ச்சி செய்துள்ளேன். நான் பேட்டி கண்டு ஆராய்ச்சி செய்தவர்களில் முன்னைநாள் அமெரிக்க ஜனாதிபதி ஜெரல்ட் போட், மதிப்புக்குரிய பரிசுத்த போப்பரசர் ஜோன் போல் II, நெதர்லண்ட் மகாராணி யூலியானா இன்னும் பல பிரமுகர்கள் அடங்குவர். இதை நான் எனக்கு நற்சாட்சிப்பத்திரமாகக் கூறுகின்றேனென நினைக்க வேண்டாம்.

சக்தி வளையம் நீல நிறமாக வெளிப்பட்டால், அந்த நபர் ஆழமான ஞானமார்க்கத்தைப் பின்பற்றுபவராக இருப்பார். பச்சை நிறம் வெளிப்பட்டால் இவர்கள் மக்களின் பிணி தீர்க்கும் பரோபசாரியாக விளங்குவர். மஞ்சள் மனிதர்களின் நுண்ணறிவைக் குறிப்பிடும். வெண்மை வளையம் வெளிப்பட்டால் அவர்கள் ஆற்றல் நிரம்பினவர்களாக விளங்குவர். துவேஷ உணர்ச்சி, கோபம், மோகம், ஏமாற்றம் முதலிய மிருகக் குணமுள்ளோரின் சக்தி வளையம் கறுத்த சிவப்பாகப் பதிவாகும்.

இளஞ்சிவப்பு சாதாரண மக்களில் காண்பது அரிது. இத்தகையோர் தன்னலமற்ற தூய அன்பு நிறைந்தவர்கள். அரிதானதும் அபூர்வமுமான இந்த அன்புப் பேரொளியே பாபாவிடமிருந்து கூடியதாக வெளிப்படுகிறது. அத்துடன் தெய்வீகத்தைக் குறிக்கும் வெள்ளி, சுவர்ணம் பிரபையும் பாபாவிடமிருந்து வெளிப்படுகிறது. இந்தத் தங்க வெள்ளி பிரபையை நான் வேறு யாரிடமும் கண்டதில்லை. இதைக் காண முடியுமென்று கனவில் கூட நினைத்ததில்லை.

பாபாவின் ஆற்றல் சக்தி அவரின் அன்பைப் போல் எல்லையற்றது. எண்ணுக்கடங்காத மாந்தர்களின் மேல் நித்த நித்தம் தெய்வீக அன்பை அவர் சொரிந்தும், வற்றாத வாவி போல் அன்பு சுரந்து கொண்டே இருக்கிறது. சுகவீனமுற்று தன்னு வண்டியிலிருந்த ஒரு பெண்குழந்தையின்மேல் பாபாவின் விரல்கள் பட்டது. அவரைச் சுற்றி சூழ்ந்த பிரேமப் பிரபையைப் பார்த்து நான் ஸ்தம்பித்தே விட்டேன். ஒரு சாமானிய மனிதன் இதைச் செய்யப்புகின் அவன் சக்தி விரைவில் ஒழிந்து சோர்ந்து விழுவான்.

சுற்றூடலை மறந்து அங்கு கண்டவைகளைப் பற்றிச் சிந்திக்கலானேன். பாபா அதற்குள் தன் இருப்பிடம் சென்று விட்டார். இன்னும் நான்கு மணித்தியாலங்களின் பின்பே பாபா தரிசனத்திற்கு வெளியாவாரென்று அறிந்தேன்.

(வளரும்) ✶

- சத்தியா -

---

# எழுதுவார் தொகை அதிகம்

# பெண்களுக்கு எழுத்தில் ஆர்வம்

"எழுத்துலகிற் கதையுலகில் தானேயானேன்'' எனப் பண்டிதமணியும் ''சிதைவறு நல் வறிவாளன் திருஞான சம்பந்தச் செய்ய மேலோன்'' என்று கலைமகள் ஆசிரியர் கி. வா. ஜகந்நாதனும் மதித்துப் போற்றும் திரு. க. தி. சம்பந்தன் பிறப்பினால் நாவலர் பரம்பரை; பாடம் கேட்டதனால் பண்டிதமணி பரம்பரை. ஈழத்துப் பேனா மன்னர் வரிசையில் இரசிகமணி கனக செந்திநாதனால் முதல் வரிசையிட்டு மதிக்கப்பட்டவர் சம்பந்தன். ஆயிரத்துத்தொளாயிரத்து இருபதாம் ஆண்டு பிறந்து பயிற்றப்பட்ட தமிழாசிரியராகத் திகழ்ந்து இளைப்பாறிப் பதினைந்து ஆண்டுகளின் பின்னும் 316 பக்கங்கள் கொண்ட சாகுந்தல காவியத்தை எழுதி 13. 09. 87 அன்று வெளியிட்டு விழா நடத்துகிறார் என்றால் அவர் எழுத்துலக ஜாம்பவானு இல்லையா?

பண்டிதமணியவர்களிடம் கல்வி கற்று பண்டிதமணி அமரராகும் வரை அவருடன் தொடர்பு வைத்துச் சாகுந்தல காவியத்தை இருபத்தினான்கு வருடகாலமுயற்சியாக எழுதி முடித்தார். சுவாமி மார்க்கண்டு அவர்கள் சமாதியடையும் காலம் வரை அவரிடம் ஞான சாஸ்திர உணர்வு பெற்ற பெருமைக்குரியவர் சம்பந்தன்.

1938ம் ஆண்டு இவரின் முதற்படைப்பான தாராபாய் கலைமகள் பத்திரிகையில் வெளியாகியது. அதன் பின்னர் சுமார் 20 சிறுகதைகள் வரை சம்பந்தன் எழுதியுள்ளார்.இவரின் பெரும்பாலான சிறுகதைகள் கலைமகளில் தான் வெளிவந்தன. ஈழகேசரி, மறுமலர்ச்சியிலும் எழுதியுள்ளார். 1948ல் ஈழகேசரியில் பாசம் என்ற நாவலை எழுதியபோது ஈழத்து வாசகர்கள் சம்பந்தரின் கதையில் காணப்பட்ட கலையம்சத்தையும் தமிழ்மொழியின் அழகையும் கண்டனர். அவர் கதைகளில் காவியச் சுவையும் கனமும் மிளிர்ந்தன. இவர் ஆசிரியராக இருந்த காலத்தில் மாணவருக்கான இரண்டு இலக்கண நூல்களையும்நான்குஉபபாடப் புத்தகங்களையும், மணிவாசகம் என்ற பாடப் புத்தகத்தையும் எழுதி வெளியிட்டார்.

கட்டுரை, கவிதைகளையும் எழுதிய சம்பந்தன் தற்போது சாகுந்தல காவியத்தைத் தந்திருப்பதிலிருந்து அவரது தமிழ்ப் புலமை தெற்றெனத் தெரிகின்றது.

மூத்த முதல் எழுத்தாளரிடம் கேட்கப்பட்ட கேள்விகளுக்கு அவர் இரத்தினச்சுருக்கமாக அளித்த பதில்களைப் பார்ப்போம்.

### நேர்முகம்

(1) இன்று வெளிவரும் இலக்கிய ஆக்கங்கள் பற்றிய தங்கள் எண்ணக் கருத்தை அறிய விரும்புகின்றேன். இவற்றை ஓய்வுநேரங்களில் படிப்பதுண்டு. இவைகள் புறக் கணிக்கப்படத்தக்கவைகள் அல்ல. எதிர்காலத்திற்கு இவை முதற்படியாக ஏற்றுக்கொள்ளவே வேண்டும். இன்று வெளிவரும் பெரும்பான்மையான நூல்கள் ஆத்மீகத்தைத் தீண்டாதவை. இதன் பயன் காலகதியில் தெளிவாகாமற் போகாது. இன்று எழுதுபவர்களை உற்சாகப் படுத்தி விட வேண்டியதும் எமது கடமையாகின்றது.

(2) மேல் நாடுகளில் இலக்கிய நூல்கள் வெளிவரும் அளவுக்கு நம்நாட்டில் நூல்கள் அதிகம் வெளிவராமலிருப்பதற்குரிய காரணம் எவையாக இருக்கலாம்? வாசகர்கள் மேல்நாடுகளில் பொழுது போக்கையே அதிகம் விரும்புகின்றார்கள். அவர்களின் பொழுது போக்கில் வாசிப்பும் ஒன்றாக இருக்கின்றது. அத்துடன் ஆங்கிலம் சர்வதேசிய

புத்தொளி

பாஷை. அதனால் நூல்களை அதிகம் வெளியிடும் வாய்ப்பு ஏற்படுகிறது. நமது நாட்டில் மக்கள் அன்றாட வாழ்க்கைக்கே முக்கியத்துவம் கொடுக்கிறார்கள். அவர்கள் வாசிப்பது பற்றி அவ்வளவு அக்கறைப்படுவதில்லை. வாசிக்கும் பயிற்சி இன்னும் அவர்களிடம் நன்றாக வளரவில்லை.

(3) தாங்கள் ஆசிரியராக இருந்ததனால், தற்காலக்கல்வி மாணவருக்குப் பயன்தரும் வகையில் அமையவில்லை என்று கருதப்படுகிறதே!



## இப்படிக் கூறுகிறார் க.தி.சம்பந்தன்

இதுபற்றி..........! அது உண்மைதான். கல்வியின் பயன் ஆன்ம வளர்ச்சி ஒன்றே தான். மற்றைய பயன்கள் புகழ், அதிகாரம், பொருள் என்பன. மனித வாழ்க்கைக்கு இவை தேடவேண்டிய பயனல்ல. ஆன்மஈடேற்றமில்லாத கல்வியால் ஒழுக்கக்கேடுதான் மேலோங்கும். உற்றுழி உதவி உறுபொருள் கொடுத்து பிற்றை நிலை முனியாது கற்கும் வரன்முறைக் கல்வி மீண்டும் புத்துயிர் பெற வேண்டும்.

(4) பண்டிதமணியுடன் மிக நெருக்கமாகப் பழகிய தாங்கள் அவரைப்பற்றி என்ன சொல்ல விரும்புகிறீர்கள்?

பண்டிதமணி தூயவர்; திரிகரண சுத்தி கைவரப் பெற்றவர். சிந்தித்துத் தெளியும் பான்மையுடையவர். இளமையில் 'அகம் பாவம் அவரிடமிருந்ததென்று சிலர் கருதினாலும் பிற்காலத்தில் துளியும் அது காணப்படவில்லை. அவரது சிந்தனைத் தெளிவு,அறிவு, அடக்கம் அவரை மனிதருள் மாணிக்கமாக்கியுள்ளது. பண்டிதமணிபற்றி வெளிவரஇருக்கும் நூலில் அவரைப்பற்றி 20 பாடல்கள் பாடியுள்ளேன். அப்பாடல்களில் அவர் திறன்கள் பேசப்படுகின்றன.

5) இருபத்தினான்காண்டு முயற்சியாக பல ஆயிரம் செலவிட்டு அதிக விலையில் சாகுந்தல காவியம் வெளியிடக் காரணமாக அமைந்தவை யாவை?

ஒரு காரணமும் எனக்குத் தெரியவில்லை. மாணவருக்கான பாடப் புத்தகமொன்றை, சகுந்தலை கதையை அப்போது எழுதினேன். அதன் பின்னர் சகுந்தலை கதையில் ஒரு பற்று பாசம் ஏற்பட்டது. அத்துடன் இது மொழி பெயர்ப்புமல்ல. ஒருவித ஆத்ம திருப்தி இதனை வெளியிட்டதில் ஏற்பட்டுள்ளது. நூல் விற்பதும் விலைப்படாததும் [illegible]

6) நீங்கள் எழுதிய

(7ஆம் பக்கம் பார்க்க)

---

# ஒப்பந்தத்துக்கு அருட்டக் குற்றம்

உலக மக்கள் அனைவருக்கும் ஓர் அதிர்ச்சி வைத்தியமாக அமைந்துவிட்ட, ராஜீவ், ஜே.ஆர் ஒப்பந்தம், பத்தோடு பதினொன்றாக மாறி விடுமோ என்ற ஐயப்பாடு இன்று எழுந்துள்ளது.

ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டமைக்காக ஜே.ஆரின் துணிவிற்கும் ராஜீவின் இராஜ தந்திரத்திற்கும் பாராட்டி நோபல் பரிசிற்குச் சிபார்சு வேறு செய்யப்பட்டுள்ளது.

இந்நிலையில் ஒப்பந்தத்தைச் சோதிட ரீதியாக ஆராய்வது பொருத்தமானதாகும்.

ஜூன் 16 ஆம் திகதி ஏற்பட்ட வியாழமாற்றத்தின் விளைவே, தற்போதைய சமூக நிலையைத் தோற்றுவித்துள்ளது. இந்நிலைமை ஒக்டோபர் 24ஆம் திகதி வரை இருக்கும். இவ் வியாழனுடைய நிலைமை ராஜீவ், ஜே. ஆர். தமிழினம்,இலங்கை அரசு ஒப்பந்தம் அனைத்திற்கும் சிறப்பான நிலையில் உள்ளது.

ஒக்டோபர் 24ன்பின் ஜனவரி 30வரை

| | |
|---|---|
| ஜே.ஆருக்கு | அட்டமத்து வியாழன் 4ஆம் இடத்துச் சனி. |
| ஒப்பந்தத்திற்கு | அட்டமத்து வியாழன் 4ஆம் இடத்துச் சனி. |
| ராஜீவிற்கு | 6ஆம் இடத்து வியாழன் 7½ சனியன் கடைக்கூறு. |
| இலங்கை அரசிற்கு | 6ஆம் இடத்து வியாழன் 7½ சனியன் கடைக்கூறு. |
| தமிழினத்திற்கு | 4ஆம் இடத்து வியாழன் 7½ சனியன் முதற்கூறு. |

ஜனாதிபதி ஜே. ஆர் அவர்களால் ஒழுங்கு படுத்தப்பட்ட சுபவேளையிலேயே ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டது. சோதிடத்தில் பூரண நம்பிக்கையுள்ளவர் அவர். அத்துடன் சிங்க இராசிக்காரர் கால நேரம் சிராக இருக்கும்போது துணிகரமான முயற்சிகளில் ஈடுபடுவார். மற்ற வேளைகளில் ஒதுங்கிக்கொள்வார்.

புறக்கோட்டையில் குண்டுவெடிப்பு இடம் பெற்றவேளையில் 'என்னை யாரும் கொலைசெய்ய முடியாது, என் கிரக நிலை அப்படி'' என்றார்.

ஒப்பந்தம் கைச்சாத்திட்ட கையோடு, இடம் பெற்ற பத்திரிகையாளர் மாநாட்டில் ''தற்போதைய நிலைமைக்கு கிரக நிலையில் ஏற்பட்ட மாற்றமே காரணம்'' என்றார்.

அரசியல் அவதானிகள் இதனை எப்படி எடுப்பார்களோ? ஆனால் அவரது கிரக நிலையைப் பார்க்கும் சோதிடர்கள் அவை உண்மையான கூற்று என்று கொள்வார்கள்.

தில் அவர் பெற்றுக் கொள்ளவேண்டும் அல்லாமல் அதற்கு மேலும் காலதாமதமானல் 24.10.87-30.1.88 ற்கும்

| | | | |
|---|---|---|---|
| ராகு | குரு | 6 | 7 |
| 3 | ஜே.ஆர்—ராஜீவ் ஒப்பந்தம் | | சுக்,புத் சூரி,செவ் |
| 2 | | | சந் |
| வி | சனி | | கேது |

ராஜீவ், ஜே. ஆர் ஆயுட் பலன் எதிர்ப்புகள் — ஒப்பந்தம் பூரணம் அதிகம்

அருட்டக்குற்றம் 24.10.87—30.1.88வரை

இடையில் ஒப்பந்தம் அருட்டக் குற்றத்திற்கு ஆளாகும். விசப்போகும் இனவாதப் புயலில், அதனைப் பேணிப்பாதுகாக்கப் பெரும்பாடுபட வேண்டியேற்படும். ராஜீவ், ஜே. ஆர் உறவில் சிறிது விரிசல் ஏற்படும். எனினும் பெருமளவிலான பாதிப்பு இருக்கமாட்டா என நம்பலாம்.

- கற்கோவளன் -

தம்மிடம் இருந்த தமிழ் இனத்தைப் பாதுகாப்பதற்கென வைத்திருந்த, ஆயுதங்களைப் போராளிகள் கையளித்த இந்நிலையில் நாடு

### சோதிட சஞ்சீவி

எனவே ஒக்டோபர் 24ஆம் திகதிக்கு இடையில் தன்னால் செய்து கொள்ளப்பட்ட ஒப்பந்தத்திற்கான அங்கீகாரத்தை பாராளுமன்றத் தழுவிய ரீதியில் உளத் தூய்மையுடன் பிரார்த்தனைகளையும் வழிபாடுகளையும் மேற்கொள்ளும் போது நிச்சயம் விடிவு கிட்டும். ✶

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஞானச் சஞ்சீவி

## ஒளி மயமான வாழ்வு

நன்மையும் தீமையும் நம்மைக் கை விடுகின்றனவா? நன்மைக்கும் தீமைக்கும் பின் அனைத்தையும் கடந்து நிற்கும் உங்களுடைய சுய சொரூபத்தை அறிய வேண்டும். அறிந்த பின் உங்கள்பார்வையில் அனைத்தும் நல்லதாகவே தோன்றும். தீர்வு காண முடியாத வாழ்க்கைப் பிரச்சினைகள் அறவே நீங்கும். துயரம் தீர்ந்த சுக அனுபவம் ஒவ்வொரு நிமிடத்திலும் அனுபவ மாத்திரமாய் நிற்கும். வாழ்க்கை என்பது ஒரு கடினமான போராட்டம். பிரச்சினைகள் நெருக்கிக் கொண்டிருப்பதென்பதில் சந்தேகமில்லை. தைரியமுடன் அதனைக் கடந்து செல்ல வேண்டும். அதனைக் கடந்து செல்லும் அற்புதமான சக்தி, உங்களுடைய இருதயத்திலிருக்கிறது. அந்த ஆத்மசக்தியை உபயோகப்படுத்தி சசலவிதமான இன்பதுன்பங்களையும் ஒதுக்கி மேலே செல்லுங்கள்.

இஃது ஒவ்வொரு மனிதனாலும் சாதிக்கக்கூடியது. அனுபவத்திற்குக் கொண்டுவரக் கூடியது. அடிக்கடி கூறிக்கொண்டிருக்கும் ''விதி'' என்பதற்கு நீங்கள்தான் கர்த்தா. உங்களால் படைக்கப்பட்ட நன்மை தீமைகளிலிருந்து, நீங்களாகவே விடுதலை அடையவேண்டும். ஜீவசக்தியும், பரமாத்மசக்தியும் ஐக்கியப்படும் பொழுது அது தானாகவே நிகழக் கூடியது. மனம், புத்தி, சரீரம் இம் மூன்றையும் தன்வசப்படுத்தி, பிரபஞ்ச நியதி நியமங்களுக்கு அப்பால் செல்ல வேண்டும். இதற்காகத் தவித்துறவும் வேண்டும் என்பதில்லை. அன்றாடக் கடமைகளைத் தார்மீக நெறியிற் செயற்படுத்தினால், நாளடைவில் இருதய சுத்தி கிடைக்கும். அழுக்கற்ற கண்ணாடியில் தனது முகம் தெளிந்து காண்பதுபோல், மாசற்ற இருதயத்தில் தன்னைத் தான் காண முடியும்.

உன்னுடைய எதிர்காலத்தை நிச்சயிப்பதுநீ. பழம் வினைகளிலிருந்து விமுக்தனாகும் ஆத்ம சக்தி உன்னிடமிருக்கின்றது. அந்தச் சக்திதான் நீ. நீரோட்டத்தைக் கிழித்துச் செல்லும் வள்ளம் போன்று தன்னறிவால் வாழ்க்கைப் பிரச்சினைகளைக் கிழித்தெறிந்து முன் செல்வாய். உன்னை ஓர் ஆத்மீக வீரனாக மாற்றுக. வேற்றுமைகளும் துன்பங்களும் நிறைந்த பிரபஞ்ச நியமங்களில், குற்றமற்ற இன்பம் நிறைந்த ஒன்றை எல்லாவற்றிலும் எப்பொழுதும் காண முயற்சிக்க வேண்டும். அதுதான் வாழும் வாழ்க்கை.

- சுவாமி கெங்காதரானந்தா -
(ஸ்தாபகர் சிவயோக சமாஜம், திருகோணமலை)

### காதல் கைக்கிளையா?

வண்டு விழிசளினை மாம்பழத்துக் கன்னத்தை
கண்டு தவித்துக் கவன்றேனே - அண்டை
நின்றும்
தேவைக் கொருவார்த்தை செய்யாத நீ செய்த
சேவைக்கும் உண்டோ சிறப்பு?
அஞ்சி அஞ்சி உன்னை அரைகுறையாய்ப்
பார்த்தேன் நான்!
கிஞ்சுகவாய்ச் சொல்லொன்று கேட்டிருந்தால்
-அஞ்சுகமே
துள்ளி மனஞ்சென்று சொர்க்கஉலா
கொண்டிருக்கும்
உள்ளம் உனக்கில்லையோ!
எக்கலட்டி எவ்தடலி எத்தென்ன
தோப்பெனிலும்
உக்கிஉடல் சாய்ந்தும் உனைத்தேடி-
கைக்கிளையோ
என்காதல் ஐந்திணையோ என்றறிவேன்!
ஐந்திணையேல்
பின்வாங்கேன் என்தன் அன்பே!

- சு. வெ. பஞ்சாட்சரம் -

### எழுவார் தொகை---

(5ம் பக்கத் தொடர்ச்சி)
காலத்தில் ஈழத்தில் சஞ்சிகை வளர்ச்சியடையவில்லை. அந்தக் காலத்தில் கலைமகளில் சிறுகதை எழுத வேண்டுமென்ற எண்ணம் எப்படி ஏற்பட்டது?

மனதிலுள்ளதை மற்றையோரும் அறிய வேண்டுமென்பதற்காகவே எழுதினேன். அப்போது இந்தியாவிலிருந்து வந்த சஞ்சிகைகளில் கலைமகள் காத்திரமாக இருந்தது. கலைமகளுக்கு என எழுதி கதை பிரசுரிக்காதிருந்தால் திருப்பி எனக்கு அனுப்பி வைக்கவென 2 அணா முத்திரையும் வைத்து அனுப்பினேன். கதை பிரசுரமாகியது. தொடர்ந்து எழுதினேன். கலைமகளில் வெளியான 'விதி' என்ற சிறுகதை அல்வயன்ஸ் கம்பனியார் வெளியிட்ட 'கதைக் கோவை' யில் மறுபிரசுரம் செய்யப்பட்டது. அக்காலத்தில் இந்தியாவுக்கு தலைமன்னாரிலிருந்து போக 15 ரூபா தான் கப்பலுக்கு. அடிக்கடி இந்தியாபோய் வந்தேன். கலைமகளாசிரியருக்கு இலங்கையில் முதல் நண்பன் நான் தான் என நம்புகிறேன்.

7) ஈழத்துச் சிறுகதை முன்னோடியான தாங்கள் இன்றைய இளம் எழுத்தாளர்களுக்கு என்ன சொல்ல வேண்டுமென்று விரும்புகிறீர்கள்?

இப்போது அதிகமானவர்கள் எழுதுகிறார்கள். பெண்களும் எழுதுவதில் ஆர்வம் காட்டுகிறார்கள். இவர்கள் எல்லோரும் சிறந்த விவேகிகள். அதை யாரும் மறுக்கமாட்டார்கள். ஆனால் அவர்கள் சிந்தனை ஓட்டம் சாதாரண வாழ்வை மையமாகக் கொண்டதாகவே இருக்கின்றது. இது எதிர்காலத்தில் மாற வேண்டும். காலப்போக்கில் இது மாறும். அதுவரை நாம் பொறுத்திருந்து அவர்களை உற்சாகப்படுத்த வேண்டும். ஊக்கத்துடன் படித்து தமிழ் இலக்கியத்தில் ஈடுபாடு காட்டினால் அவர்கள் எழுத்தை எவரும் மதிப்பர். ★

### மேற்கில்...

(5ஆம் பக்க தொடர்ச்சி)
சத்தங்களின்றி, புதுமைகள் மலராது என்ற விதிமுறையோ! சென்றவன்; திரும்பி வரவேயில்லை. முன்கூட்டிய அவனுடைய ஒவ்வொரு நடவடிக்கைகளையும் நினைத்துப் பார்த்தாள். மனம் பாசத்தில் சித்திரவதைப்பட்டுக் கொண்டிருந்தது. துயரச்சுமைகளை இறக்கி விட்டு, அந்த புது வருடமும் விடைபெற்றுக் கொண்டது.

(தொடரும்)

# கணித போதனையில் ரஷ்யா கண்ட சாதனை

ரஷ்யப்புரட்சி நடைபெற்று சுமார் எழுபது ஆண்டுகள் வரையாகி விட்டன. அப்போது அந்த நாட்டில் எண்பது நூற்று வீதத்திற்கு மேற்பட்டோர் எழுத்தறிவற்றவராக இருந்தார்கள். ஆனால் இன்று நிலைமை முற்றாக மாறி விட்டது. இரண்டாவது உலகயுத்தத்தினால் ஏற்பட்ட அழிவுகளிலிருந்தும் கூட குறுகிய காலத்தில் அவர்கள் விஞ்ஞான தொழில்நுட்பத்துறைகளில் வியத்தகு முன்னேற்றம் அடைந்துவிட்டனர்.

1957 ஒக்ரோபர் 4ஆந் திகதியன்று அவர்கள் ''ஸ்புட்னிக் - I'' (Sputnik - I) விண்வெளிக்கலத்தை வானில் செலுத்தியபோது உலக நாடுகள் பிரமித்துப் போயின. அமெரிக்காவும் மேற்கு ஐரோப்பிய நாடுகளும் தம்மை ரஷ்யா முந்திவிட்டதை யுணர்ந்து வெட்கப்பட்டனர். நாற்பதாண்டு முயற்சியுடன் ரஷ்யா இங்ஙனம் செய்ய முடிந்தது எவ்வாறு? அதன் பின்னணி என்ன?

இதற்கான முக்கிய காரணிகளுள் ஒன்று ரஷ்யா கணிதகல்விக்குக் கொடுத்த முக்கியத்துவம் எனலாம். விஞ்ஞானம், தொழில்நுட்பத்துறைகளுக்கு மட்டுமல்லாமல் கலை, வர்த்தகம், சமூகவியல் துறைகளுக்கும் தற்போது கணித அறிவின் அவசியம் உணரப்பட்டு வருகிறது. இதனாலேயே இந்த ஸ்புட்னிக் விண்வெளிக் கலம் செலுத்தப்பட்ட பின்னர், அமெரிக்க, ஐரோப்பிய நாடுகளில் கணிதபாடத்திட்டம் முழுதாக மாற்றியமைக்கப்பட்டது. இதனையே அப்போது ''புதிய கணிதம்'(New mathematico) என அழைத்தனர். இது நம்மில் பலருக்குத்தெரிவதில்லை. இந்தப் புதிய கணிதத்தின் வருகை ஏனைய நாடுகள் ரஷ்யாவின் கணிதத்திறமையைப் புரிந்துகொண்டதின் விளைவேயெனலாம்.

ரஷ்யாவில் பத்தாண்டு காலக் கல்வி எல்லோருக்கும் கட்டாயமாக்கப்பட்டுள்ளது. பொதுவாக முற்பகலில் பாடங்களைக் கற்பதும், பிற்பகலில் விளையாட்டு, உடற்பயிற்சி, அரசியல் கல்வி அல்லது மேலதிகமான பாடங்கள் கற்பித்தலாகவும் அமைகிறது.

ஒரு வாரத்திற்கான 24 பாடவேளைகளில் 6 பாடவேளைகள் கணிதத்திற்கென ஒதுக்கப்படுகிறது. இப்பாடவேளைகள் ஒவ்வொன்றும் 45 நிமிடங்கள் கொண்டவையாகும். அங்கு ஐந்தாம் தரம் வரை ரஷ்ய மொழிக்கு ஓரளவுக்கு முதன்மையான இடம் கொடுக்கப்படுகிறது.

எனினும் ஒரு ரஷ்ய மாணவனின் முழுப் பாடசாலை வாழ்க்கையையும் எடுத்து நோக்கும்போது அவன் ஏனைய பாடங்களை விடக் கணிதம் கற்பதற்கே கூடிய நேரம் செலவழிக்கிறான். அவாகளுடைய கற்பித்தல் தாய் மொழி [illegible] றது. ரஷ்ய மொழி தாய் மொழியாக இல்லாத மாநிலங்களில் ரஷ்யமொழி இரண்டாவது மொழியாகக் கற்பிக்கப்படுகிறது.

### கணித விடுதிப் பாடசாலைகள்

ரஷ்யாவிலுள்ள கணித விடுதிப் பாடசாலைகள் (Mathematics Boarding Schools) மிகப்பிரபல்யம் வாய்ந்தவை. ஆரம்பத்தில் இத்தகைய பாடசாலைகள் நான்கு மட்டுமே இருந்தன. இவை மாஸ்கோ, கீவ், லெனின்கிராட், நொவோசிபேர்ஸ்க் என்ற இடங்களில் இருந்தன. அவை அந்தப்பிரதேச மாணவர்களுக்கென ஒதுக்கப்பட்டிருந்தன. இப்போது அவற்றின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது. இவை அப்பகுதியிலுள்ள பல்கலைக்கழகங்களுடன் நெருக்கமான தொடர்பு கொண்டவை.

ஏனைய வழமையான பாடசாலைகள் கல்வியமைச்சின் அதிகாரத்திற்கு உட்பட்டவையாக அமையும்போது இந்த விசேட பாடசாலைகள் மட்டும் கூடிய சுயாட்சியுரிமை கொண்டவையாக விளங்குகின்றன. இப்பாடசாலைகளில் ஒன்பதாம், பத்தாம், தரங்களில் (15, 16 வயதுகளில்) மாணவர்கள் சேர்க்கப்படுகின்றனர். சில மாணவர்கள் எட்டாந்தரத்திலும் சேர்க்கப்படுவதுண்டு இப்

-- சு. மகாலிங்கம் --

(8 ஆம் பக்கம் பார்க்க)

# நால்வர் நெறி நடுத்தெருவில்....

இந்திய சமயங்களை அகச்சமயம் புறச்சமயம் என இரண்டாகப் பகுக்கலாம். மேலும் அகச்சமயம் தத்துவ அடிப்படையில் வேதாந்தம் சித்தாந்தம் என இரு வகைப்படும். வேதாந்தம் வடநாட்டுக்கும் வடமொழிக்கும் உரியது. சித்தாந்தம் தென்னாட்டுக்கும் தமிழ்மொழிக்கும் உரியது.

வேதாந்தம் பிரமம் ஒன்றே உள்பொருள் என்றும் ஏனையவை இல்பொருள் அல்லது மாயை என்றும் கூறும். இக்கொள்கையுடையோர் வைஷ்ணவம், சாகதம், கௌமாரம், சௌரம், காணபத்தியம் முதலாய வழிபாட்டு முறைகளைப் பின்பற்றுவர். அத்துடன் தேவர்கள் மூவர்கள் எனவும் பல்லாயிரம் தெய்வங்களை வழிபடுவர். இயற்கைச் சக்திகள் அல்லதுபூதங்களான அக்கினி, வாயு, நீர், இடி, சூரியன், சந்திரன் நட்சத்திரங்கள் முதலானவற்றையும் இவர்கள் தெய்வமாகக்கொண்டு அவற்றுக்குப் பூசை செய்து அவிப்பொருள்களை அள்ளி அள்ளிக் கொடுத்து வழிபடுவர். வேள்வி (உயிர்ப்பலி) யாகம் என்பன இவர்களின் மிகப் பிரசித்தி பெற்றவழிபாட்டு முறையாகும்.

வாழ்க்கையிலும் இவர் தம் கொள்கை சைவ நெறியினும் வேறுபட்டது. அரசர் பிராமணர் பிரபுக்கள் உயர்ந்தோராகவும் ஏனையவர் தாழ்ந்தோராகவும் வர்ணாச்சிரம பேதத்தை அடிப்படையாகக் கொண்டு வழிபாட்டு முறையும் வாழ்க்கை நெறியும் அமைந்துள்ளது.

ஒன்றேகுலம் ஒருவனே தேவன் என்பது சைவ நெறி. இந்நெறியில் சிவபெருமான் ஒருவனே முழுமுதற் கடவுள். இது சலம் பூவோடு, தூபம், தமிழோடு இசை பாடி பூசைசெய்து வழிபடும் நெறி. ஆண் பெண், உயர்ந்தோர், தாழ்ந்தோர் என்னும் பேதமின்றி சகல மக்களும் திருநீறு அணிவதற்கும் சிவபூசை செய்வதற்கும் திருமுறை ஓதுவதற்கும் தகுதியுடை

சமயம்

யர். இவர்தான் மந்திரம் ஓதலாம், இவர்தான் திட்சை கேட்கலாம், பூசை செய்யலாம், கோயிலிற் பிரவேசிக்கலாம் என்னும் 'சமூக விரோதக் கொள்கைகள் சைவநெறியில் இடம் பெறவில்லை. இது திராவிட மக்களின் மேலான பண்பாட்டையும் நாகரிகத்தையும் பிரதிபலிக்கும் நெறி.

சைவநெறி ஒரு வாழ்க்கை நெறி. பிறப்பு இறப்புவரை மட்டுமன்றி பிறவிகள் தோறும் விரவி நிற்பது அந்நெறி. இன்பத்தை, இனிமையை, சுவையை, இன்னிசையை, இன்னமுதத்தை, கவின்கலைகளை எல்லா அழகையும் உள்ளடக்கிய இந்நெறி மிகவும் சிறப்பு வாய்ந்ததாகும்.

இதன் காரணமாக எழுந்த கொள்கைதான் [illegible] ஒரு பொய்கை [illegible] அகலமானது. அதன் அடிப்பாகத்திலே கால்களைப் புதைக்கும் சேறு. சேற்றிலே பல்வேறு அழுக்குகள் புதையுண்டிருக்கும். விலங்கு. தாவரங்கள் உதவாத கருவிகள், களவாடிய பொருள்கள் பலவும் அதன் அடியிலே புதையுண்டிருக்கும்.

மேற்பாகத்திலே தெளிந்த பசுமையான நறுமணம் வீசும் நீர், தாமரை இலைகளும், மலர்களும், பறவைகளும், மரங்கள் செடிகள் முதலானவையும் பொய்கையின் மேற்பரப்பிலே குளிர்ச்சியையும் வனப்பையும் ஊட்டுவன,

பசு நீர் அருந்தும்போது மெல்ல அடிக்கு மேல் அடிவைத்து கலங்காத தெளிந்த குளிர்ந்த நீரைப் பருகும். எருமை நீர் அருந்தும்போது அப்படியல்ல; அது பொய்கையிலே இறங்கி நீரைக் கீழ்மேலாகக் கலக்கி அழுக்கு நீரைப் பருகி இன்பமடையும்.

இனி வேதநெறி சைவ நெறி வாதத்துக்கு வருவோம்.

பொய்கையின் அடிப்பாகத்திலே உள்ளது வேதநெறி எனின்; அதன் மேற்பாகத்தில் உள்ள தெளிந்த நீர் சைவநெறியாகும்.

வேதாந்த தெளிவாம் சைவசித்தாந்தம் என்பதன் பொருள் இதுவே தான்.

இவ்வாறு கலக்கப்பட்ட கலக்கமான நெறிக்கு நமது எதிரிகள் இட்ட பெயர் தான் 'இந்து சமயம்'

வேதநெறி, இந்துசமயம் என்பவற்றின் வளர்ச்சியால் சைவநெறி [illegible] மார் நால்வர் வளர்த்த [illegible] நடுத்தெருவில் நிற்கிறது. ★

- க. மகேசன் -

# கர்ப்பிணிகளுக்கு.....

நம் நாட்டில் மூட நம்பிக்கைகளுக்குக் குறைவேயில்லை. அதிலும் கர்ப்பிணிப் பெண்களைப் பற்றியும் — குழந்தை பிறந்த பிறகு அவர்களைப் பார்த்துக் கொள்வதிலும் — எண்ண முடியாத மூட நம்பிக்கைகள். மிகவும் முக்கியமான உணவு விஷயத்தில் — அர்த்தமில்லாத கட்டுப்பாடுகள்.

கர்ப்பம் தரிப்பது என்பதை ஒரு வியாதி — கர்ப்பிணிப் பெண் என்பவள் ஒரு வியாதிக்காரி - என்பதைப்போல் நடத்துகிறார்கள். படித்தவர்களே இப்படி இருந்தால், படிக்காதவர்களைப் பற்றிக் கேட்பானேன்?

### உணவு

முதல் மூன்று மாதங்களில் மசக்கை என்பது — சிலருக்கு சாதாரணமாக இருக்கும். அவர்களுக்கு அந்தச் சமயத்தில் வெண்டைக்காய் மட்டும் பிடித்தால் அதை நாலு வேளையும் சாப்பிடலாம். தவறில்லை. ஆரஞ்சு போன்ற பழங்கள், உப்பு பிஸ்கட், இளநீர், உலர்ந்த ரொட்டி இவை சாப்பிடலாம். எண்ணெய்ப் பண்டங்களைத் தவிர்க்கலாம்.

கல்சியம் மாத்திரைகள் சாப்பிடுவது அவசியமேயில்லை. ஒரு நாளைக்கு இருமுறை பாலும் தயிரும் சேர்த்துக் கொண்டாலே தேவையான கல்சியம் கிடைத்து விடும்.

பழங்கள், காய்கறி, கீரை — மிக அவசியம். பருப்பு, பாலுடன் — சைவமில்லாத உணவு உண்பவர்கள்—ஒரு முட்டை சாப்பிடலாம்.

கர்ப்பிணிப்பெண் சாப்பிடுவதைப் பொறுத்துதான் குழந்தையின் வளர்ச்சி இருக்கும் என்று பலர் நினைக்கிறார்கள். இது தவறான கருத்து. குழந்தை உருவாகும் போதே அதனுடைய எடை தீர்மானிக்கப்பட்டு விடுகிறது. சத்துள்ள சாப்பாடு சாப்பிடாவிட்டால் அது குழந்தையைப் பாதிக்கும். அவ்வளவுதான்.

உலகம் முழுவதும், எல்லோரும் சிவப்பாக ஆகிவிடலாமே. பாரம்பரியத்தைப் பொறுத்துதான் குழந்தையின் நிறம் அமையும். கர்ப்பிணிப்பெண் குங்குமப்பூ சாப்பிடுவதால் குழந்தை சிவப்பாக ஆகிவிடாது...

இன்னொன்று, பொதுவாக கர்ப்பிணிப்பெண் என்றால் 'பார்லி தண்ணீர் குடிக்க வேண்டும்' என்று நினைத்துக் கொண்டிருக்கிறார்கள். காலில் சாதாரணமாக சிறிதளவு வீக்கம் ஏற்படுவது சாதாரணமானதுதான்! இதற்காக உடனே

> கர்ப்பம் தரிப்பது என்பதை ஒரு வியாதி — கர்ப்பிணிப்பெண் என்பவள் ஒரு வியாதிக்காரி என்பதைப் போல நடத்துகிறார்கள். படித்தவர்களே இப்படி இருந்தால் படிக்காதவர்களைப் பற்றிக் கேட்பானேன்.
>
> கர்ப்பிணிப் பெண்கள் பேண வேண்டியவை பற்றிப் பிரபல பெண் மருத்துவர் டாக்டர். கீதா அர்ஜுன் தெரிவித்துள்ள கருத்துக்கள் இவை.

பார்லி தண்ணீர் குடிக்க வேண்டும் என்று நினைக்க வேண்டாம். அதனால் எந்தப் பிரயோசனமும் கிடையாது!

கிரகணத்திற்கும், கர்ப்பிணிப் பெண் வயிற்றில் இருக்கும் குழந்தைக்கும் எந்தச் சம்பந்தமும் கிடையாது. குழந்தை மிகச் சிறியதாகப் பிறப்பதற்குக் காரணம் தாயார் அதிகளவு சிகரெட் பிடிப்பதோ போதைப் பொருளுக்கு அடிமையாக இருப்பதோ ஒரு காரணம்.

வேறு எந்தக் காரணங்களுக்காவது அவசியம் ஏற்பட்டு Tetracyclin, Chloramphericol இந்த இரண்டு மருந்தும் கர்ப்பிணிப் பெண் உட்கொண்டால் பிறக்கும் குழந்தையின் நிரந்தரப் பற்கள்கூட-நிறம் மாறிக் காணப்படும். பிறக்கும் குழந்தை எலும்புகள் பாதிக்கப்படலாம்.

ஆஸ்பிரின் சாப்பிடுவதைத் தவிர்க்க வேண்டும். குழந்தை உருவக் குறைபாட்டுடன் பிறப்பதற்குக் காரணம் நிச்சயமாகக் கிரகணம் இல்லை! குழந்தை கர்ப்பத்தில் இருக்கும்போது, தாயார் சில வகை நோயினால் தாக்கப்படும்போது கூட இம்மாதிரி நேரலாம்!

### பத்தியம்

சாதாரண டெலிவரி' என்றால் குழந்தை பிறந்த பிறகு '2 மணி நேரம் கழித்து' சாதாரணமான உணவைச் சாப்பிடலாம். பருப்பு, தயிர் சைவமில்லாத - எதுவானாலும் - அவர்களுக்குப் பழக்கமான - உணவைச் சாப்பிடலாம்.

பத்தியம் ஒன்றும் தேவையில்லை. பத்தியம் என்ற பெயரில் மிளகுக் குழம்பு, வடாம், புழுங்கலரிசிக் கஞ்சி என்று சத்தில்லாத உணவைப் பாலூட்டும் தாய்க்குக் கொடுக்கிறார்கள். அந்தப் பத்திய உணவில் வாய்க்கு ருசியாக ஒன்றும் இருக்காது. பின்பு எப்படி நன்றாகச் சாப்பிடத் தோன்றும்? குழந்தைக்கு எங்கிருந்து பால் கிடைக்கும்?

கொத்துக்கடலை போன்றவற்றைச் சுண்டல் செய்து கொடுக்க வேண்டும். பருப்பு, தயிர், பால் போன்றவற்றை நன்றாக, நிறையச் சாப்பிட வேண்டும் வயிறு நிறையச் சாப்பாடு போடாமல் — பாட்டிலில் இருந்தும், டப்பாவிலிருந்தும், 40, 50 ரூபாய்க்குப் பானங்களை வாங்கி — கரைத்துக் கொடுத்து என்ன பயன்?

ஒரு கோப்பை பொட்டுக்கடலை அல்லது கொண்டைக்கடலை சுண்டல் இவை-இத்தகைய பானங்களைவிட, நூறு மடங்கு சிறந்தது. மலிவானதும்கூட. பிரசவித்த பெண்களுக்கு ஏதோ வியாதி வந்து விட்டதுபோல் பத்தியம் போட வேண்டாம் 'ஐஸ்கிரீம்' கூட அவர்கள் சாப்பிடலாம்!

இன்னொன்று-மகா பயங்கரமான லேகியம் ஒன்றைக் கொடுத்து அவர்களைச் சாப்பிட வைப்பது. ஜீரண சக்திக்காகவாம் அது! ஜீரணத்திற்கும், டெலிவரிக்கும் என்ன சம்பந்தம்? பிரசவிப்பதால் ஜீரண சக்தி எந்த விதத்திலும் பாதிக்கப்படுவதில்லை.

மற்றொன்று— அவர்களை வெற்றிலை போட்டுக் கொள்ளச் சொல்லிக் கட்டாயப்படுத்துவது! இப்போது பெரும்பாலான பெண்களுக்கு வெற்றிலைபோடும் பழக்கம் இல்லை. அப்படி இருக்கும்போது, அவர்களை எதற்காக வற்புறுத்த வேண்டும்? பற்கள் கறையாவதுதான் கண்ட பலன்! வேறு எந்தப் பயனும் இதனால் கிடையாது!

### பால் ஊட்டல்

பிரசவம் ஆகி (சாதாரண) 6 மணி நேரத்திற்குள் — தாய் குழந்தைக்குப் பால் ஊட்ட வேண்டும். பால் அதிகமாகச் சுரப்பதற்கு பாலூட்டுவதற்கு 15 நிமிடங்களுக்கு முன் ஏதாவது பானம் பருகலாம். பாலூட்டுவதற்கு முன் வெதுப்பான நீரில் நனைத்த துணியை மார்பகத்தின் மீது வைக்கலாம்.

## நங்கை

முக்கியமானது—பாலூட்டும் தாயின் உணவு புரதச்சத்து மிகுந்ததாக இருக்க வேண்டும்.

பிரசவமாகி இரண்டு வாரம் கழித்து — சமையல் செய்வது போன்ற சாதாரண வேலைகள் செய்யலாம், படிக்கட்டு அடிக்கடி ஏறுவதையும், கனமான பொருள்களைத் தூக்குவதையும் தவிர்த்தால் போதுமானது.

### வயிறு கட்டல்

இன்னொரு முக்கியமான விஷயம். பிரசவத்திற்குப் பிறகு, வயிறை ஒரு துணியால் இறுக்கிக் கட்டுவது. இது வயிறு சுருங்குவதற்காகவாம்! இதற்குத் துணியைக் கட்டி என்ன பயன்? தசைகள் அல்லவா பழைய நிலையை அடைய வேண்டும்?

துணியால் இப்படி இறுக்கிக் கட்டுவதால் சில சமயம் தோல் புண்ணாகி விடுகிறது.

இம்மாதிரி வேண்டாத பிரச்சினைகள் தான் ஏற்படுகிறது. கடைகளில் விற்கும் 'அப்டாமினல் பெல்ட்' கூட எந்தப் பயனும் தராது.

பிரசவத்திற்குச் சில நாட்களுக்குப் பிறகு சில குறிப்பிட்ட தேகப் பயிற்சியின் மூலம் உடலைப் பழைய நிலைக்குக்கொண்டு வரலாம்.

நன்றி: சுமங்கலி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "மறுமலர்ச்சி"யின் முதற் காரணர்

# எழுத்தாளர் பஞ்சாட்சர சர்மா

1916-11-12யாழ். மறுமலர்ச்சிச் சங்க வரலாற்றில் ஒரு பொன்னுள்.

1943-06-13 ஆம் நாள் பிறந்த யாழ். மறுமலர்ச்சிச் சங்க வரலாற்றில் 1916-11-12 எப்படி ஒரு பொன்னுள் ஆக முடியும் என்ற ஐயம் உங்களுக்கு ஏற்படலாம்.

மறுமலர்ச்சிச் சங்கத்தையும் மறுமலர்ச்சி ஏட்டையும் அவற்றின் வாழ்விலும் தாழ்விலும் தாங்கி நின்றவர்களுள் ஒருவராகி இன்று எழுபதாம் ஆண்டை நிறைவு செய்து விழாக்காணும் பெரியார் பண்டிதர் ச. பஞ்சாட்சர சர்மா. பிறந்தநாள் மறுமலர்ச்சிச் சங்க வரலாற்றிலும் ஒரு பொன்னுள் தான் என்பதில் ஐயமில்லை. மறுமலர்ச்சி தோன்றி, வளரத் துணை நின்றவர்களின் கடிதங்கள் இதனை உறுதி செய்கின்றன.

மதிப்புக்குரிய சர்மா அவர்கள் வழங்கிய மறுமலர்ச்சிக் கடிதங்களூடாகவே அக்கால இலக்கிய உலகைக் காணும் பேறு எமக்குக் கிடைத்துள்ளது.

இன்று (5-9-87) யாழ் இலக்கிய வட்டத்தின் சார்பில் 'பஞ்சாக்ஷரம்'

> 29. 08. 1987 சஞ்சீவி இதழில் 8ஆம் பக்கத்தில் 'மறுமலர்ச்சி இதழ் மலர்ந்த கதை' என்ற கட்டுரையில் 2ஆம்நிரலில்,
> இது அ. ந. கந்தசாமியின் கடிதம்'' என்ற வசனத்தை நீக்கிவிட்டு, பின் வரும் பந்தியைச்சேர்த்துப் படிக்குமாறு வேண்டுகிறோம்:
> ''கொக்குவில் இந்துக் கல்லூரித் தமிழ்ப் பண்டிதராயிருந்த மு. சின்னத்தம்பி அவர்கள் வழங்கிய இச்சான்றிதழ் மறுமலர்ச்சிச் சங்க உள் முரண்பாடுகளுக்கான காரணத்தையும் உண்மை நிலையையும் தெளிவுபடுத்துகிறது.''

தது. அக்கடிதங்களுட் சில சர்மா அவர்களின் எழுபதாண்டு நிறைவு வெளியீட்டிற்காக வழங்கப்பட்டதாக அவர்கள் கூறியிருந்தார்கள். அவ்வெளியீடு 'பஞ்சாக்ஷரம்' என்ற பெயரில் வெளியீட்டு விழா நல்லை திருஞானசம்பந்தர் ஆதீன மண்டபத்தில் நடைபெறுகின்றது. அந்நூலில் வெளியாகிய சில முக்கிய மறுமலர்ச்சிக் கடிதங்களை வாசகர்களுக்கு அறிமுகம் செய்வது அவசியம் என எண்ணுகிறேன்.)

மறுமலர்ச்சிக் காலத்தில்அ. ந. கந்தசாமிஅவர்களுக்கும் சர்மா அவர்களுக்குமிருந்த தொடர்பை முந்திய கடிதங்கள் விளக்குகின்றன. சர்மா அவர்களை மறுமலர்ச்சியின்பால் ஈர்க்க அ. ந. க. எழுதிய கடிதம் சர்மா அவர்களின் பெருமையைத் துலக்குவதாக உள்ளது. அக்கடிதம் வருமாறு:

அ. ந. கந்தசாமி.
117, செம்மா தெரு,
யாழ்ப்பாணம், 10-6-43

நன்கு மதிக்கப்பெற்ற நண்பர் பிரம்மஸ்ரீ பஞ்சாட்சர சர்மாவுக்கு எழுதிக் கொள்வது, நண்பரே!

ஒருதரம் இருதரம் கண்ட பரிச்சயமின்றி வேறொரு தொடர்புமில்லாதுள்ள நான் தங்களை 'நண்பரே' என்றழைத்ததொரு குற்றமாயின் அதனை மன்னித்துக் கொள்ளவும்.

சென்ற சில 'ஈழகேசரி' இதழ்களில் 'பாட்டை சாரி' யின் குறிப்புகளில் ஒரு மறுமலர்ச்சிச்சங்கம் ஆரம்பிக்கப்பட வேண்டியதன் அவசியத்தைப் பற்றி வற்புறுத்தியிருந்தார் திரு. முருகானந்தன் அவர்கள். அம்முயற்சியில் எனது நண்பர்களான தி. ச. வரதராசன், அ. செ. முருகானந்தன் முதலியோர் ஈடுபட்டிருக்கின்றனர். அவர்களுடன் ஒத்துழைத்துச் சங்கத்தை ஒரு வெற்றியாக்க வேண்டுமென்பது என் அவா.

மறுமலர்ச்சிச் சங்கம் மறுமலர்ச்சி இலக்கிய ஆர்வமுள்ள உத்தம ரஸிகர் திருக்கூட்டமாக இருக்க வேண்டும். தாங்கள் அத்தகையார் ஒருவர். எனவே, தங்கள் ஒத்துழைப்பை நான் அதிகம் விரும்புகிறேன்.

சங்கத்தின் முதலாவது கூட்டம் வருகிற 13-6-43 ஞாயிறு பி. ப. 4 மணியளவில் ஆரம்பமாகும். தவறாது விஜயம் செய்யுமாறு வேண்டுகிறேன். இடம்: பாரத்ஸ்ரூடியோ முன்னுலிருக்கும் ரேவதி குப்புஸ்வாமி வீடு...

நண்பன்
அ. ந. க.

அ. ந. க. ச. ப. சர்மா மீது கொண்டிருந்த மதிப்பையும் நம்பிக்கையையும் இக்கடிதம் எடுத்துக் காட்டுகிறது. 1943 ஆம் ஆண்டில் ஈழகேசரி இதழில் 'பாதையோரத்தில்' என்ற பகுதியை 'பாட்டை சாரி' என்ற பெயரில் எழுதியவர் அ. செ. மு. என்ற உண்மை இக்கடிதத்தின் மூலம் புலனுகிறது. ஈழகேசரி ஆசிரியர் குழுவிலிருந்த பலர் காலத்துக்குக் காலம் 'பாட்டைசாரி' என்ற பெயரில் எழுதி வந்தார்களென்பது குறிப்பிடத் தக்கது.



ப. ச. சர்மா

- ம்யிலங்கூடலூர் பி. நடராசன் -

# நன்னீர்க் குளங்களின் பொது இயல்புகள் (iv)

நீர் நிலைகளில் அங்கிகளின் பரம்பல் பின்வருமாறு அமையும்:

1. நீரின் மேற்பரப்பில் மிதந்து வாழுபவை. உதாரணம்: தாவரங்கள் - ஆகாயத் தாமரை (Pistia), நெய்த்தாமரை (Eichorniae), லெம்ன (Duck weed - Lemna), நீர்க்கிராம்பு நீர்ப்பன்னம் Salvinia.

விலங்குகள் - நீர்ச்சறுக்கி; நுளம்பின் குடம்பிகள், கூட்டுப்புழுக்கள்.

2. அமிழ்ந்திய நிலையில் மிதந்துவாழுபவை. உதாரணம்: தாவரங்கள் - சவ்வுப்பையுருப் பூண்டு (Utricularia), ஐதறில்லா (Hydrilla), ஸ்பைறோகைரு (Spirogyra) போன்றவை.

3. தாவரங்களின் மேல் ஒட்டிவாழும் விலங்குகள். உதாரணம்: ஐதரா (Hydra, பிளனேரியா (Planaria), நத்தை போன்றவை.

4. தளவுயிரிகள் - நீர் நிலையின் அடித்தளத்துக்குரியவை.

அமிழ்ந்திய நிலையூன்றிய தாவரங்கள். உதாரணம்: வேலம்பாசி(Valisneria), ஒட்டேலியா (Otalia).

நிலையூன்றிய; மிதக்கும் இலைகளை உடையவை. உதாரணம்: அல்லி (Nymphaea), கொட்டி (Aporogeton) புளியாரை (Oxalis), பனித்துகழ்ப் பூண்டு (Lymnanthemum)போன்றவை.

நிலையூன்றிய; மிதக்கின்ற இலைகளையும் வளிக்குரிய இலைகளையும் உடையவை. உதாரணம்: தாமரை (Nelumbium) நிலையூன்றிய; அமிழ்ந்ய நாடாப் போன்ற இலைகளையும், மிதக்கின்ற பெரிய இலைகளையுமுடையவை. உதாரணம்: சஜிரேரியா (Sagitaria).

நிலையூன்றிய அல்லது மிதக்கின்ற; அமிழ்ந்திய துண்டுபட்ட இலைகளையும், மிதக்கின்ற பெரிய இலைகளையும், வளிக்குரிய இலைகளையும் உடையவை. உதாரணம் லிம்னேபில்லா (Lymnophylla), மீரியோவில்லம் (Myriophyllum), திருருப்பா (Trapa).


தளவாழ்க்கைக்குரிய விலங்குகள் - தும்பியின் அணங்குப்புழு (பெரும்பாலும் கற்களின் கீழேயும், தாவர அடிப்பகுதிகள் போன்ற, மறைவிடங்களில் வாழும்).

5. நனி நீந்திகள்- சுயாதீனமாக நீந்தக் கூடிய விலங்குகள். உதாரணம்: தவளை (Rana), ஆமை, நீர்ப்படகோட்டி, மீன்கள் போன்றவை.

6. நீர்க்கரைக்குரியவை. தாவரங்கள்-புற்களும் கோரைகளும் (Grasses Sedges), நீர் முள்ளி Acanthometra/Hygrophylla). விலங்குகள் - நன்னீர்ப்பாம்பு, நத்தை, நீர்த்தேன், நண்டு போன்றவை.

7. சேற்றில் புதைந்திருப்பவை. தாவரங்கள்-பங்கசுக்கள், பற்றீரியாக்கள், விலங்குகள்-சிப்பி, புழுக்கள், கைரேனேமஸ் குடம்பிகள்.

8. அலையுயிரிகள் (பிளாந்தன்)-அலைதாவரங்கள்-பங்கசுக்கள், பக்றீரியாக்கள், அல்காக்கள், அலை விலங்குகள் - புரற்ற கோவன்கள், ஆத்திரப் பொட்டுகள்.



முன்னைய இதழில் படத்தின் விளக்கம் தரப்பட்டுள்ளன.

> பாடசாலை மாணவர்கள் குறிப்பாக க.பொ.த. சாதாரணதர உயர்தரவகுப்பு மாணவர்களின் நலன்கருதி அவர்கள் பயிலும் பாடங்களுக்கு உசாத்துணையாக அமையும் ஆக்கங்கள் இப்பகுதியில் வாரந்தோறும் வெளியாக உள்ளன.

## பாடம் பயில்வோம்

- கே. எஸ். குகதாசன் -
(அதிபர் சாவகச்சேரி இந்துக்கல்லூரி)

## பிரித்தானிய...

(3ஆம் பக்க தொடர்ச்சி)

மான அடக்குமுறைக்கு ஆளாயினர்.

இக் காலகட்டத்தில் சேர். இராமநாதன் இக்கொடூரங்களைக் கண்டித்து, அதை உடன் நிறுத்துப் வண்ணம் வற்புறுத்தியும், இராணுவச் சட்டத்தை நீக்குமாறும் வலியுறுத்திஞர். இங்கிலாந்துக்கு விஜயம் செய்து மந்திரிமார்களையும், பாராளுமன்ற அங்கத்தவர்களையும் பேட்டி கண்டு இலங்கை நிலையை எடுத்துரைத்தார். அவர் சிங்கள மக்களுக்கு ஆதரவாக எடுத்த நடவடிக்கைகள் வெற்றிபெற்றன. கவர்ணராக இருந்த சாமேர்ஸ் பதவியை இழக்கும் நிலையை உருவாக்கியது.


### சட்டத்துறை

சட்டப்படிப்பின் முன்னேற்றத்தில் அவர் மிகுந்த அக்கறையும், ஈடுபாடும் கொண்டிருந்தார். சட்டம் பயிலும் மாணவர்கள் அனுமதி சம்பந்தமாகவும் சட்டம் பரீட்சை சம்பந்தமாகவும் அவர் வகுத்த திட்டங்கள் செயற்படுத்தப்பட்டன. அத்திட்டங்களின் அடிப்படையிலேயே சட்டக்கல்லூரி ஆரம்பிக்கப்பட்டது சட்டக் கல்லூரி மாணவர்களின் தலைவராக 11 வருடங்கள் பணியாற்றிஞர்.

1905 இல் சேர். இராமநாதன் அமெரிக்கா சென்று அங்கு பல சர்வகலாசாலைகளில் உரையாற்றிஞர். அவரின் உரை அமெரிக்க மக்களிடையே பெரும் மதிப்பையும், வரவேற்பையும் பெற்றது. ★

# சொற்சிலம்பம்

## போட்டி இல. 77



அனுப்புபவர் பெயர்:-
திரு/திருமதி/செல்வன்/செல்வி ..........

விலாசம்:- ..........

வயது:- ..........

ஒப்பம்:- ..........

### இடமிருந்து வலம்

1. பெரும் தவறுகள் ஐந்து, 6. துணை. மாறிக் கிடக்கிறது, 7. இந்திரன் மகள், 9. எல்லை, 10. ஆறுதல், 13 குழந்தையின் உயிர்வாழ்வுக்கு உணவு இங்கிருந்துதான் கிடைக்கிறது 14. ஒரு கிரகம், 15. பார்ப்பதற்கு இது தேவை, 16. பெண் தெய்வம், 18. கொம்புத் தேனுக்கு இவன் ஆசைப் படலாமா? 19. பாட்டு, 21. குத்தும்போது இப்படித்தான் ஒலி இளம்பும் என்கிறார்கள். 22.தோள்

### மேலிருந்து கீழ்

1. இதுவந்தால் அடுத்தது பட்டினி, 3. கலையாழி, ஒன்றே இவள் வாழ்வைக் காப்பாற்றியது, 3. புரதச்சத்து மிக்க உணவு, 4. இருப்பதற்கு உதவும், 5. நாங்கள் மாறி நிற்கிறோம் 8. உள்ளே தள்ளு, 9. பயில், 11. செல்வம் 12. பெண், 13 தலையில்லா உடம்பு, 14. புதிர் 15. பாக்குக் கிடைப்பது இந்த மரத்தில் இருந்துதான், 16. அடைக்கும் தாழ் இல்லாதது, 17. பிரிவு, 20. பெண்களின் பருவங்களுள் ஒன்று.

### சொற்சிலம்பம் போட்டி இல. 75 விடைகள்

#### இடமிருந்து வலம்

1. அசாத்தியம், 5. திரை, 6. கல், 7. அப்பளம், 8. தருமதி, 9. பசி, 10. அமர், 11. தாவரம், 13. வியாதி, 14. பிரகாசி, 16. ஊதி. 17, ஈகை.

#### மேலிருந்து கீழ்

1' அதிரதன், 2 சாமரை, 3. திருப்தி, 4. ஷெல் 6. கம்பர், 7. அமராவதி, 10. அம்பிகை, 11. தாயாதி, 12. பாசி. 13. வினை, 15. காண்.

### சொற்சிலம்பம் போட்டி இல. 75 பரிசு பெற்றவர்கள் விவரம்

1ஆம் பரிசு: ரூ 50/-
திரு. வீ. சிவலிங்கம்,
''சிவபவான்''
கிரான் (கி.மா).

2ஆம் பரிசு: ரூ 25/-
திரு. எம். எம். அபூபக்கர்,
மசூதி ரோட்,
பெரிய கடை,
மன்னார்.

3ஆம் பரிசு ரூ 15/-
செல்வி. இரதினி. புண்ணியமூர்த்தி.
ஒழுவில் ரோட்,
கரம்பன், கிழக்கு.
ஊர்காவற்றுறை.

★ குறிப்பு:-
பரிசு பெற்றவர்களின் பணம் காசோலை மூலம் அனுப்பி வைக்கப்படும். நேரில் எவரும் வர வேண்டியதில்லை.

பூர்த்தி செய்யப்பட்ட கூப்பன்களை, 'சொற்சிலம்பம்' போட்டி இல. 76, சஞ்சீவி, தபால் பெட்டி இல. 23, யாழ்ப்பாணம் என்ற விலாசத்துக்கு தபால் உறையில் வைத்தோ, அல்லது அஞ்சல் அட்டையில் ஒட்டியோ அடுத்து வரும் வெள்ளிக்கிழமை அல்லது முன்னர் கிடைக்கக் கூடியதாக அனுப்பவும்.

# கணித போதனையில் ரஷ்யா கண்ட..

(7ஆம் பக்க தொடர்ச்சி)

பாடசாலைகள் அமைக்கப்பட்டதின் நோக்கமே இளம் வயதிலேயே ஆற்றல் மிகுந்த மாணவர்களைத் தெரிந்தெடுத்து அவர்களிடம் கணித விஞ்ஞான விடயங்களில் ஆராய்ச்சி மேற்கொள்வதில் கவர்ச்சியையும் ஆர்வத்தையும் ஊட்டி எதிர்கால மேதைகளாக உருவாக்குவதேயெனலாம். நாட்டு புறங்களில், தூரஇடங்களில் சிறிய பாடசாலைகளில் தகுந்த கணிதக்கல்வி பெற போதிய வசதி, சிறந்தஆசிரியர்கள் இல்லாமலிருக்கலாம். இத்தகையோரைத் தெரிவு செய்யகணித ஒலிம்பியட் போட்டிப் பரீட்சைகள் நடத்தப்படுகின்றன. இங்ஙனம் தெரிந்தெடுக்கப்பட்டவர்கள் விடுதிச்சாலைகளில் தங்கியிருந்து இந்த விசேட பாடசாலைகளில் கற்கின்றனர்.

இந்தப் பாடசாலைகளில் பல்கலைக்கழகப் பேராசிரியர்கள், விரிவுரையாளர்களும் பகுதிநேர ஆசிரியர்களாகப் பணிபுரிவது முக்கியமான அம்சமாகும். உதாரணமாக, அங்குள்ள பெளதிக- கணித விடுதிப்பாடசாலையொன்றில் 45ஆசிரியர்கள் பணி புரிகின்றனர். அவர்களில் 5 பேர் கணிதர்கள். மேலதிகமாக 80 பேர்வரை பல்கலைக்கழகத்திலிருந்து வந்து கற்பிக்க உதவுபவர்கள் உண்டு. அத்தகையவர்களுள் 30 பேர் பல்கலைக்கழகக் கணிதர்கள். இங்குள்ள மாணவர்களில் 404 ஆண்கள், 99 பெண்கள் என மொத்தம் 503 பேர்கள் உள்ளனர். மொத்தம் 21வகுப்புக்கள் உள்ளன. எனவே சராசரியாக ஒரு வகுப்பில் 25 பேர் மட்டுமே இருப்பர்.

இங்கு கற்பிக்கப்படும் கணிதம், பெளதிகம், இரசாயனம் என்பவற்றிற்கான பாடத்திட்டம் பல்கலைக்கழக விஞ்ஞானப் பேரவையால் (University Science Council) தீர்மானிக்கப்படும். ஏனைய பாடங்களுக்கு வழமையான பாடசாலைகளின் பாடத்திட்டமே பின்பற்றப்படும். பல்கலைக்கழக ஆசிரியர்கள் விரிவுரை நிகழ்த்தியும் கணக்குகளைச் செய்துகாட்டியும் வகுப்பு நடத்துகின்றனர். பல்கலைக்கழக மட்டத்திலிருந்து பாடசாலை மாணவர் மட்டத்திற்கு இறங்கி வந்து கற்பிக்க அங்கு பலர் ஆர்வம் காட்டுகின்றனர்.

இங்கு ஒன்பதாம் தரத்திற்கு வாரத்தில் 45 நிமிடங்கள் கொண்ட 36 பாடவேளைகள் உள்ளன. இவற்றில் 8 கணிதத்திற்கும், 8 பெளதிகத்திற்கும், 3 இரசாயனத்திற்கும் ஒதுக்கப்படுகின்றன. பத்தாம் தரத்தில் கணிதத்திற்கும் மேலும் இரு பாடவேளைகள் கூடுதலாகக் கொடுக்கப்படுகின்றது. கணிதம், விஞ்ஞானம் கற்பிக்கும்போது ஒரு வகுப்பு மாணவர்களை 12 அல்லது 13பேர் கொண்ட இருகுழுவினராகப் பிரித்துக் கற்பிக்கின்றனர். இதனுல் மாணவர்களுக்கு தனிப்பட்ட கவனம் செலுத்திக் கற்பிக்க வசதி ஏற்படுகிறது. அத்துடன் பல்கலைக்கழக ஆசிரியர்கள் தம் மாணவர்களுக்கு ஆர்வமூட்டக் கூடிய பாடவிடயங்களை தம் விருப்பம்போல் தெரிந்தெடுத்து கற்பிக்கவும் சுதந்திரம் வழங்கப்பட்டுள்ளது.

### கணித ஒலிம்பியட்

விளையாட்டுத் துறையில் ஆர்வத்தை வளர்க்க [illegible] நடத்தப்படுவது போல் கணிதத்தில் ஆர்வத்தையும் ஆற்றலையும் வளர்க்க கணித ஒலிம்பியட்கள் Mathematical Olympiads) நடத்தப்படுகின்றன. ரஷ்யாவில் முதலாவது கணித ஒலிம்பியட் 1934 ஆம் ஆண்டில் லெனின்கிராட் நகரில் நடத்தப்பட்டது. அன்று தொடக்கம் இவை மக்களிடையே மிகுந்த புகழ் பெற்றவையாக விளங்கி வருகின்றன. இவை மூன்று மட்டத்தில் நடத்தப்படுகின்றன. (1) பாடசாலை (2) பெரிய பிரதேசம் (3) நாடு. இரண்டாவது மட்டத்தில் பல்கலைக்கழக ஆசிரியர்கள் பிரதேசங்களிலுள்ள நிலையங்களுக்குச் சென்று நேர்முகப் பரீட்சைகள் மூலம் 500 மாணவர் வரையில் தெரிந்தெடுக்கின்றனர். கோடைகால வகுப்புகள் 3 வாரங்கள் [illegible] நடத்துகின்றனர். விரிவுரைகள், கணிதப்பிரசினங்களை விடுவித்தல் என்பன அப்போது இடம் பெறுகின்றன. அத்துடன் அம்மாணவர்களை பல்கலைக்கழகங்கள், ஆராய்ச்சி நிலையங்கள் ஆகியவற்றிற்கு அழைத்துச் செல்கின்றனர். இவற்றின் மூலம் கணித விஞ்ஞான ஆராய்ச்சியில் அவர்களுக்கு ஆர்வத்தையும் கவர்ச்சியையும் ஊட்ட முனைகின்றனர். பின்பு இவர்கள் இரு ஒலிம்பியட் போட்டிப் பரீட்சைகளுக்குத் தோற்றுகின்றவர். இவற்றிற்குத் தோற்றுவோரில் 60 நூற்றுவீதமானோர் விசேட பாடசாலைகளில் இடம் பிடிக்கின்றனர்.

ரஷ்யாவில் புகழ் பெற்ற கணித ஒலிம்பியட் போட்டிகள் தற்போது சர்வதேசமட்டத்திலும் நடத்தப்படுகின்றன. முதலாவது சர்வதேச கணித ஒலிம்பியட் 1959இல் ருமேனியாவில் நடைபெற்றபோது அதில் ஆறு கிழக்கு ஐரோப்பிய நாடுகள் மட்டுமே பங்குபற்றின. இருபதாண்டுகளுக்குப் பின் லண்டனில் நடைபெற்ற போட்டியில் இருபத்திரண்டு நாடுகள் பங்குபற்றின. அதில் ரஷ்யாவே முதலிடம் பெற்றது.

எந்தப் பாடத்திலும் திறமையை வளர்த்துக் கொள்ள கணித ஆற்றல் அவசியமாகின்றது. இதனுலேயே ரஷ்யர்கள் அதற்கு முதன்மை கொடுத்து முன்னேற்றமடைந்துள்ளனர். நாமும் இவற்றை உணர்ந்து நமது கல்வியமைப்பில் இயலுமான வரையில் பொருத்தமான மாற்றங்களையேற்படுத்தி நன்மைபெறலாம். இத்தகைய விடயங்கள் பற்றிய அறிவு விரும்பத்தகும் மாற்றங்களை நாமே இயன்றவரையில் புகுத்த ஊக்கமளிக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ் அரசினர் தனியார் பாடசாலை

# உதைபந்தாட்டப் போட்டிகள் ஒரு குடைக்கீழ் நடைபெறுமா?

## விளையாட்டுத் துறை

யாழ்ப்பாண மாவட்டத்தில் உதைபந்தாட்ட பருவ காலம் ஆரம்பமாகவுள்ளது. யாழ்ப்பாணத்தில் எல்லாவகையான விளையாட்டுக்களும் ஆடப்பட்டாலும் உதைபந்தாட்டத்துக்கு இரசிகர்கள் மத்தியில் ஒரு தனி இடம் உண்டு

உதைபந்தாட்ட போட்டிகள் நடைபெறும் இடமெல்லாம் ரசிகர்கர்கள் பெரிய அளவில் திரள்வதும் கிராமம் கிராமமாக சுற்றுப் போட்டிகள் நடைபெறுவதும் உதைபந்தாட்டம் இங்கு எவ்வளவு பிரபல்யமானது என்பதை அறிவதற்கு ஒரு சான்று.

யாழ்ப்பாணத்தை சேர்ந்த பிரான்சிஸ் கொன்சலஸ், அப்பையா தயாளன் போன்றவர்கள் அகில இலங்கை ரீதியிலான கோஷ்டிகளை பிரதிநிதித்துவம் செய்தவர்கள் இன்னும் திறமையான வீரர்கள் பலர் இருந்தும் எம்மத்தியில் உள்ள ஒற்றுமையினம் காரணமாகவும் வேறு காரணங்களாலும் இவர்கள் நன்கு பிரகாசிக்க முடியாமல் போய்விட்டது.

யாழ்ப்பாணத்தில் உள்ள விளையாட்டு கழசங்களில் எல்லாம் பல சிறந்த உதைபந்தாட்ட வீரர்கள் இருந்த போதும் ஒரு பலமான யாழ் மாவட்ட கோஷ்டி என்றுமே அமைந்ததில்லை.

1978 ஆம் ஆண்டு சூறுவளி நிவாரண நிதிக்காக இலங்கையில் உள்ள பிரபல்யமான கழகங்களும், மாவட்ட கோஷ்டிகளும் கலந்து கொண்டன. இதில் யாழ் மாவட்டத்தில் இருந்த கழகங்கள் எல்லாம் கூட்டாக இணைந்து ஒரு கோஷ்டியாக ஆடியிருந்தால் அந்தக் கோஷ்டியே சாம்பியனாகத் தெரிவு செய்பட்டிருக்கலாம். ஆனல் அவ்வாறு ஆடாமல் தனி இரண்டு கழக கோஷ்டிகளாக போட்டியிட்டன. இதன் விளைவாக இரண்டு கோஷ்டிகளும் ஆரம்ப ஆட்டங்களிலேயே தோல்வியடைந்து வெற்றி வாய்ப்பையும் இழந்தன. இது எமது ஒற்றுமையினத்துக்கு ஒரு சிறந்த எடுத்துக்காட்டு. விளையாட்டு கழகங்கள் மட்டத்தில்உள்ள நிலை இது.

கல்லூரி மட்டத்தில் உதைபந்தாட்ட போட்டிகள் இந்த மாத பிற்பகுதியில் ஆரம்பமாக உள்ளன. ஆனல் அங்கும் இரண்டு அணிகளில் தான் போட்டிசள் நடைபெற்று வந்துள்ளன.

அரசாங்க பாடசாலைகளை உள்ளடக்கிய அணிகள் யாழ்ப்பாண பாடசாலைகள் விளையாட்டு சங்கம் என்ற அணியிலும் (Jssa) தனியார் பாடசாலைகள் யாழ்ப்பாண பாடசாலைகள் உதைபந்தாட்ட சங்கம் (Jsfa) என்ற அணியிலும் உதை பந்தாட்டப் போட்டிகளைத் தமக்குள் தனித் தனியாகவே நடாத்தி வந்துள்ளன.

இவ்வாறு தனித்தனி போட்டிகளை நடாத்துவதற்கு இரண்டு சங்கங்களும் பல தர்க்க ரீதியான காரணங்களை முன் வைக்கலாம்.

ஆனல் யாழ்ப்பாணத்தில் உதைபந்தாட்டம் வளர வேண்டும். சர்வதேச தரத்தில் உதைபந்தாட்ட வீரர்கள் உருவாக வேண்டும் என்று ஒருஎண்ணம் மேலோங்கி இருக்குமாயின் இந்தக் காரணங்கள் யாவும் ஒரு பிரச்சினையாக அமையாமல் போகும்.

ஒரு சிலருக்கிடையில் உள்ள கருத்து வேறுபாடுகளும் தனிநபர் குழுக்களுக்கிடையேயான போட்டி மனப்பாண்மைகளும் இந்த சங்கங்களின் முடிவுகளில் பிரதிபலிக்க கூடாது.

இம் முறை பாடசாலைகளுக்கு இடையில் நடைபெற உள்ள உதைபந்தாட்டப் போட்டிகளை இந்த இரண்டு சங்கங்களும் (Jssa, Jsfa) இணைந்து நடாத்த முன்வரவேண்டும். அப்போது தான் உதைபந்தாட்ட ரசிகர்கள் முழுமையான போட்டிகளை கண்டு களிக்கக்கூடியதாக இருப்பதுடன் பாடசாலை மட்டங்களிலேயே பாடசாலைகளுக் கிடையில் ஒற்றுமையும், புரிந்துணர்வையும், விளையாட்டுத் தன்மையும் (Sports men shib) வளர்க்க உதவும் இந்த ஒற்றுமை தான் எமது இன ஒற்றுமைக்கு முன் மாதிரியாக அமையும்.

எனவே சம்பந்தப்பட்டவர்கள் எமது கோரிக்கையை நாம் தம் மீது குற்றம் காணுவதாகவோ, அன்றி அவர்களை சிறுமைப்படுத்துவதாகவோ கருதாது தங்களுக்குள் இணைந்து எல்லா பாடசாலைகளும் கலந்து கொள்ளும் பூரணமான பாடசாலை உதைபந்தாட்ட ஆட்டங்களை ஏற்பாடு செய்வார்கள் என எதிர்பார்க்கின்ருேம்.

விளையாட்டு கழகங்களும் தமக்குள் உள்ள வேற்றுமைகளை பெரிதுபடுத்தாது பல உதைபந்தாட்ட பயிற்சி முகாம்களை அடிக்கடி நடத்திப் பல உதைபந்தாட்ட வீரர்களை சர்வதேச ரீதியில் உருவாக்க முன்வரவேண்டும் அப்போதுதான் யாழ்மாவட்டத்தில் உதைபந்தாட்டத்தின் தரம் உயர்வதுடன் பல மரடோனக்களும் பேலேகளும் உருவாகவும் வழி பிறக்கும்

- ஈசன் -

# ரசிகர்கள் மீது விசாரணை

1985 ஆம் ஆண்டு இங்கிலாந்தின் லிவர்பூல் அணிக்கும் பெல்ஜியத்தில் உள்ள விளையாட்டு சழகம் ஒன்றிற்கும்இடையில் நடந்த உதைபந்தாட்டப் போட்டியொன்றில் ரசிகர்களிடையே இடப்பெற்ற மோதலில் 39 பார்வையாளர்கள் பலியானுர்கள்.

இந்த மோதலுக்கு பொறுப்பானவர்சள் என்று 22 லிவர் பூல் ரசிகர்கள் மீது குற்றம் சுமத்தியது பெல்ஜியம் அரசு. அத்தோடு நில்லாமல் அவர்களை பிரிட்டனில் இருந்து நாடு கடத்தும் படியும் அவர்கள் மீது பெல்ஜியம் நாட்டு சட்டங்களின்படி தான் வழக்கு தொடரப்போவதாகவும் அறிவித்திருந்தது.

பெல்ஜியம் அரசின் இந்த வேண்டுகோளை எதிர்த்து இந்த விளையாட்டு ரசிகர்கள் பிரிட்டனில் உள்ள கீழ் மட்ட நீதிமன்றங்கள் முதல் மேல்மட்ட நீதிமன்றங்கள் வரை சென்றனர். ஆனல் அவற்றின் தீர்ப்புகள் எல்லாம் அவர்களுக்கு பாதகமாகவே அமைந்தன. ஏனெனில் அவை எல்லாம் குற்றம் சாட்டப்பட்ட சகலரும் நாடு கடத்தப்பட வேண்டும் என்பதை வலியுறுத்தின.

சட்ட நடவடிக்கைகளால் நாடு கடத்தல் நடவடிக்கையைத் தடுக்க முயன்று தோற்றுஇறுதியில் பிரிட்டனின் உள்துறை அமைச்சர் டக்ளஸ் கோர்டை அணுகிய போது அவரும் கையை விரித்துவிட்டார்.

குற்றம் இழைத்தவர்வள் நாடு கடத்தப்பட வேண்டும் என்றும் அவர்கள் மீதான விசாரணைகள் குற்றமிழைக்கப்பட்ட இடங்களிலேயே நடைபெற வேண்டும் என்றும் வலியுறுத்தியுள்ளார் டக்ளஸ் கோர்ட்.

இந்தமுடிவின் பேரில் தற்போது குற்றம் சுமத்தப்பட்ட 22 நபர்களும் பிரிட்டன் சென்றல் சிறைச்சாலையில் அடைத்து வைக்கப்பட்டுள்ளனர்.

வெகு விரைவில் பல்ஜியத்துக்கு நாடு கடத்தப்படவுள்ள இவர்கள் மீதான விசாரணை அடுத்த வருடம் பெல்ஜியத்தில் அவர்களின் சட்ட நடைமுறைகளுக்கு ஏற்ப நடாத்தப்படும்.

இவர்கள் மீது குற்றம் நிரூபிக்கப்படுமானல் 10 ஆண்டுகள் கடுழிய சிறைத்தண்டனை விதிக்கப்படலாம். ★

# இந்திய - இலங்கை ஒப்பந்தம்

## இணை அமைச்சர் நட்வர்சிங் கருத்து

இலங்கை ஒப்பந்தத்தை அமுல் நடத்துவதில் உள்ள பிரச்சினைகள் குறித்து இந்திய அரசு மெத்தனமாக இருக்கின்றது. என்ற கேள்விக்கே இடமில்லை.

முழுவதுமே நுணுக்கமான, உணர்ச்சிமிக்க நடவடிக்கையாக உள்ளது.

நான்கு ஆண்டுகளாக இழுபட்டு வந்த இலங்கைப் பிரச்சனை குறித்து இந்த ஒப்பந்தம் கைச்சாத்தானது

> இந்திய - இலங்கை ஒப்பந்தம் பற்றி இந்திய லோக சபையில் சிறப்பு விவாதம் நடைபெற்றதல்லவா!
> அந்த விவாதத்துக்கு வெளியுறவு இணை அமைச்சர் நட்வர்சிங் பதிலளித்துப் பேசினுர்.
> அப்பேச்சு இங்கு பிரசுரமாகின்றது.

பெரும் 'அற்புதம்' என்றே சொல்ல வேண்டும்.

ஒப்பந்த அமுல் குறித்து எழுப்பப்பட்ட சந்தேகங்கள் பற்றி இந்திய அரசு தனது கவனத்துக்கு எடுத்துக் கொண்டுள்ளது.

மணித்தியாலத்துக்கு ஒரு தடவை பிரதமர் இலங்கை நிலைமை பற்றி கவனித்துக் கொண்டு வருகின்ருர்.

அவரின் தலைமையின் கீழ் குழுவொன்று தினமும் எழுப்பும் நிலைமைபற்றி மதிப்பீடு நடத்தி வருகின்றது.

எதிர்பாராதது எதுவும் நடக்கக்கூடும் என்று சாத்தியக் கூறும் உண்டு.

அப்படி நடைபெறும் பட்சத்தில் எம்மிடத்தில் மாற்றுத்திட்டம் உண்டு.

எதிர்பாராதது எதுவும் நடக்கும் சமயம் நாம் தயாராக இல்லை என்று சொல்ல முடியாதபடி நாம் ஆயத்த நிலையில் உள்ளோம்.

இலங்கை விஷயத்தில் தெளிவான கொள்கை இந்திய அரசுக்குக் கிடையாது என்று முன்னர் பரிகசிக்கப்பட்டது.

இலங்கைப் பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காணப்பட வேண்டும் என்று நாம் தொடர்ந்து கூறி வந்தோம்.

அந்த விருப்பத்தை ஒப்பந்தம் பூர்த்தி செய்தது; தமிழரின் அபிலாஷைகளையும் அது பூர்த்தி செய்தது.

டிசம்பர் 19 இல் ஒரு தீர்வுக்கு நெருங்கி வந்தோம். அதன் பின்னரே பிரதமர் காந்தியின் சிந்தனையில் இத்திட்டம் உருவானது.

ஒப்பந்தத்தின் கதாசிரியர், இயக்குநர், தயாரிப்பாளர், வழிநடத்துநர் அனைவரும் பிரதமர் ராஜீவ் காந்தியே.

வடக்கு, கிழக்கு மாகாணங்களுக்கு இடையேயான இணைப்புப் பற்றிய சர்வசனவாக்கெடுப்பு இடம் பெற்றுலும் நல்லது தான்; இடம் பெறுவிட்டாலும் நல்லது தான்.

சர்வசன வாக்கெடுப்பு இடம் பெறுவிட்டால் படியே இருந்தால் சர்வசனவாக்கெடுப்புப் பிரச்சினையாக இராது.

ஒப்பந்தம் கையெழுத்திட முன்னர் புலிகள் தலைவர் பிரபாகரன் பிரதமருடனும் இந்திய அரசு அதிகாரிகளுடனும் பேச்சுக்கள் நடாத்தினர்.

தமிழில் தருபவர்: எஸ். ஜி

வடக்கு, கிழக்கு மாகாணங்கள் ஒன்றாக இருக்கும்.

எப்படியிருப்பினும் மக்கட்தொகை ரீதியில் எதிர்வரும் மாதங்களில் மாற்றம் இருக்கத்தான் போகின்றது.

அப்பகுதியில் உள்ள இன விகிதாசாரம் அப் பிரபாகரன் ஒப்பந்தத்தை எதிர்க்கவில்லை என்பது அவரின் அறிக்கைகளை பரிசீலனைசெய்து பார்த்தால் தெரிய வரும். இது விஷயத்தில் புலிகள் தலைவரின் பங்கு ஆக்கபூர்வமானதாக இருந்தது.

ஒப்பந்தம் குறித்து நாம் புளகாங்கிதம் அடையவில்லை. அதே நேரத்தில் ஒப்பந்தம் ஒரு சாதனை என்பதைக் குறைத்து மதிப்பிடமுடியாது.

இலங்கையில் இருந்து வெளியார் சக்திகள் அகற்றப்படும். இலங்கையின் சிவில், இராணுவ தேவைகளை நிறைவேற்ற இந்தியா உறுதி அளித்து உள்ளது. இந்த ஒப்பந்தம் இரண்டு அணிசேரா நாடுகளுக்கு இடையேயானது.

இரண்டு தலைவர்களின் வீரத்துக்கும் துணிச்சலுக்கும் 100 க்கு 100 புள்ளிகள் வழங்கப்பட வேண்டும்.

இரண்டு தலைவர்களாலும் பரிமாறிக் கொள்ளப்பட்ட கடிதங்களும் முறையான ஒப்பந்தம் ஒன்றின் அந்தஸ்தைப் பெற்றுள்ளன.

இந்தியப் பிரதமரும் இலங்கை ஜனதிபதியும் உத்தியோகரீதியில் பரிமாறிக் கொண்ட கடிதங்கள் அவை.

திருகோணமலை எண்ணைக் குதங்களைத் திருத்துவது குறித்து சிங்கப்பூர் - மேற்கு ஜேர்மனி - சுவிட்சர்லாந்து நிறுவனத்துடன் இலங்கை அரசு செய்து கொண்ட ஒப்பந்தம் 1985 அக்டோபருடன் காலாவதியாகி விட்டது.

ஆகவே எண்ணைக் குதங்களைத் திருத்தும் இந்திய - இலங்கை கூட்டுத்திட்டத்தைச் செயல்படுத்துவதில் பிரச்சினையே இருக்காது.

ஒப்பந்தம் கட்சி அரசியலுக்கு அப்பாற்பட்டது. தேசிய ரீதியானது அது.

இந்த உணர்ச்சி பூர்வமான பிரச்சினையில் இயற்கையாக எழக்கூடிய பிரச்சினைகளை இந்திய அரசு அறிந்துள்ளது

அபாயத்தை உணர்ந்தே நாம் இதில் ஈடுபட்டுள்ளோம். முயற்சியில் ஈடுபடாமல் நாம் ஒன்றையும் அடையமுடியாது.

—இனப்பிரச்சினைக்கு முடிவு காணவேண்டும் என்ருல்,

—இந்தியாவைச் சுற்றி பாதுகாப்புச் சூழல் பலப்படுத்தப்பட வேண்டும் என்ருல்

— இந்தியாவில் உள்ள அகதிகள் திருப்பி அனுப்பப்படவேண்டும் என்ருல்,

— தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ்க்கைதிகள் இலங்கைச் சிறைகளில் இருந்து விடுதலை செய்யப்பட வேண்டும் என்ருல்,

இப்படியான ஓர் ஒப்பந்தம் உருவாக்கப்பட்டேயாக வேண்டும்.

பிரச்சினையின் அடிப்படைக் கோரிக்கைகளை ஒப்பந்தம் பூர்த்தி செய்கின்றது. ★

# இலவசக் கல்வியால் பயன்பெற்ற இளைஞர்கள் சமுதாயத்துக்கு என்ன செய்யப்போகிருர்கள்?

இலவசக் கல்வி தொடர்பான இந்துக் கல்வி இயக்கப் பூட்கைகள்தனித்துவம் வாய்ந்த ஓர் உள்ளடக்கத்தைக் கொண்டிருந்தமை கட்டிக் காட்டப்படவேண்டியுள்ளது.

தர மேம்பாட்டைப் பேணுத இலவசக் கல்வி இந்த நாட்டின் பெரும்பான்மையான வறியார்க்கு வழங்கப்பட்டமை விமர்சனத்திற்குரிய கல்விப் பண்பாகச் சுட்டிக் காட்டப்படுகின்றது.

மக்கள் மத்தியில் இலவசக்கல்வி நடவடிக்கைகள் வினையாற்றல் கொள்வதற்கும், தரமேம்பாட்டைக் கொள்வதற்கும் இயக்கங்கள் பின்வரும் செயற்பாடுகளை மேற்கொண்டன.

இந்நாட்டின் பெரும்பான்மையான மக்கள் கிராமப்புறங்களில் வாழுகின்றமையால் கிராமப்புறப் பள்ளிக்கூட விரிவாக்கமின்றி இலவசக் கல்வி என்பது ஏட்டளவில் இலட்சியமாகவேபட்டன. அமைந்து விடும்.

இலவசக்கல்வி தரமேம்பாட்டை உள்ளடக்கியதாகவிருத்தல் வேண்டும். ''தரத்திற் குறைந்த இலவசக் கல்வி'' என்பது குடியேற்ற நாட்டாதிக்க வர்க்க முறைமையின் வெளிப்பாடாக விளங்கியது. தரம்மிக்க இலவசக்கல்வியை ஏற்படுத்த ஆசிரியர் கல்வி பாடநூலாக்கம், மதிப்பீட்டு உபாயங்கள் முதலியவற்றிலும் கவனஞ் செலுத்தப்பட்டது.

''இலவசக் கல்வி'', என்றஇலட்சியம் வெற்றி பெற ''கல்வியை இலவசமாக வழங்குதல்'' மட்டும் போதுமானதன்று. மாணவரின் அடிப்படைத் தேவைகள் நிறைவேற்றி வைக்கப்படும்போது தான் அந்த ஒப்புயர்வற்ற இலட்சியம் கைகூடும். அதன் பொருட்டு, ''அன்னம், வஸ்திரம், புத்தகம்'' போன்றவற்றை இலவசமாக வழங்கும் செயற்திட்டங்களும் பள்ளிக்கூடங்களில் ஆரம்பிக்கப்

கல்வியின் வாழ்க்கை தழுவிய முக்கியத்துவம் சமயப்பிரசங்க அவைகளிலே எடுத்துக் கூறப்பட்டு, சிறுவர்கள் பள்ளிக்கூடங்கள் செல்ல வேண்டிய பண்பாடு மீள வலியுறுத்தப் பட்டது. பள்ளிக்கூடம் சென்றவர்களுக்கு ஒழுக்க மரபு

> யாழ் பல்கலைக் கழகத்தில் கல்வித் துறைத் தலைவர் பேராசிரியர் ப: சந்திரசேகரம் நிகழ்த்திய லீலாவதி இராமநாதன் பெருமாட்டி நினைவுப் பேருரையின் ஒரு பகுதி இது.

உரைகளிலே வற்புறுத்தப்பட்டது. பள்ளி செல்லா வாழ்க்கை, வாழ்க்கை அன்று என்பதை விளக்கும் உபகதைகள் பிரசங்கங்களிலே முறைசாரா அனுபவங்களாக வழங்கப்பட்டன.

இந்துக்கல்வி மரபிற் காணப்படும் பிறிதொரு சிறப்பு அம்சம் இலவசக் கல்வி தொடர்பாக எழுப்பப்பட்ட வினுவாகும். கல்வி இலவசமாகத் தரப்படுகின்றது; அதனைப் பெற்றுக் கொள் என்ற ஒரு பக்க நியாயத்தை மட்டும் இந்துக் கல்வி மரபு வற்புறுத்த

## இப்படிக் கேட்பது இந்துக்கல்வி மரபு

வில்லை. இலவசமாகக் கல்வியைப் பெற்றுக் கொண்டமைக்குப் பிரதியுபகாரமாக யாது செய்யப்போகிருய்? என்ற வினவும் எழுப்பப்பட்டது. நீ பெறும் கல்விப் பயனையும் பொருட் பயனையும் மீண்டும் பகிர்ந்து கொள். யாம் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்'' என்ற அகில நோக்கு மாணவர்க்கு எடுத்து இயம்பப்பட்டது.

இவற்றின் நடை முறைப் பயன்கள் இடமாகவும் தாமிழ்

தும் உணரப் பெற்றன. இலவசக் கல்வி வாயிலாக உத்தியோக வாய்ப்புக்களைப் பெற்றோர் தாம் வாழும் கிராமங்களில் உள்ள பள்ளிக் கூடங்களுக்கு அறக் கொடைகள் வழங்கிய பல சந்தர்ப்பங்கள் காணப்படுகின்றன.

இந்துக்கல்வி இயக்கத்தினர் மேற்கொண்ட இலவசக்கல்வி நடவடுக்கைகள் தாய்மொழிக் கல்விக்கு வழங்கிய முக்கியத்துவத்தினுல்மேலும் மேலும் வலிமை பெறலாயின.

ஒன்றரை நூற்ருண்டுக் காலப் பிரித்தானிய ஆட்சியும், அந்த ஆட்சி வழங்கிய சமூக பொருளாதார விசைகளும் பருமட்டாக ஏழு சத வீதத்தினரை மாத்திரம் ஆங்கில மொழி அறிவுடையோராகப் மாத்திரமே. இலவசக் கல்விக்கும் தாய்மொழிக்குமுள்ள

மெய்மை நிலைப்பட்ட தொடர்புகளை விளக்குகின்றது. இலவசக் கல்வியும் தாய்மொழி மூலக் கல்வியும் ஒன்றிணைக்கப்படும் பொழுது தான் யதார்த்த பூர்வமான கல்வி விரிவாக்கம் நிகழ முடியும் என்ற அனுபவ பூர்வமான செயற்பாடுகளை இந்துக் கல்வி இயக்கங்கள் வலிமைப்படுத்தி வந்தன.

சிந்தனையும் மொழியும் ஒன்றையொன்றுவிட்டுப் பிரியாத நிலையில் உள்ளமையால் கல்விமொழி தாய்மொழியாகவே இருக்கவேண்டும் இலவசக் கல்வியின் வெற்றி தாய்மொழித் தொடர்பினுல் முழுமை பெற வேண்டியுள்ளது. கல்வி விசேடமாகத் தாய்மொழி, சமயப்பண்பு ஆகியவற்றில் உதித்து முழுமை பொருந்திய சமுதாயத்தைஉருவாக்க வேண்டும். ★

தொகுப்பு- இரகுபரன்

## மிகப் பழைய சிலை

★ இதுவரைக்கிடைத்த சிலைகளுள் மிகப்பழைமையானது எது தெரியுமா?

சிறிய கல்லில் முகத்தின் வடிவம் செதுக்கப்பட்ட சிலை ஒன்று ஆப்காலிஸ்தானில் கண்டு பிடிக்கப்பட்டிருக்கிறது. இருபதாயிரம் வருடங்களுக்கு முந்தியது. எனக் கருதப்படும் இந்தச் சிலை தான் காலத்தால் முந்தியது.

## அகதிகள் கூடிய கண்டம்

20 கோடி ஆபிரிக்க மக்களில் 60 சத வீதத்தினர் பஞ்சத்தில் வாடுகிருர்கள். வருடந்தோறும் பல லட்சக்கணக்கானேர் பட்டினியால் உயிரிழக்கின்றனர்.

அகதிகளைக் கொண்டிருக்கும் கண்டங்களில் முன்னணியில் நிற்பது ஆபிரிக்காதான் அங்கு ஒரு கோடி பேர் அகதிகள்.

வரட்சி,பட்டினி ஆகியவற்றினுல் மிகவும் பாதிக்கப்பட்டிருக்கும் 20 ஆபிரிக்க நாடுகளுக்கு அவசர நிவாரணம் வழங்குவதற்கு 1.5 பில்லியன் டொலர் தேவைப்படுவதாகமதிப்பீடப்பட்டிருக்கிறது.

இதேவேளை ஆபிரிக்க நாடுகளில் அமெரிக்க நிறுவனங்கள் மட்டும் மூன்று வருட காலத்தில் 4 மில்லியன் டொலரை லாபமாகச் சுருட்டிச் சென்றிருக்கின்றன. ஆனல் அமெரிக்கா இந்த நாடுகளுக்கு வழங்கியிருக்கும் நிவாரண உதவியோ மிகக்குறைவு.

இந்த நாடுகள் ஆயுதங்களை அதிகம் வாங்குவதை அமெரிக்கா தூண்டி வருகிறது. இவற்றுக்கு தனது ஆயுதங்களை விற்று அமெரிக்கா பெறும் லாபத்துடன் ஒப்பிடும்போது அது செய்யும் உதவி மூன்றில் ஒன்றுதானும். ★

## மார்க்கோஸ்---

(2ஆம் பக்க தொடர்ச்சி)

கண்ணிவெடியில் பிலிப்பீன்ஸ் இராணுவத்தினர் சிலர் உயிரிழந்தனர்.

மார்க்கோஸ் ஆதரவாளர்களை ஒரு புறமும் கம்யூனிஸ்டுகளை மறு புறமும் சமாளிக்க வேண்டிய இக்கட்டான நிலையில் திருமதி அக்கினே இருந்து வருகிருர். ★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### அளவெட்டியில் சகாய விற்பனை

6 9-87 ஞாயிறன்று 'அளவெட்டி 'கும்பழாவளைப் பிள்ளையார்கோவில் தேர்த் திருவிழாவில மில்க்வைற்காட்சிச் சாலையில் ரூபா 15-00 றகு மில்க்வைற் தயாரிப்புகளை வாங்கும் அன்பர்களுக்கு தேவாரம், அறிவு நூல்கள் வீட்டுத்தோட்ட விதைகள, பொலீத்தீன் பைக, உடன் மேலதிகமாக அழகிய விநாயகர் ஸ்ரிக்கர் அன்பளிப்பாக வழங்கப்படும். மில்க்வைற் தயாரிப்புகளின் மேலுறைகள் சேகரித்து வைத்திருக்கும் அன்பர்கள் அங்கு கொடுத்து பெறுமதிவாய்ந்த பரிசுகளைப் பெற்றுக்கொள்ளலாம்,

மில்க்வைற் — யாழ்ப்பாணம்



# சஞ்சீவி

05 - 09 - 1987 சனிக்கிழமை



### உலகைத் திருத்த வழி

''முதலில் உன்னை பரிசுத்தம் செய்துகொள், அப்பொழுதுதான் நீ உலகைப் பரிசுத்தம் செய்யமுடியும் முதலில் உன்னைத் திருத்திக் கொள், பிறகுதான் நீ உலகத்தைத் திருத்த முடியும். – சுவாமி சிவானந்தர்

20 மில்க்வைற் நீலசோப் அல்லது பார்சோப் மேலுறைகளை அனுப்பி சுவாமி சிவானந்தரின் ''சிவானந்தத்தேன்'' என்ற நூலைப் பெற்றுக்கொள்ளுங்கள்.

மில்க்வைற் — யாழ்ப்பாணம்,


# கிழக்கில் எஞ்சியுள்ள தமிழ் மண்ணை பறிக்கும் சதி அவசர அமுலாக்கம்

'எஞ்சியுள்ள விஷயங்கள்' குறித்து பேச்சுக்கள் நடைபெறுகின்றன. கொழும்பிலும் புதுடில்லியிலுமாக மாறிமாறிப் பேசப்படுகின்றது.

முதற்கட்டப் பேச்சு கொழும்பில் நடைபெற்றது இரண்டாம் கட்டப் பேச்சு புதுடில்லியில் வெள்ளிக்கிழமையுடன் முடிவடைந்து விட்டது,

வெள்ளிக்கிழமைப் பேச்சுக்களுடன் 'எஞ்சி உள்ள விஷயங்கள், பற்றி இணக்கம் காணப்பட்டு விடும் என்று ஒரு செய்தி தெரிவித்தது.

மூன்றும் கட்டமும் இறுதிக்கட்டமுமான பேச்சுக்கள் மீண்டும் கொழும்பில் இம்மாதம் நடுப்பகுதியில் இடம் பெறலாம்

அப்போது மாகாண சபைச் சட்ட மூலத்தின் இறுதிவடிவம் வெளியாகலாம்.

இப்படி இன்னொரு செய்தி கூறுகின்றது.

'எஞ்சியுள்ள விஷயங்கள்' என்றால் என்ன?

ஒப்பந்தம் வெறும் கூடுதான். இனித்தான் எலும்பும் சதையும் சேர்த்து உருவமாக்க வேண்டும். ஒப்பந்தம் லைகச்சாத்தானவுடன் கூட்டணிப் பிரமுகர் நீலன் திருச்செல்வம் சொன்ன கருத்து இது.

'கூடு' என்றால் ... வடக்கு, கிழக்கு இணைந்த மாநிலம்தான் அது.

அந்த மாநில அரசுக்கு என்ன அதிகாரங்கள் வழங்கப்பட வேண்டும் என்பதுதான் அந்த 'எஞ்சியுள்ளவிஷயங்கள்' (Residual Matters).

**எஞ்சியுள்ள மண்**

தமிழரின் முக்கிய அபிலாஷைகளில் ஒன்று வடக்கு, கிழக்கு இணைந்த மாநிலம்.

ஒப்பந்தத்தில் அது காட்டப்பட்டுள்ளது. ஆனால் 'கண்டம்'ஒன்றும் அதில் புகுத்தப்பட்டுள்ளது.

'கண்டம்' ஒரு வருடத்தில் திரவேண்டும்.

ஆனால் ஒப்பந்தத்தில் உள்ள இன்னொரு விதி, அது 'நித்திய கண்டமாக' 'பூரண ஆயுசுடன்' இருக்க வழி வகுத்திருப்பதாகவும் ஒரு சாரார் கருதுகின்றனர்.

இணைந்த மாநிலத்தைத் துண்டிக்க அக்'கண்டம்' பயன்படுத்தப்படும் என்று அரசுப்பிரமுகர்கள் பலரும் பேசுகின்றார்கள்.

தமிஷ்டரே கூறிவிட்டார், துண்டிக்கவேண்டும் என்று பிரசாரஞ் செய்யப் போவதாக!

முப்பது ஆண்டுகளுக்கு முன்னர் இணைப்பை எதிர்க்கப்போய்த்தானே நாடு பிரிக்கப்படும் நிலைக்கு வந்தது என்பதை இன்னும் உணர மறுக்கின்றார்கள். இதனிடையில் கிழக்கு மாகாணத்தில் 'எஞ்சியுள்ள விஷயங்களைக்' கவனிப்பதில் சில சக்திகள் சுறுசுறுப்பாக ஈடுபடுகின்றன என்று ஒரு செய்தி கூறுகின்றது.

அரசு திட்டமிட்டு

**உள்ளும் புறமும்**

(குறுமுனி)

நடத்திவந்த சிங்களக் குடியேற்றங்கள் கிழக்கு மாகாணத்தின் பெரும் பகுதியை அபகரித்து விட்டன.

தமிழர் மண் பறி போய்விட்டது. முஸ்லிம்களின் மண்ணும் பறி போய்விட்டது.

தமிழர், முஸ்லிம்களுக்கு என்று 'எஞ்சியுள்ள மண்' ணைப் பறிக்கும் வேலைதான் இப்போது கிழக்கு மாகாணத்தில் திட்டமிட்டு நடத்தப் படுகின்றது

இணைப்புக்கு எதிரான சத்திகளோ இதனைத் தூண்டி விட்டுள்ளன. அதுவும் திருகோணமலை மாவட்டத்தில் 'எஞ்சிய மண்ணைப்பறிக்கும்' வேலைகள் மும்முரமாக நடைபெறுகின்றன.

பஸ்களிலும் வான்களிலும் பெரும்பான்மை இனத்தவர்கள் கொண்டு வந்து குவிக்கப் படுகின்றார்கள். இடம் பெயர்ந்த சிங்கள அகதிகள் என்ற போர்வையில் இப் 'பணி' தொடர்கின்றது.

**காணி பறிக்கும் அவசரம் ஏன்**

முப்பது ஆண்டுகளாகக் குடியேற்றியும் முழுவதுமாகப் பறிக்க முடியாதவர்கள், மூன்று மாதங்களுக்குள் மிகுதியைச் செய்து முடிக்கலாம் என்று திட்டமிட்டுச் செயல் படுகின்றனர்.

மூன்று மாதங்கள் என்றால்......

டிசம்பரில் இணைந்த மாநில சபைக்கான தேர்தல் நடத்தப்பட வேண்டும்.

அப்போது வடக்கும் கிழக்கும் இணைந்த ஒரு மாநில நிர்வாகம் தெரிவு செய்யப்படும்.

அவசரமாகக் குடியேற்றப்படுபவர்கள் அத் தேர்தலில் வாக்களிக்க முடியாது.

அப்படி இருக்கும் போது ஏன் அவசரப் பட்டுக் குடியேற்றப் பட வேண்டும்?

ஒன்று, இணைந்தமாநில நிர்வாகம் ஜனவரியில் ஏற்பட்ட பின்னர் இந்த மாதிரி கண்டம் விட்டு கண்டம்' பாயும் குடியேற்றங்களை நடத்த முடியாது.

இரண்டாவது, ... வாக்காளர் பட்டியலில் பெயர் பதிந்து வைத்து உள்ள சிங்களவர்களை கொண்டு வந்து சேர்ப்பிக்கும் நடவடிக்கையாகவும் இது இருக்கக்கூடும்.

மாநில நிர்வாகம் வருவதற்கு முன்னர் 'மண்ணின் மைந்தனாகி' விடும் அவசர நிலைப்பாட்டைத் தான் முதலாவது காரணம் காட்டுகின்றது.

குரியனாறு என்னும் இடத்தில் இரண்டாயிரம் சிங்களவர்களின் பெயர்கள் வாக்காளர் பட்டியலில் பதியப்பட்டுள்ளனவாம். ஆனால் அவர்கள் அக்கிராமத்தில் இல்லையாம்.

இச் செய்தி உண்மையானால் இரண்டாவது காரணமும் ஓரளவு சரி என்றே கருதக்கூடியதாக இருக்கின்றது

**இஸ்ரவேல் பாணியில்**

'எஞ்சியுள்ள விஷயங்கள்' பற்றிய பேச்சுக்கள் நடைபெறும் இந்த நேரத்தில் 'எஞ்சியுள்ள தமிழ் மண்ணைப்' பறிப்பதாக உள்ள இத்திடீர்ச் சிங்களக் குடியேற்றங்கள் பற்றி இந்திய அரசுக்குத் தெரிவிக்சப் பட்டுள்ளது.

இக் குடியேற்றங்கள் நடைபெறும் எல்லைப் புறப் பகுதிகளுக்கு இந்திய அமைதிப்படையினர் அனுப்பப்பட்டிருப்பதாகவும் ஒரு செய்தி.

ஓர் இனத்தின் தனித்துவம் பாதுகாக்கப்பட வேண்டுமானால் மொழியிலும் பார்க்க அந்த இனம் வாழும் பிரதேசம் தான் முதலில் பாதுகாக்கப்படவேண்டும்.

நிலம் பறிபோனால் இனத்தின் சகல சுதந்திரங்களும் பறிபோய் விடும்.

நிலம் இல்லாத நாடு ஒன்றைப் பெயரளவில் வைத்து இருக்கும் பலஸ்தீனியர்களின் நிலைதான் தமிழனுக்கும் ஏற்படும்.

ஆக்கிரமிக்கப்பட்ட அரபுப் பிரதேசத்தில் தினமும் யூதர்களைக் குடியேற்றுவோம் – இப்படி இஸ்ரவேல் அமைச்சர் கடந்த வெள்ளிக்கிழமை கூறியிருந்தார்.

அதுவும் யூதர்குடியேற்றத்திட்டம் ஒன்றை ஆரம்பித்து வைத்துப் பேசுகையிலேயே அவர் அவ்வாறு கூறியிருந்தார்.

கிழக்கு மாகாணத்தில் தற்சமயம் சுறுசுறுப்பாக இடம்பெற்றுவரும் சிங்களக் குடியேற்றத்தை கவனிக்கும்போது அந்தப் பேச்சுத்தான் நினைவுக்கு வருகின்றது.

இஸ்ரவேலரின் ஆலோசனையைச் சம்பந்தப்பட்டவர்கள் இன்னும் முற்றாகக் கைவிடவில்லை என்பதையும் இது உணர்த்துகின்றது

கிழக்கு மாகாணத்தைப் பொறுத்த அளவில் எந்த ஆண்டின் வாக்காளர் எண்ணிக்கையைக் கணக்குக்கு எடுப்பது?

எதுவரை நடந்த குடியேற்றத் திட்டங்களைச் சட்ட பூர்வமாகக் கொள்வது?

இந்த விஷயங்கள் எல்லாம் 'எஞ்சிய விஷயங்கள்' பற்றிய பேச்சுக்களின்போது தீர்மானிக்கப்பட்டாகவேண்டும்.

முன்னரே தீர்மானிக்கப்பட்டிருந்தால் இந்த அவசரக் குடியேற்றத்துக்கு வாய்ப்பு இருந்திருக்காது.

இணைப்புக்கு முதன் முதலில் எதிர்ப்புத் தெரிவிக்கப்பட்ட ஆண்டில் இருந்த வாக்காளர் தொகையை அடிப்படையாகக் கொள்வதா?

அல்லாவிடில் எந்த ஆண்டின் வாக்காளர் தொகையை அடிப்படை படையாகக் கொள்வது? இவற்றைத் தமிழர் அமைப்புக்கள் ஆராய்ந்து சம்பந்தப்பட்டவர்களிடம் தெரிவித்திருப்பார்கள் என்று நம்பலாம்.

'எஞ்சிய விஷயங்கள்' பற்றிய பேச்சுக்கள் தமிழ்பேசும் இனத்தின் 'எஞ்சியமண்'ணைப் பாதுகாப்பதாகஅமையவேண்டும்.

இல்லையேல்— ஓர் ஆண்டின் பின்னர் வரும் 'கண்டத்தை'த் தீர்ப்பதற்கு உத்தரவாதம் அளித்தவர் 'நஞ்சை உண்ட திருநீலகண்டனாக' மாறவேண்டிய நிலை ஏற்படலாம் அல்லவா!


துர்க்காதேவியைப் போற்றினல் தேவைகள் பூர்த்தியாகும்.

புதிய டிசைன்களில் நகைகள் உற்பத்தி செய்வோர்.

உங்களுக்கு வேண்டிய ★ சிறந்த நகைகளை ★ காலத்திற்கும் தரத்திற்கும் உகந்தவாறு தயார்செய்ய சிறந்த ஸ்தாபனம்

## ஸ்ரீ முருகன் ஜுவலர்ஸ்

25, கே. கே. எஸ். றேட், சுன்னுகம்.



★ HORIZON Enterprises ★

## பிரயாண ஒழுங்குகள்

## HORIZON ENTERPRISES

## A. பத்மதாஸ்

எமது புளியங்கூடல் கிளைக் காரியாலயத்திற்கு பெண் லிகிதருக்கான பதவிக்கு புளியங்கூடல் சுற்றுடலில் தகுதிவாய்ந்தவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன- விண்ணப்பிப்போர் 06 - 09 - 87 ஞாயிற்றுக் கிழமை காலை 9 - 00 மணிக்கு எமது யாழ் தலைமைக் காரியாலயத்திற்கு நேர்முகப் பரீட்சைக்கு சமுகமளிக்கவும்.

யாழ் தலைமைக் காரியாலயம்
97, பருத்தித்துறை வீதி,
கல்வியங்காடு.


### பழைய மாணவர் கூட்டம்

யாழ்ப்பாணம், செப் 5

யாழ்ப்பாணக் கல்லூரிப் பழையமாணவர் சங்க வருடாந்தப் பொதுக் கூட்டம் இன்று சனிக்கிழமை காலை 8 30 மணியளவில் கல்லூரி மண்டபத்தில் நடைபெறும்.

கல்லூரி அதிபர் திரு. ராஜன் கதிர்காமர் தலைமை வகிப்பார். (உ-எ)

### கண்ணிவெடி..

(1ம் பக்கத் தொடர்ச்சி)

ஒன்று வெடித்ததில் 21 வயதான எஸ். பாக்கியராசா உயிரிழந்தார்.

கடந்த செவ்வாய் இச் சம்பவம் இடம்பெற்றது.

கன்னியா மடத்துக்கு அருகில் இத்தரைக் கண்ணிவெடி புதைக்கப் பட்டிருந்தது. இம்மடம் இலங்கை இராணுவத்தின் முகாமாகச் சமீப காலம்வரை இயங்கிவந்தது. (உ-எ-150)


வரியிறுப்பாளர் சங்க அங்குரார்ப்பண

## பொதுக் கூட்டம்

மேற்படி சங்கத்தின் ஆரம்பக் கூட்டம் இன்று [சனிக்கிழமை] பிற்பகல் 3-00 மணி அளவில் ஹோட்டல் 'ஞானம்ஸ்' இல் நடைபெற ஏற்பாடாகி உள்ளது. இங்கு வருமான வரி, விற்பனவுவரி செலுத்துவோர்களுடைய வியாபாரக் கட்டிடங்கள், மற்றும் தனிப்பட்ட சொத்துகள், வாகனங்கள் முதலியவற்றிற்கு ஏற்பட்ட பாதிப்புகள் பற்றி விரிவாக ஆராயப்பட உள்ளது. இச் சேதங்களுக்கு என்னென்ன வகையில் சட்ட மூலம் வரிச்சலுகைகளையும் பழைய வங்கிக் கடன் மீள்பரிசிலனை, வட்டியில்லாப் புதிய வங்கிக்கடன், இறக்குமதிவரிவிலக்குபோன்றன வற்றையும் நிவாரணமாக நிதி மந்திரியிடம் இருந்து பெறமுடியும் என்பது பற்றி ஆராயப்பட உள்ளது. எனவே பாதிப்பிற்குள்ளான சகல வரியிறுப்பாளர்களும் சமுகம் தந்து தங்கள் குறைகளை வெளியிடுமாறு வேண்டப்படுகின்றனர்.

(1661) ந. கருணை ஆனந்தன்
அமைப்பாளர்



## கெயின்ஸ்

நெல்லியடி.

**A/L 1988,89**

**கலை, வர்த்தகம் மட்டும்**

★ இன்று ஆரம்பம் ★
(சனி) பி. ப. 3 . 30

எமது ஆசிரியர் குழு:-

பொருளியல் :- குமாரவேல்
கணக்கியல் :- யோகராசா
அளவையியல் :- கேசவன்
வர்த்தகம் :- சூசைரட்ணம்
தமிழ் :- குழந்தை
இந்துநாகரிகம்:- அருள்நங்கை

**G. A. Q. 88**

வகுப்புகள் நடைபெறுகின்றன.

**G. A. Q. 89-க்கு**

★ விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. மிகவிரைவில் இதே ஆசிரியர் குழுவினருடன் பருத்தித்துறையில் எமது கிளை நிறுவனம்

★ மீண்டும் ஆரம்பமாகும் ★
என்பதை அறியத்தருகிறோம்.

தொடர்பு :-
நிர்வாகி, கெயின்ஸ்.


### முல்லைத்தீவு . .

(1ம் பக்கத் தொடர்ச்சி)

கச் சொன்னார்.

பறிக்கப்பட்ட காணிகள், வீடுகள் திரும்பப் பெற்றுக் கொடுக்கும் வரை மறியல் போராட்டம் நடத்தப்படும் என்று முல்லைத்தீவு பிரசைகள் குழுப் பிரமுகர் ஒருவர் தெரிவித்தார்.

**விஸ்தரிப்பு**

முல்லைத்தீவு மாவட்டத்தில் இடம் பெற்று வரும் சிங்களக் குடியேற்றங்கள் அடுத்த சில தினங்களில் நிறுத்தப்படாத பட்சத்தில் ஏனைய தமிழ் மாவட்டங்களின் கச்சேரிகளின் முன்னும் மறியற் போர் நடத்தப்பட வேண்டும் என்று முல்லைத்தீவு பிரசைகள் குழு, வடக்கு கிழக்கு மாகாண பிரசைகள் குழுக்களின் இணைப்புக் கமிட்டிக்கு வேண்டுகோள் விடுத்துள்ளது. இவ் வேண்டுகோளை

### ஈ. என். ரி.

(1ம் பக்கத் தொடர்ச்சி)

மேலும் ஐம்பது இராணுவச் சிப்பாய்களை வரவழைத்து அந்த வீட்டைச் சோதனை செய்ததில் கிரனேட்டுகளும், ஏ.கே. 47 ரகத் துப்பாக்கிகளும் கைப்பற்றினர் என்றும்—

இதன்பின்னர் வீட்டில் இருந்த மேற்படி குழுவினரை இந்திய இராணுவம் யாழ். கோட்டைக்கு ஏற்றிச் சென்றதாகவும் தெரிவிக்கப்பட்டது.

### மக்கள்---

(1ம் பக்கத் தொடர்ச்சி)

வப் பிரிவான மக்கள் விடுதலைப் படை கலைக் கப்பட்டது.

திரு கேதீஸ்வரன் இப்படி மேலும் தெரிவித்தார். (உ-எ)

ஆராய இணைப்புக் கமிட்டி விரைவில் கூடும் என்று தெரிகின்றது. (அ-எ)


**நீத்தார் பட்டியல்**

### தம்பிமுத்து துரைராசா

கொழும்பு Free Lanka Stores உரிமையாளர் தம்பிமுத்து துரைராசா 02-09-87 புதன்கிழமை காலமானர். இவர் காலஞ் சென்ற தம்பிமுத்து தம்பதிகளின் புதல்வரும், கனகம்மா, பொன்மணி, பூமணி, தேவி, பாக்கியலீலாவதி, தர்மகுலராஜசிங்கம், திருஞானசம்பந்தர்: Gowry Silks Emporium ஆகியோரின் சகோதரரும், தம்பையா, ஆறுமுகம், தனபாலசிங்கம், சிவசுப்பிரமணியம், புஸ்பராணி ஆகியோரின் மைத்துனரும், சத்தியேந்திராவின் பெரியப்பாவுமாவார். இறுதிக்கிரியைகள் 05-09-87 சனிக்கிழமை அளவெட்டி மகாத்மா வீதியிலுள்ள அன்னரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக முற்பகல் 10-00 மணியளவில் காங்கேசன் துறையிலுள்ள குடும்ப மயானத்திற்கு எடுத்துச்செல்லப் படும். உறவினர்கள், நண்பர்கள் இவ்வறிவித்தலை ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:-
த. திருஞானசம்பந்தர்



இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேஷன்ஸ் (பிறைவேற்) லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால், யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 292/2, இலக்கத்தில் உள்ள அவர்களது அச்சகத்தில் 05-09-1987ல் அச்சிட்டு வெளியிடப் பட்டது.
Printed and Published by New Uthavan Publications (Pvt) Ltd. 92/2 Navalar Road, Jaffna on Saturday September 05 1987.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org